பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

அறிமுகவிலை 20/=

புதுமை : 01 | 17 செம்ரெம்பர் 2016 | விதி : 14

# மந்திரிமனை: உண்மைகளும், ஆபத்துகளும்!



## உடுவிலில் மறைந்திருக்கும் ரகசியங்கள்



ஒளிப்படம்: சுரேன்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




படலை சாத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து சற்றேறக்குறைய நான்கு, ஐந்து அடிகள் தள்ளி வேலியின் இரும்புக் கம்பிகளைக் குறட்டினால் அறுத்து ஓலைகளை முன் தள்ளி, விழுத்தியவாறு 'சர சர' என்று இராணுவத்தினர் உள்நுழைந்தார்கள். இப்படியாகத்தான் ஒவ்வொரு தடவையும் செக்கிங் வரும் போது புதுப் புதுப் பாதைகளை அவர்கள் உருவாக்குவார்கள். வழியென்ற ஒன்றிருக்க இப்படி வேலிகளை அறுத்துக் கொண்டு எதற்கு வருகிறார்கள் என்பதில் முதலில் நிலாமதிக்கும் குழப்பம் இருந்தது. பின் நாட்களில் அவளது வீட்டிற்கு மேலும் மேலும் புதிய வழிகளை இந்திய இராணுவம் வேலிகளை வெட்டி உருவாக்கிய போது, வழிகளில் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுக் காத்திருக்கின்ற புலிகளுக்கு உச்சுக் காட்டுகின்ற வல்லரசு மூளை அதுவென்று அவளுக்குப் பிடிபட்டது.

அப்படி வந்தவர்கள் முதலில் வீடு முழுவதையும் சல்லடை போட்டார்கள். குசினிக்குள் எல்லாப் பாத்திரங்களையும் கவிழ்த்து வைத்தார்கள். கயிறுகளில் தொங்கிய, சுருட்டி வைத்த பாய்களைக் கீழே இறக்கி விரித்து வைத்தார்கள். சாமியறையில் சாமிப்படங்களின் பின்னால் ஏதேனும், கிடக்கலாம் என்ற அச்சத்தில் படங்களை கீழே வளர்த்தி வைத்தார்கள். (சாமியறைக்குள் நுழைவதற்கு முதல் சப்பாத்துக்களைக் கழட்டி வெளியில் வைத்தார்கள்) புகைக்கூடு, கக்கூசு என ஒன்றும் விடாமல் கிளறியவர்கள் குப்பை மேட்டுக்கு வந்தார்கள். அது ஒரு குன்றைப் போல உயர்ந்து நின்றது. அவர்களில் ஒருவன் பக்கத்திலேயே கிடந்த குப்பைவாரியை எடுத்து உள்ளே தள்ளி அப்படியும் இப்படியுமாகத் துளாவினான். ஆட்டுப் புழுக்கைகளை விரல்கள் தொடும் அளவிற்கு குப்பை வாரி உள்ளே போனது. அவன் முகத்தைச்சுழித்துக் கொண்டான். குப்பை வாரியை வெளியே இழுத்தெடுத்தான். அம்மாவை அருகாக வரும்படி அழைத்தான்.

"என்ன இது?"

அம்மா மிகப் பவ்வியமாக "குப்பை ஐயா" என்றாள். அவன் முகத்தில் சினத்தைக் காட்டினான்.

"தெரியும்.. ஏன் இவ்வளவு?"

"பசளைக்கு விற்கிறனாங்கள். தோட்டம் செய்யிறவை வாங்குவினம். வருசத்துக்கு ஐஞ்சாறு லோட் குடுப்பம்"

அவன் திடீரென்று "மண்ணெண்ணெய் இருக்கிறதா" என்று கேட்டான். அம்மா தலையாட்டினாள். போன த்டவை நிவாரணத்திற்குத் தந்ததில் பாவித்ததுபோக மிகுதி கலனோடு இருந்தது. கொண்டு கொடுத்த போது "நீங்கள் தந்த நிவாரணம்தான் ஐயா" என்று அம்மா சொல்லிப்பார்த்தாள். அவன் கலனோடு வாங்கிக் கொண்டான்.

இதற்கிடையில் மற்றைய சிப்பாய்கள் குப்பையைச் சுற்றி அடைத்திருந்த வேலியை வெட்டியெறிந்து ஓலைகளைக் குப்பையின் மீது போட்டார்கள். மண்ணெண்ணெய்யை ஓலையின் மீதும் சருகுக் குப்பையின் மீதும் தெளித்து ஊற்றினார்கள். ஒருவன் தனது லைட்டரில் நெருப்பு மூட்டிப் பற்ற வைத்த போது ஓலை 'குப்' என்று பற்றி, காய்ந்த சருகுகளில் மளமளவென்று படர்ந்து விளாசி எரியத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் சொக்கப்பானை எரிவதைப் போல பின் வளவில் நெருப்பு மேல் எழுந்தது. அண்டை வீடுகளில் இருந்து என்னவோ ஏதோ என்று பதறி வந்தவர்கள் இராணுவப் பச்சைகளைக் கண்டபிறகு பின்வாங்கியிருந்தார்கள். நெருப்பு வேலியில் பற்றி விடக்கூடும் என்று அம்மா அந்தரமாய் இருந்தாள். குப்பைக்குள் புலிகள் வெடிகுண்டுகளை மறைத்து வைத்திருந்தால், அவை வெடித்துச் சிதறும் என்பதால் இராணுவத்தினர் அப்பால் தள்ளி நகர்ந்து நிலங்களில் படுத்து நிலையெடுத்திருந்தனர். நெருப்புத்தணிந்து கொண்டு வந்தது. கடைசி வரைக்கும் சூடேறிய ஆட்டுப் புழுக்கைகள் தான் 'டப்பு டப்பு' என்று வெடித்தபடி இருந்தன.

மீளவும் அம்மா கூடு அடைத்து குப்பைகளைச் சேர்க்கத் தொடங்கியிருந்தாள். நிலாமதி அதனைவிடவும் பொருத்தமானதொரு இடத்தைத் தேடினாள். கிணற்றடிக்குப் பக்கத்தில் மழைக்கால இரவொன்றில் பாறுண்டு விழுந்த புளிய மரமொன்றிருந்தது. இன்னமும் மண்ணுக்குள் வேர்விட்டிருந்ததால் அது பட்டுப் போகாமல் பூத்தும் காய்த்தும் கொண்டிருந்தது. நின்று கொண்டே புளியம் பழங்களை பறிக்க முடிவது புதிய அனுபவமாக இருந்தது. நிலத்தில் சரிந்து படர்ந்திருந்த அதன் கிளைகளை விலத்தி விலத்தி உட்சென்று பழங்களைப் பறித்தார்கள். அப்பொழுது வெளித் தெரியாத அளவிற்கு மறைந்து போக முடிந்தது.

திலீபனின் அஞ்சலி நோட்டீசுகளை புளியமரத்தின் கிளைகளும் இலைகளும் மூடிய நிலத்தினுள் மறைத்து வைக்கலாம் என்று நிலாமதி முடிவு செய்தாள். பொலித்தீன் பையொன்றில் நோட்டீசுகளைப் போட்டாள். அதன் வாயில் 'வாள்பிளேற்' ஒன்றை வைத்து விளக்கு நெருப்பில் சூடுகாட்டி இறுக்கினாள். மண்வெட்டியோடு புளியமரத்தின் இலைகளை விலத்தி உட்சென்று கொஞ்ச நிலத்தை அகழ்ந்தெடுத்து நோட்டீஸ் பையை வைத்து மூடினாள். புளியஞ் சருகுகளை மேலே அள்ளிப் போட்டாள். அந்த இடத்தின் மேலே நெஞ்சளவில் தாழ்ந்திருந்த கிளையொன்றில் மண்வெட்டியால் அடையாளத்திற்காய் ஒரு வெட்டு வெட்டினாள். சற்றுத் தள்ளி நின்று பார்த்தபோது சருகுகளும் கஞ்சலும் ஈரமும் இருளுமாய் நிலம் பரந்திருந்தது. அது திருப்தியாயிருந்தது.

திலீபனின் நினைவு நாளுக்கு இன்னும் ஐந்து நாட்கள் இருந்த நிலையில் ஒரு நாள் வெற்றி வீட்டிற்கு வந்தான். அப்பொழுது நிலாமதியும் அம்மாவும் வீட்டிலிருந்தார்கள். வெற்றி பச்சையும் சிவப்புமாய் கரை வைத்த வேட்டி கட்டி பறாளாய் முருகன் ஆலயத் தொண்டர் சபை என எழுதியிருந்த மஞ்சள் நிறச் சால்வையொன்றை உடம்பினில் போர்த்திருந்தான். நெற்றியில் திருநீற்றையும் நெஞ்சில் சந்தனத்தையும் அப்பியிருந்தான்.

எங்கேனும் வீதிகளில் மறித்து, வெற்றி தன்னிடம் நோட்டீசுகளைக் கேட்கலாம் என நிலாமதி நினைத்திருந்தாள். அவன் வீட்டிருக்கு வருவான் என்பதை யோசித்திருக்கவில்லை. எழுந்து படலையடிக்குச் சென்று "வாங்கோ..." என்றாள். பிறகு வந்து அம்மாவின் காதருகே குனிந்து "அவர் இயக்கம்" என்றாள். அவளின் பின்னாலேயே வெற்றி "எப்பிடியம்மா சுகமாய் சுகமாய் இருக்கிறியளோ...?" என்றபடி வந்து விறாந்தைக் குந்தில் அமர்ந்து கொண்டான். "பறாளாய்தேருக்கு எக்கச்சக்க சனம்... எள் விழ இடமில்லை" என்றான். அம்மா இன்னும் இயல்பிற்கு வந்திருக்கவில்லை. வெற்றியைப் பார்த்தபடி இருந்தாள். ஒரு இயக்கப் பெடியனை அவள் இந்தக் கோலத்தில் எதிர்பார்த்திருக்கவில்லை. குண்டுகளையும் துப்பாக்கிகளையும் உடம்பு முழுவதும் சுற்றியவர்களாக அவர்களை அவள் கற்பனை செய்திருந்தாள். "நான் தந்ததுகளை எடுக்கலாமோ?" என்று வெற்றி கேட்டபோது தான் என்ன என்பதைப் போல அம்மா நிலாமதியை நோக்கினாள்.

"ஒண்டுமில்லையம்மா... கொஞ்ச நோட்டீசுகள்..." என்று நிலாமதி சொன்னாள். பிறகு வெற்றியை அழைத்துக் கொண்டு புளிய மரத்துக்குப் போனாள். "இதில நில்லுங்கோ" என்றுவிட்டு உள்ளே நுழைந்த பிறகு வெற்றியும் உள்ளே வந்தான். மண் வெட்டியால் நிலத்தைக் கொத்திய போது மூச்சிரைத்தது. மார்புகள் ஏறி இறங்கின. அதைக் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று தோன்றிய போது உதட்டோரம் சிரிப்பு படர்ந்து. பொலித்தீன் பையை எடுத்து படிந்திருந்த ஈரலிப்பு மண்ணைத் துடைத்து விட்டு வெற்றியிடம் கொடுத்தாள். அவன் புளிய மரத்தடி நிலத்தை நோட்டம் விட்டான். பிறகு "இதுவொரு சோக்கான இடம்" என்றான்.

வெளியே வந்த போது அம்மா நின்றாள். அவள் சற்றுப் பயந்திருப்பது போல இருந்தது. வெற்றி அம்மாவிற்கு அருகில் போனான். "உங்கடை பயங்கள் எனக்கு விளங்குது. யோசிக்காதேயுங்கோ. மிஞ்சி மிஞ்சிப் போனால் இங்காலைப் பக்கம் என்னத்துக்கு வருவம்... ஒரு நேரச் சோத்துக்கு வருவம்... தரமாட்டியளோ"

அம்மா சட்டென்று ஏதோ நினைத்து வந்தவளாக "தம்பி சாப்பிட்டுட்டீரோ..?" என்றாள்.

(வலிகள் இன்னும்...)

## திறந்த வெளிச் சிறை

காற்றிசையில் இருந்தும்
காற்றில் அள்ளுண்டு வந்து
மின்னி முழங்கி கருமேகங்கள்
என் தேசத்தில்
தன் மூர்க்கம் தீருமட்டும்
ஆடி முடித்தது.

எச்சங்கள் கூட இல்லாமல்
அச்சத்தில் உறையும் படி ஆடிப்
போனது.

சுற்றி அடித்த புயல்
சுற்றி இருந்தவர் செத்து வீழ்ந்தனர்
குறுகிய எல்லைக்குள் - நாம்
குந்திக் கொண்டோம்.

வீழ்ந்தவர் மேனியில் சாய்ந்தோம்
உடலத்தில் மிதித்து ஓடினோம்.

திரும்பி நின்றோம்
கடல் தன் கைகளை விரித்து
நின்றது.



காற்றோடு அள்ளுண்டு வீசப்படும்
மீனினமாய் எங்கும் வீழ்ந்தோம்

கை அற்று, கால் அற்று
புலன் அழிந்து
உதட்டில் மட்டும் புன்னகைத்து
உன் முன் நின்றோம்.

பால் வார்த்த நிலவு
பற்றி எரித்தது தேசத்தை

குருதியில் குளித்து அடங்கிற்று பூமி
பார்த்திருந்த மேகங்கள் பாரில்
கொட்டித் தீர்த்தன கண்ணீரை

விழிகளில் நீர் தேக்க
வழியின்றி கம்பிக்குள்
அடைபட்டோம்.

கம்பிக்குள்ளிருந்து விடுபட்டோம்
மீண்டும் நாம்
உரிமை மறுக்கப் பட்டவர்களாய்
திறந்த வெளிச் சிறைக்குள்.

எம். சிவா

கரவெட்டி மேற்கு.

சிக்மலிங்கம் றெஜினோல்ட்




# பாடுகளைச் சுமக்கும்... மாங்குளம்

மாங்குளத்துக்கு நான் முதன் முதலில் போயிருந்த போது அங்கே நான்கு கடைகள் மட்டுமே இருந்தன. அதில் இரண்டு சாப்பாட்டுக் கடைகள். இரண்டும் மிகச் சிறியவை. புகைபடிந்து, பழுப்பு நிறத்தில் அவற்றின் முகப்பிருக்கும். அடுக்களைக்கும் முகப் புக்கும் அதிக வேறுபாடில்லை என்ற மாதிரியான ஒரு தோற்றம். அதிலும் பொழுதிறங்கினால், மினுங்கிக் கொண்டிருக்கும் அரிக்கன் லாம்பின் வெளிச்சத்தில் எல்லாமே புகைபடிந்து மங்கிய, இருள் மயமாகவிருக்கும்.

இந்தக் கடைகளில் பெரும்பாலும் வண்டில் காரர்களும், லொறிக்காரர்களும் தான் வாடிக்கையாளர்கள். வண்டில் காரர்கள் அக்கம் பக்கத்துக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். பகலில் விறகு ஏற்றுவார்கள். விளைச்சல் காலத்தில் நெல் மூடைகளை வீதிக்குக் கொண்டு வந்து லொறிகளுக்காக அடுக்கி விட்டுக் காவலிருப்பார்கள். மிளகாய்த்தோட்டங்களில் இருந்து செத்தல் மிளகாயை ஏற்றி வந்து லொறிகளுக்காகக் காவல் இருக்கும் வண்டில்களும் உண்டு. வண்டில் மாடுகளை அங்கே உள்ள மரங்களின் கீழே அவிழ்த்துக் கட்டியிருப்பார்கள்.

இரவுக் கடையில் பெண்களைப் பார்க்கவே முடியாது. பகலிலேயே மிகக் குறைவாகத்தான் பெண்களைப் பார்க்க முடியும். முல்லைத்தீவுக்குப் போகிறவர்கள் அல்லது மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் உள்ள ஒலுமடு, கரிபட்டமுறிப்பு, மணவாளன்பட்டமுறிப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை போன்ற சிறிய கிராமங்களுக்குப் போகிறவர்களாக இருக்கும். இல்லையென்றால், மல்லாவிக்கோ, பாண்டியன்குளத்துக்கோ, துணுக்காய்க்கோ போகிறவர்களாக இருக்கும். ஆண்களோ பெண்களோ, யாராக இருந்தாலும் எல்லோருடைய பயணங்களும் பகல் நான்கு மணியோடு முடிந்து விடும். வாகனங்களில் என்றால், ஐந்தரை ஆறுமணி வரை போகலாம்.

அதற்கப்பால் போகிற வாகனங்கள் என்றால் ஏதோ அவசரம், அவசியம் என்றால் மட்டும்தான். அதுக்குப்பிறகு யானைகளின் ஆட்சி.

மழைக்காலங்களில் என்றால் நான்கு மணிக்கே வீதியில் ஏறிவிடும் யானைக் கூட்டம். இதற்காக தனியாக யாரும் பயணங்களை வைத்துக் கொள்வதில்லை. அடர் காட்டின் நடுவே, ஒரு மெல்லிய கறுப்புக் கோடாக வீதி. அந்த வீதியில் யானை நின்றாலே தெரியாது. கிட்டப் போய், முட்டுகிற மாதிரித்தான் நிற்க வேண்டியிருக்கும். இதற்கிடையில் அலியன் யானை ஊட்டுகிற பீதி வேறு. பல சந்தர்ப்பங்களில் யானை நிற்கிறதோ இல்லையோ, யானையைப் பற்றிய கதைகள் சந்திகளிலும் கடைகளிலும் வாகனங்களிலும் ஏன் பஸ்ஸிலும் உலாத்திக் கொண்டிருக்கும்.

ஆகவே, கொழும்பிலிருந்தோ யாழ்ப் பாணத்திலிருந்தோ பிந்தி வந்திறங்குகிறவர்கள், மாங்குளத்திலேயே அன்றிரவுப் பொழுதைக் கழித்துவிட்டுக் காலையில் தான் பயணத்தைத் தொடங்க வேணும். கடைகளில் ஒன்றில்தான் படுக்கை. படுக்கை சீரில்லா விட்டாலும் சாப்பாடு அந்த மாதிரி. மாங்குளம் என்றாலே அப்படித்தான் அந்த நாளில். அது 1970 களின் பிற்பகுதி. மீன், மரக்கறி எல்லாம் பெரிய அளவில் கிடையாது. இறைச்சி தான். இறைச்சியென்றால், மான், மரை, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, முயல், உடும்பு, உக்குளான் என்று விதவிதமான இறைச்சி. அப்போது வேட்டைக்குப் பஞ்சமில்லை. இறைச்சிக்கும் பஞ்சமில்லை. காட்டு விலங்குகளைக் கண்டபடி சுடக்கூடாது என்று அரசாங்கத்தின் தடை உத்தரவு இருந்தாலும் அதையெல்லாம் யாரும் பெரிதாகப் பொருட்படுத்துவது கிடையாது.

சில வேளையில் மீன்கறி கிடைக்கும். குளத்து மீன்தான். கறுத்துத் திரண்டிருக்கும் மீனை துடிக்கத் துடிக்கக் கொண்டு வருவார்கள். கேட்டபோது அதுதான் யப்பான் என்றனர். எங்கள் ஊர்க்குளத்திலும் யப்பான் மீன் உண்டு. ஆனால், அது சிறியது. அதனால்தான் அடையாளம் தெரியாமல் கேட்டேன். பெரிய மீனில் குழம்பு வைத்து, பொரித்திருப்பார்கள். யாழ்ப்பாணத்திலே கிடைக்காத சொத்து அது. நானும் மாமாவும் வயிறாரச் சாப்பிட்டு விட்டு இரவில் அங்கே படுத்துறங்கியிருக்கிறோம்.


இப்படி என்னதான் விதவிதமான இறைச்சி இருந்தாலும், அங்கே மான் இறைச்சி என்று சொல்லி, தூங்குமான் இறைச்சியையும் விற்கிறார்கள் என்றொரு கதை உலாவியது. தூங்குமான் என்றால் குரங்கு. குரங்கிறைச்சியையும் அங்கே சமைத்து விற்கிறார்கள் என்று எப்படியோ ஒரு கதை உருவாகி, எங்கும் பரவியிருந்தது. ஆனால், இந்தக் கதையைக் கேட்டுக்கொண்டே அவரவர் தங்கள் பாட்டுக்கு மூன்று நான்கு சுற்று கறிவாங்கிச் சாப்பிட்டுக்கொள்வார்கள். அப்படிச் சாப்பிட்டவர்களே, தாங்கள் தூங்குமான் இறைச்சியைச் சாப்பிட்டிட்டு வருவதாக கதை வேறு விடுவார்கள். ஆனால், அங்கே அப்படி குரங்கு இறைச்சியைச் சமைத்ததில்லை. அந்த அளவுக்கு ஏனைய இறைச்சி அங்கே வரும். அதையெல்லாம் பகிரங்கமாகவே விற்பார்கள்.

இப்படியிருந்த மாங்குளத்தில் பொலிஸ் நிலையம் வந்தது. பொலிஸ் நிலையம் வந்தால், அந்தச் சூழலில் பொதுவாகவே ஒரு இறுக்கத்தன்மை வந்து விடும். மாங்குளத்திலும் அப்படி ஒரு இறுக்கம் வந்தது. ஒலுமடுவில் அப்போது யாரோ பிறத்தியார் வந்து நிற்கிறதாக ஊர் ஆட்கள் சொன்னார்கள். யாரோ தங்கு வேட்டைக்காரராக இருக்கும் என்று யாரோ சொன்னார்கள். இந்தக் கதையும் அப்பிடியே அடங்கிப் போச்சு. என்றாலும் புலிமச்சிநாதகுளத்தில் யாரோ ஐஞ்சாறு பெடியள் நிற்கிறதாக ரத்தினத்துக்குத் தெரிந்துவிட்டது. அந்த நாளில் பெரிய வேட்டைக்காரன் எனப் பேரெடுத்த ஆள், ரத்தினம். புலியை நேரெதிரில சந்திச்சு மல்லுக்கட்டிய ஆள் என்ற பேர், இரத்தினத்தோடு ஒட்டி, புலிரத்தினம் என்றாகியிருந்தது. புலி ரத்தினத்துக்குக் காட்டில் ஒரு சிறு அசுமாத்தம் தெரிஞ்சால் போதும். அது என்ன என்று ஆராய்ந்து அடையாளம் கண்டு பிடிச்சிடுவான். ஆனால், அப்பிடி அடையாளம் தெரிந்தாலும் அவன் யாரிடமும் அதைப்பற்றிச் சொல்லிக் கொள்ளமாட்டான். எதைக் கண்டால் என்ன, என்னதான் நடந்தாலுமென்ன, இரத்தினத்தின் கிணறு ஆழம் காண முடியாதது.



அந்த இரத்தினத்தை ஒரு நாள் அந்த ஐந்தாறு பெடியளும் சுற்றி வளைச்சிட்டாங்கள். புலிக்கே விளையாட்டுக் காட்டிய புலி இரத்தினத்துக்கு, இப்ப என்ன செய்யிறதென்றே தெரியேல்ல. ஆனால், ஆறு மாதத்துக்குப் பிறகுதான் தெரிந்தது, அப்ப தன்னைச் சுற்றி வளைச்சது புலிகள்தான் என்று. அந்த நாட்களில் விடுதலைப் புலிகள் புலிமச்சிநாதகுளத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். வேட்டைக்குச் சென்ற இரத்தினத்தை எதிர்கொண்ட புலிகள், காட்டில் வளைத்துப் பிடித்துக் கொண்டனர். என்றாலும் ஒரு மாதிரிக் கதையை விட்டு, இரத்தினத்தைச் சமாளித்துவிட்டுத் தப்பிக்கொண்டனர். அது தங்களை அடையாளம் காட்டிக் கொள்ள முடியாத தலைமறைவுக்காலம். பிறகு இரத்தினம் புலிகளின் ஆளாக, காட்டில் வழிகாட்டியானார்.

இதற்குப்பிறகு மாங்குளம் சந்தி கொஞ்சம் பொலிவோடு சிரித்தது. ஆனால் அப்பொழுதுதான் அங்கிருந்த, பொலிஸ் நிலையம் மெல்ல மெல்ல இராணுவமுகாமாகியது. பொலிஸ் நிலையங்கள் பெரும்பாலும் இராணுவ முகாமாகிய காலம் அது. அதோடு மாங்குளம் சந்தியும் மெல்ல மெல்லப் படுக்கத் தொடங்கியது. சந்தியில் தலைக் கறுப்புகளைக் காண்பதே அரிதானது. இரவில் ஒருத்தரும் தப்பித்தவறியும் சந்திக்கு வருவதில்லை.


லெப்.கேணல்.போர்க்

கடைகள் வேளையோடு மூடப்பட்டன. சிலநாட்களில் கடைகள் திறக்கப் படுவதேயில்லை. மான் இறைச்சியும் இல்லை. தூங்குமான் இறைச்சிக் கதைகளும் இல்லாமல் போயிற்று.

சுற்றிவரக் காடும் சிறு குளங்களும் வயல் வெளியும் உள்ள அந்தச் சிறிய சந்தி, முல்லைத்தீவுக்கும் மல்லாவி துணுக்காய் பாண்டியன்குளத்துக்குமான ஒரு மையமே மாங்குளம். அதனால்தான் அங்கே பொலிசும் இராணுவமும் மையம் கொண்டன. இந்திய இராணுவக்காலத்தில் மாங்குளத்தில் பெரிய முகாமை அமைத்திருந்தார்கள். இந்திய அமைதிப் படை இலங்கையை விட்டுப்போக, மாங்குளத்தைப் பெரியதொரு படை முகாமாகப் பலப்படுத்தியது படைத் தரப்பு. மாங்குளம் சந்திக்குத் தெற்கே, ஏ - 09 வீதிக்கு மேற்குப்பக்கமாக மாங் குளம் முல்லைத்தீவு வீதிக்கு தெற்கில். அது 1990 ஆம் ஆண்டு.

அப்பொழுது புலிகள் யாழ்ப்பாணக் கோட்டையைத் தாக்கி வெற்றியீட்டி, பெரிய மகிழ்ச்சியிலும் உற்சாகத்திலும் இருந்தனர். யாழ்ப்பாணத்துப் புலிகள் வெற்றிக்கொடியைப் பறக்க விட்டால், நாமென்ன குறைந்தவர்களா என்று கொக்காவில் இராணுவ முகாமைத் தாக்கியழித்தது வன்னிப்படையணி. கொக்காவில் வெற்றி மாங்குளத்தை நோக்கி நகர்த்தியது புலிகளை. ஆனால், மாங்குளம் படைமுகாம் எதிர்பார்த்த மாதிரி, இலகுவானதாக இருக்கவில்லை.

(20 ஆம் பக்கம் பார்க்க...)



# மந்திரிமனை: உண்மைகளும், ஆபத்துகளும்!

யதார்த்தன்

யாழ்ப்பாணத்தை அடையாளப் படுத்தச் சொன்னால் ஒரு சராசரி யாழ்ப்பாணத்துப் பிரசை பொது நூலகம், நல்லூர் இவற்றிற்கு அடுத்ததாக குறிப்பிடக் கூடியது மந்திரி மனையைத்தான். மந்திரி மனை, இந்த பெயர் ஒரு தொன்மமாக மாறிக் கொண்டிருக்கின்றது. மந்திரி மனையை மரபுரிமைச்சின்னமாகவும், தொல்லியல் சின்னமாகவும் கடந்த காலத்தின் அடையாளமாகவும் கருத்துருவாக்கம் செய்கின்றனர். தொடர்ச்சியாக பேரினச்சூழல் தமிழர் நிலங்களில் உள்ள தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களை வெளிப்படையாகவும் நுட்பமாகவும் புறக்கணிக்கவும் அழிக்கவும் முனைந்தபடியிருக்கின்றது. தவிர நேரடியான மனித அச்சுறுத்தல்களும், இயற்கை அச்சுறுத்தல்களும் மந்திரிமனையை சூழ்ந்து கொள்ளத் தொடங்கியுள்ளன. இங்கே அப்பிரச்சினைகளை பார்க்க முதல் மந்திரிமனை பற்றிய சிறிய அறிமுகத்தையும் தெளிவையும் உண்டு பண்ணுதல் வேண்டும்.

## தொல்லியல் மரபுச்சின்னம்

மந்திரி மனையின் முக்கியத்துவம் அது அமைந்துள்ள சூழலில் இருந்து ஆரம்பமாகின்றது. நல்லூர் இராசதானி இருந்ததாகவும், பண்டைய நிர்வாகப் பகுதிகளும், அதுசார்ந்த பிரதானிகளும் இருந்ததாகவும் வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடும் நல்லூர் பிரதேசத்தில் இது அமைந்திருக்கின்றது. இதன் அருகில் சோழர்களால் கட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படும் சட்டநாதர் கோவிலும், நல்லூர் இராசதானிக்கு சொந்தமானதாக கூறப்படும் யமுனா ஏரிக்கு அண்மையாகவும், சங்கிலித்தோப்பு என்று அடையாளம் செய்யப்படும் இடத்திற்கு மிக நெருக்கமாகவும் இருப்பது, இதனுடைய முக்கியத்துவத்தை தொடக்கி வைக்கின்றது. அதாவது யாழ்ப்பாணத்தின் வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வுகள் இடம் பெற்றதாகச் சொல்லப்படும் பிரதேசத்தில் அமைந்திருக்கிறது மந்திரிமனை.

இந்த மந்திரிமனையின் நடுப்பகுதி அல்லது உட்பகுதி கி.பி 15 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகளை முன்வைக்கின்றனர். இவ்வமைப்பு "பரநிருபசிங்கன்" என்ற பிரதானி அல்லது நிலச்சுவாந்தாரினால் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆயினும் இதன் தற்போதைய வடிவம் என்பது 1890 இல் எ.எஸ். தம்பையாப் பிள்ளை என்பவரால் கட்டப்பட்டதற்கான கல்வெட்டு சான்றுகளை இன்றும் காணக் கூடியதாக இருக்கின்றது.

## கலையம்சங்களின் நிறைவுத்தன்மை

மந்திரிமனையின் அமைப்பானது தனியான ஒன்றாக அல்லாமல் பல கட்டட கலையம்சங்களைச் சேர்த்த கட்டடமாக இருக்கின்றது. குறிப்பாக ஒல்லாந்தர் கலைப்பாணி, திராவிட கலைப்பாணி, இஸ்லாமிய கலைப்பாணி என்பவற்றின் கலவையாக மந்திரிமனை கட்டப்பட்டிருகின்றது. இதனைக் கட்டப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருள்களான செங்கட்டி, சுண்ணாம்புச் சாந்து, மரங்கள், ஓடுகள் என்பவைகளையும், கட்டடத்தின் அமைப்பையும், அதன் முன்புறத்தில் செய்யப்பட்டுள்ள அலங்கார வேலைகளையும் கருத்தில் கொண்டு, மந்திரிமனை ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டதாக இருக்கலாம் என யாழ்ப்பாணச் சரித்திரவியலாளர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனாலும், இக் கட்டடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள சில கூறுகள், குறிப்பாக அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்தாலான தூண்கள், போதிகைகள் போன்றவை யாழ்ப்பாண அரசர் காலத்துக்கு உரியவை என்ற கருத்தும் உண்டு. போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின், தலைநகரத்தை நல்லூரிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு மாற்றினாலும், நல்லூரில் எஞ்சியிருந்த அரச கட்டடங்களும், நிலங்களும் போத்துக்கீசரின் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. பின்னர் வந்த ஒல்லாந்தரும் இவ்வாறே பயன்படுத்தினர். பின்னவர்கள் மேற்சொன்ன நிலங்களிலே புதிய கட்டடங்களைக் கட்டிய ஆதாரங்களும் உண்டு. "மந்திரிமனை" என அழைக்கப்படும் இந்தக் கட்டடமும் இவ்வாறே புதிதாக அமைக்கப்பட்ட அல்லது பெருமளவுக்குத் திருத்தியமைக்கப்பட்ட கட்டடமாகவே இருக்கவேண்டும் என்பதும் இவர்களது கருத்து.

மந்திரிமனையில் இன்று தூர்ந்த நிலையில் நிலவறை, சுரங்கம் என்பன காணப்படுகின்றன. சாதாரண குடி மக்களின் வீடுகளோ, கட்டங்களோ இத்தகைய அமைப்புகளுடன் இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. இது யாழ்ப்பாணத்தின் பொருளாதார, சமூகச் செல்வாக்கு மிக்க மேட்டுகுடியினரது கட்டடமாகவே இருந்திருக்க வாய்ப்புகள் அதிகம்.

எனினும், மந்திரிமனை கடந்த காலத்தை பேசும் ஒரு தொல்லியல் மரபுரிமைச்சின்னம் என்பதில் ஐயம் இல்லை. கட்டடக் கலை, உருவாக்கத்திலும் இதுவோர் அழகியல் தன்மை வாய்ந்த் கலையம்சங்கள் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

## மக்களும் மந்திரி மனையும்

நம்முடைய சமூகம் கொண்டிருக்கின்ற மிகப்பெரும் இடைவெளி நமது கல்விச் சமூகத்திற்கும் வெகுசன மக்களிற்கும் இடையிலான அதிகப்படியான விரிசலால் ஏற்பட்டதாகும். குறிப்பாக சில துறைகள் சார்ந்து கண்டறியப்படும், விவாதிக்கப்படும், விடயங்கள், பிரச்சினைகள் என்பன மக்கள் மயப்படுத்தப்படுவதோ, மக்களுக்கு அது பற்றி தெரிவிக்கப்படுவதோ குறைவாகவே இருக்கின்றது.

மரபுரிமைகள், தொல்லியல் சான்றுகள் என்பவைபற்றி அறியப்பட வேண்டியதும், அவை பற்றிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதும் புத்தி ஜீவிகள், மட்டுமல்ல சாதாரண அடித்தட்டு மக்களும் அறிந்திருக்க வேண்டும். மரபுரிமைசார் பொருட்கள் மக்கள் மயமாக்கப்படும் போதே அவை இறுக்கமாகப் பாதுகாக்கப்படும். எனவே எம்முடைய தொன்மை, மரபுகளை சரியான முறையில் மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இது மந்திரிமனை விடயத்துக்கும் பொருந்தும்.

மந்திரி மனை என்பதை தங்களுடைய நிலத்தின் அடையாளமாக மட்டும் விளங்கி வைத்திருக்கும் மக்கள் அது பற்றிய முழுமையான தகவலோ விழிப்புணர்வோ இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும் தூங்கிப்போகும் அரசியல்வாதிகளை சுற்றிச்சுற்றி படமெடுக்கும் ஊடகங்கள், மக்களின் மரபுகளை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில்லை. இதன் காரணமாகவே தனிநபர்கள் கூட மந்திரிமனை போன்ற மரபுச் சின்னங்களுக்கு உரிமை கொண்டாடி அதை அபகரிக்கப் பார்க்கின்றனர். கடந்த வருடங்களில் மந்திரிமனை மீது சில நபர்கள், தென்னிலங்கையில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் உரிமை கொண்டாடிய அபாயத்தை ஒரு சிறு செய்தி நறுக்காக கடந்து போயின யாழ்ப்பாணத்து ஊடகங்கள். சில அந்த ஊடகங்கள் அச்சுறுத்தல்களை வெளியிடவே இல்லை. அதனைப்போல் மந்திரி மனைக்கு நெருக்கமாக, (கடந்த அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்கள் என்று கருதப்படும்) சிலர் வாகனங்கள் நிறுத்தும் ஒரு புதிய இடத்தை உருவாக்கி கொண்டு மந்திரிமனைக்கு அச்சுறுத்தலை உண்டு பண்ணும் நடவடிக்கைகளை தொடங்கினர். இன்று வரை அந்த நடவடிக்கைக்கு எதிராக ஒருவிரல் நுனி கூட யாராலும் அசைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## அச்சுறுத்தல்களும், பராமரிப்பும்

மந்திரிமனையை ஒரு தேசிய தொல்லியல் சின்னமாக அங்கீகரித்த போதும், அது சரியான பாதுகாப்பிற்கோ பராமரிப்பிற்கோ உட்படுத்தப்படவில்லை. நெதர்லாந்து அரசு தன்னுடைய படைகள் 1800 களில் கட்டிய கோட்டையை புனரமைக்க இலங்கை அரசுக்கு காசு கொடுத்து வேலைகள் நடக்கின்றன. தெற்கில் இருந்து சிங்கள பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு தேசிய தொல்லியல் சின்னங்களும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டதைப் போல கண்ணும் கருத்துமாகப் பராமரிக்கப்படுகின்றன. ஆனால் தமிழர் பிராந்தியத்தில் வெளிப்படையாகவே தமிழர்சார் அடையாளங்கள் புறக்கணிக்கப்படவும் அச்சுறுத்தப்படவும் செய்கின்றன.

இங்கேயும் வடமாகாண சபை என்னும் ஒரு குறுநில மன்னர் கூட்டம் இருக்கின்றது. அற்ப அரசியல் அதிகாரங்களும், சொகுசு வாகனங்களும் தரப்படவில்லை என்று கூச்சலிடும் அந்தக் குறுநில மன்னர் கூட்டம், ஒரு வார்த்தை கூட தொல்லியல் சின்னங்கள் பற்றியோ அவற்றை பராமரிப்பது பற்றியும் சபையில் பேசியது கூட இல்லை. வருகின்ற நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்று கூட தெரியாமல் திரும்பிப் போகவிடும் 'அமுல் பேபி' கூட்டத்தை அதிகார கதிரைகளுக்கு அனுப்பிய மக்கள் இது தொடர்பில் வெட்கப்பட்டுத்தான் ஆக வேண்டும். மந்திரிமனை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. மந்திரி மனைக்குப் பக்கத்திலேயே வடமாகாண சபையின் அவைத்தலைவரின் வீடும் அமைந்திருப்பது போன்ற அபத்தங்களின் மத்தியில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக் கிறோம். பேரினச்சூழலினால் மட்டுமல்ல நம்மினச் சூழலில் இருக்கும் மோசமான அதிகார பீடங்களின் முதுகெலும்பற்ற தனங்களாலும் நம்முடைய மரபும் இருப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

தொல்லியல் திணைக்களமும் மூளை எடுத்தகற்றப்பட்ட மனிதர்களால் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இயற்கையின் பாதிப்புகளாலும் தொடர்ச்சியாக மந்திரிமனை அச்சுறுத்தலுக்குள்ளேயே இருந்துவருகின்றது. இலங்கை அரசு வருமானம் ஈட்டும் துறையான சுற்றுலாத் துறையை தெற்கில் வலுவூட்டும் அளவிற்கு வடக்கில் வலுவூட்டுவதில்லை. குறிப்பாக மந்திரிமனை போன்ற முக்கிய சுற்றுலாத்தலங்கள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

மரபின் அழிப்பை இனத்தின் அழிப்பாகவே பார்க்க வேண்டும். மந்திரிமனை போன்றன அழகியலும் வரலாறும் ஒன்று சேர்ந்த சின்னங்கள். மக்கள் அதனை தங்களுடைய அடையாளமாக நம்ப வேண்டும். நம்முடைய அடையாளங்களைப் பாதுகாப்பது நமது கடமை என்பதை இதயத்தில் இருந்து உணர வேண்டும். நம்முடைய பண்பாடும் கலையும், வரலாறும் வெறும் புத்தகங்களில் மட்டுமில்லாமல் கண்முன்னே உயிருடன் வாழ்வதை நாங்கள் தரிசிக்க வேண்டும்.

புதுவிதி
PUTHU VITHI

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com
T.P: 021 493 7777

## வெற்றி பெற்ற வெகுஜனப் போராட்டம்

தினச் செய்திகளில் அதிகம் சூடு பறக்காத போராட்டங்களில் ஒன்று தான் சம்பூர் அனல் மின் நிலையப் பிரச்சினை. அச்சு ஊடகங்களில் நான்காம், ஐந்தாம் பக்க செய்திகளாக, பத்தோடு பதினொன்றாக சம்பூர் அனல் மின் நிலையப் பிரச்சினையைக் கடந்து விட்டோம். ஆனால் அந்த மக்களின் போராட்டம் இப்போது வெற்றி பெற்றுள்ளது.

அவர்கள் வீதி, வீதியாக நின்று பதாகைகளை பிடித்து வெயிலில் தொண்டை வறள வறள கத்தியமைக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. இவர்களின் வெற்றியில் "பசுமை திருகோணமலை" அமைப்பின் பங்களிப்பு மிக முக்கியமானது. மதிக்கத் தக்கது. அவர்களுக்கு புது விதியின் பாராட்டுக்கள்.

சரி, இதற்குப் பின்னரான இந்த மக்களின் ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் பொதுமக்களை திரட்டி அவர்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க ஜனநாயக ரீதியிலான போராட்ட அமைப்புக்கள் வலுப்பெற வேண்டும். அதற்கு இத்தகைய வெற்றிகள் மக்களை வசியம் செய்யும் சக்தி மிக்கவை. வெல்லப்படும் பொழுது மக்கள் திரளத் தொடங்குவர். நம்பத் தொடங்குவர். ஆகவே இதனை சரியான வழிகளில் பயன்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை குறித்த அமைப்புக்களுக்கும் தனிமனிதர்களுக்கும் உண்டு.


இந்த வழிகளை பிற பிரதேசங்களும் ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த ஜனநாயகக் கட்டமைப்புக்களையும் அற வழிப் போராட்டங்களையும் மக்கள் பின்தொடர வேண்டும்.

மக்களிடமிருந்து தான் மக்களின் பிரச்சினைகள் வெளியே கேட்க வைக்கப்படும். மக்களிடமிருந்து தான் போராட்டங்கள் வெடிக்கும். மக்களிடமிருந்து தான் மக்கள் தலைவர்கள் தோன்றுவார்கள். இந்த வகையான போக்குகள் சரியானவர்களை அடையாளம் காட்டும். சம்பூர் வெற்றி தந்த ஜனநாயகப் பாதையை சரியாக இனங்கண்டு எங்கள் உரிமைப் பயணத்தைத் தொடர்வோம்.

●●●

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

## புதுவிதி வெற்றியாளர்களுக்கு...!



**புதுவிதி** வார இதழில் நடத்தப்பட்ட சொல்லுங்கள் வெல்லுங்கள், மரபுரிமைப் போட்டி என்பவற்றில் வெற்றியீட்டியோருக்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளன. எனவே வெற்றியாளர்கள் எதிர்வரும் **20** ஆம் திகதி தொடக்கம் **22** ஆம் திகதி வரை **021 493 7777** எனும் தொலைபேசி இலக்கத்தோடு காலை **10.00** மணி முதல் பிற்பகல் **3.00** மணி வரை தொடர்பினை மேற்கொண்டு தங்கள் முகவரிகளை உறுதிப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறோம்.

(ஆ-ர்)

○ குமரன்



# எழுக தமிழும் எதிர்ப் புரட்சியும்


தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆயுத வடிவம் மௌனிக்கப்பட்ட பின்னர் மக்கள் தமது பலத்தை தமது ஒற்றுமையை தமது கோரிக்கையின் வலிமையை மறுபடியும் வெளிப்படுத்த வேண்டிய தேவை பரவலாக உணரப்படுகிறது. எங்கும் எந்தப் போராட்டங்களிலும் பாதிக்கப்பட்ட மக்களைத் தவிர பொது மக்கள் மற்றவர்களுக்கான நீதிக்காக ஒன்று திரளுவது காணாமலே போய்விட்டது. அதனை இன்று மீட்டு எடுக்க வேண்டியது அவசியம். ஆனால் இந்த இடைவெளியை கையில் எடுத்திருக்கும் தரப்புக்களைப் பற்றியும் மக்கள் கவனமாக இருக்க வேண்டும். தங்களுக்குள்ளிருந்து, கருத்துக்களில் தெளிவோடும் கடந்த காலம் பற்றிய விமர்சனத்தோடும் புதிய நம்பிக்கைகளை விதைப்பவர்களோடும் மக்கள் கைகோர்ப்பது என்பது வரவேற்கக் கூடியது. ஆனால் கடந்த காலங்களில் நிகழ்ந்த பல முக்கிய தருணங்களில் இப்பொழுதைய இந்த பழைய புரட்சியாளர்கள் என்ன செய்தார்கள் இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### "எழுக தமிழ்"

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பின் த. சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் மக்கள் பேரவையின் இதர அங்கம் வகிக்கும் உறுப்பினர்களும் இணைந்து "எழுக தமிழ்" என்ற பேரணியை வரும் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒழுங்கமைத்திருக்கிறார்கள். இதன் போது தமிழர் தேசத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளின் அங்கங்களான பௌத்த சிங்களக்குடியேற்றம், தமிழ் மக்களின் மீள் குடியமர்வுக்கு முட்டுக்கட்டை போடப்படுதல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமை, காணாமல் போனவர்கள் விடயத்தில் காட்டப்படும் அசமந்தப் போக்கு, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை காலம் தாழ்த்தும் கபடத்தனம் என்பவற்றைக் கண்டித்து இப் பேரணி நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டு குழு தெரிவித்துள்ளது.

### எழுக தமிழ் இன்னொரு பொங்கு தமிழா ?

பொங்கு தமிழ், தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிக்கு மக்கள் காட்டிய ஆதரவு. யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் மக்கள் கிளர்ந்தெழுந்து, அதிகாரத்துக்கு எதிரான வெகுஜனப் பலத்தை காட்டிய ஒரு நிகழ்வு. தமிழ்த்தேசியம், சுய நிர்ணயம், மரபுவழித் தாயகம் என்ற மூன்று பிரகடனங்களை முன்னிறுத்தி, முதலாவது பொங்குதமிழ் போர் மேகங்கள் சூழ்ந்த ஒரு காலப்பகுதியில், மிகுந்த நெருக்குவாரங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் இடம் பெற்றது. அந்த எழுச்சி ஏற்படுத்திய வெற்றி, அதன் அடுத்த கட்டங்களை தொடர்ந்து வந்த ஆண்டுகளில் நிகழ்த்திச் சென்றது. பொங்குதமிழ்- 3 வரை எழுச்சியுடன் மக்கள் பங்கேற்றார்கள். அப்போது விடுதலைப் புலிகள் பெருவாரியாக வெற்றி பெற்று வந்த காலங்களில் மக்களின் ஆதரவு அவர்களின் கோரிக்கையின்பாலும் அவர்களது நடவடிக்கைகள் சார்ந்தும் இருப்பதை மக்கள் வெளிப்படுத்தினார்கள். அது மக்களால் இயலக் கூடியது. அப்பொழுது அவர்களுக்காய் உயிரைக் கொடுக்கவும் ஒரு அமைப்பு இருந்தது. பல ஆயிரம் இளைஞர்கள் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது இந்த பேரணியை நிகழ்த்தும் அமைப்பில் எத்தனை பேர் தங்களை நம்பி வரும் மக்களுக்காக உயிரைக் கொடுக்க துணிந்தவர்கள்? அதை அவர்களின் கடந்தகால வரலாற்றிலிருந்தே மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.




### 'சிங்கலே'க்கு புத்துயிர்

எழுக தமிழ் பிரசாரத்தில் கேட்கப்பட்டிருக்கும் கோரிக்கைகள் நியாயமானவை தான். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் இதை இனவாதமாக சித்தரித்து தெற்கில் உள்ள பழமைவாதக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, பொதுபலசேனா போன்றவற்றிற்கு உயிர்ப்பிச்சை கொடுப்பது போலிருக்கிறது.

"அங்கே பாருங்கள் தமிழர்கள் மறுபடியும் கூடுகிறார்கள் தமிழை எழ வைக்கிறார்கள், நாங்களும் எழும்புவோம் வாருங்கள்" என்று அவர்கள் எழத்தான் போகிறார்கள். ஆகவே இதே பேரணியை வேறு பெயரிலோ வேறுவிதமாகவோ இவர்கள் ஒருங்கிணைத்திருக்க இயலாதா?

ஜனநாயக ரீதியில் ஒரு மக்களின் பேரணி என்று சொல்லியிருக்கலாம். இதே எழுச்சியை வேறு வடிவத்தில் காட்டியிருக்கலாம். ஆனால் எழுச்சிப் பாடலொன்றையும் வெளியிட்டு பெயரையும் அப்படி வைத்து நாட்டின் இனவாத குரங்குகளிற்கு வாலில் தீ மூட்டியிருக்கிறார்கள்.

எங்கு எரியப் போகிறதோ?

(17 ஆம் பக்கம் பார்க்க...)

● நேர்காணல்: சர்வானந்தா, தனு

# உடுவிலில் மறைந்திருக்கும் ரகசியங்கள்

இலங்கை இனப்பிரச்சினையை விடவும் மிக முக்கியமான ஒரு தேசியப் பிரச்சினையாக, பிரதான பேசு பொருளாக மாறியிருக்கிறது உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம். அறுபது வயதைக் கடந்ததால் கல்லூரி அதிபர் சிராணி மில்ஸை பதவியிலிருந்து ஓய்வு பெறுமாறு தென்னிந்தியத் திருச்சபையின் பேராயரும் கல்லூரியை நிர்வகிக்கும் சபையும் தெரிவித்த பின்னர் அதனை எதிர்த்து பாடசாலை மாணவிகளும், ஆசிரியர்களும் பெற்றோரும் போராட்டத்தில் குதித்தனர். இன்னொரு பகுதி ஆசிரியர்களும் பெற்றோரும் இதற்கு எதிராக செயற்பட்டனர்.

இரு தரப்பும் தமது பக்க நியாயங்களை முன் வைத்தபோது அதில் எதை நம்புவதென்று ஊடகங்களும் மக்களும் குழம்பிப்போயின. மாணவிகளை ஆசிரியர்கள் தாக்கினர் எனவும், இதனால் மாணவிகள் மயங்கி விழுந்தனர் எனவும் செய்திகள் வெளிவந்து பரபரப்பு அலையை உண்டாக்கின. இதே வேளை வடமாகாண கல்விஅமைச்சர் வெளியிட்டது போல சிராணிக்கு ஆதரவான போலிக் கடிதமொன்றை மாணவிகள் தயாரித்து விநியோகித்தமை, உடுவில் மகளிர் கல்லூரியோடு எந்த சம்பந்தமும் அற்ற நிஷாந்தன் என்பவர் உடுவில் ஆசிரியர் ஒருவரை தாக்க முற்பட்டமை என்பனவெல்லாம் இந்தப் பரபரப்பை இன்னும் பற்றவைத்தன.

மல்லாகம் நீதவானின் தலையீட்டின் பின்னர் இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டதாக எல்லோரும் எண்ணினர். ஆனால் மழைவிட்டும் தூவானம் விடாத கதையாக மாணவிகள் ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கொடுத்துள்ளனர். போராட்டத்தை எதிர்த்து நின்ற ஆசிரியரின் வீட்டுக்கு கல்லெறி நிகழ்ந்துள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், டக்ளஸ் தேவானந்தா எம்.பி ஆகியோர் உடுவில் மகளிர் கல்லூரி விடயத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம் என்று கூறியிருப்பது பிரச்சினை நீள்வதையே சுட்டி நிற்கின்றது.

இந்த நிலையில் உடுவில் மகளிர் கல்லூரி அதிபராக இருந்த சிராணி மில்ஸ், போர்ராட்டத்தை எதிர்த்தவர்களில் முன்னணியில் நின்ற ஆசிரியர் சாம் ஆகியோர் தமது தரப்பு விளக்கங்களை இங்கே முன்வைத்துள்ளார்கள். இந்த விளக்கங்களை வைத்து வாசகர்கள் உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம் தொடர்பில் என்ன நடந்ததென்பதை நடுநிலையோடு உணர்வார்கள் என நம்புகிறோம்.

## போராட்டத்தை நான் தூண்டவில்லை

### அதிபர் சிராணி மில்ஸின் விளக்கம்

அறுபது வயதிலை வேலையிலிருந்து ஓய்வுபெறவேணுமென்று கடந்த இரண்டு மூன்று வருஷமா சொல்லிக் கொண்டு வருகினம். போன வருஷமும் பத்துப்பேரை அறுபது வயதென்று நிப்பாட்டிச்சினம். அப்ப பகிடியா எல்லாரும் சொன்னவை, மிஸ் உங்களை குறிவைச்சுத்தான் இதைச் செய்கினமெண்டு. ஆனால் நான் சிரிச்சுப்போட்டு விட்டிட்டன். நாங்கள் ஒரு 'பிரைவேட் இன்ஸ்ரிரியுஷனாக' இருக்கிறபடியால் காலகாலமா பழைய பிரின்ஸிபல் எல்லாரும் பல வருஷங்கள் வேலை செய்திருக்கினம். கடைசியா இருந்தவா கூட அறுபத்தெட்டு வயதிலை தான் ஓய்வு பெற்றவா. 1992 இலை என்னை வைய்ஸ் பிரின்ஸிபலா போட்ட போது, முதலிருந்தவாவின்ரை காலம் முடியும் வரை பொறுப்பேற்காமல் இருந்தனான். கடைசியாக பாதர் ஜெபநேசன் கூப்பிட்டபோது தான் வந்து பொறுப்பெடுத்தனான். அப்பிடி விட்டுக் கொடுக்கிற மன நிலை உள்ள ஆள் நான்.

பிறகு போன யூன் 13 இலை 'ஒபிசேர்ஸ் ஒப் த போர்ட்' வந்து (பேராயர் உட்பட). "நாங்கள் அறுபது வயதெல்லையை இப்ப நடைமுறைப்படுத்திற படியால் நீங்கள் திருப்பி ஒரு அப்பிளிகேஷனை தாங்கோ. அதன்படி உங்களை நாங்கள் தொடர்ந்து வேலை செய்ய விடலாம். ஏனெண்டால் உங்களைப் போல ஒரு ஆள் எங்களுக்குக் கிடைக்கிறது கஷ்டம். அதோடை நீங்கள் இது வரை ஒரு பிழையும் விடேல்லை" எண்டு கேட்டினம்.

அதுக்கு நான் சொன்னன் "அப்பிளிகேஷன் தரமாட்டன். ஏனெண்டால் புது பிரின்ஸிபலுக்குக் கோல் பண்ணின அப்பிளிகேஷன் பேப்பரிலை 60 வயதெல்லை எண்ட விடயம் சொல்லப் படேல்லை" எண்டு.

அப்ப அவர்கள் சொல்லிச்சினம் "சரி. அப்பிளிகேஷன் போட வேண்டாம். தொடர்ந்து இருக்க விருப்பம் எண்டு ஒரு இன்ரரெஸ்ட் லெட்டர் தந்தால் போதும்" எண்டு. அதுக்கு நான் "நீங்கள் லெட்டரைக் கேக்கிறீங்கள். வாங்கிப் போட்டு பிறகும் அறுபதுப் வயதோட போகச் சொன்னால் அது மனதுக்குக் கஷ்டம். அதனாலை வேண்டாம்" என்று சொன்னேன். அதற்கு "அப்பிடி ஒண்டும் நடக்காது. நான் தானே மனேஜராக போர்ட்டிலை இருக்கிறன்" எண்டு பேராயரின் மனைவி சொன்னா. இவ்வளவு அக்கறையா கேக்கிறபடியால் உண்மையாய்தான் அவர்கள் இருக்கினம் எண்டு நினைச்சு லெட்டரைக் குடுத்தன். நான் செய்த தேவையில்லாத வேலை என்னெண்டால், கடந்த 12 வருஷமா என்ன செய்தனான் எண்ட விபரம் அவைக்குத் தெரியவேணுமெண்டதுக்காக, என்னட்டை இருந்த என்ரை சுயவிபரக்கோவையையும் அதோடை இணைச்சு விட்டன். நான் எழுதின லெட்டரிலை பள்ளிக்கூடம் தொடர்பா, அதாவது எப்பிடி முன்னெடுத்து கொண்டுபோறது தொடர்பா ஏதாவது டிஸ்கஷனுக்குக் கட்டாயம் வருவன் எண்டும், வேறை ஒண்டுக்கும் வரமாட்டன் எண்டும் எழுதி அனுப்பிட்டன். பிறகு திடீரென எனக்கு ஒரு லெட்டர் வந்தது, இன்ரர்வியூக்கு வரச் சொல்லி. நான் உடனை பேராயருக்கு ஈ மெயில் அனுப்பினன்" இப்பிடி ஒரு லெட்டர் எனக்கு வந்திருக்கு. அது உங்களுக்குத் தெரியாதெண்டு நினைக்கிறன். 12 வருஷமா இந்தப் பள்ளிக் கூடத்திலை பிரின்ஸிபலா இருந்திருக்கிறன். நான் அப்பிடி தொடர்ந்து இருக்கிறதெண்டால் எனக்கு இன்ரர்வியூ ஒண்டும் தேவை இல்லை. தெரியாத ஆள் என்றால் பரவாயில்லை. அப்பிடி வேறை ஆளை போடுறதெண்டால் எனக்கு வேளைக்கே சொல்லுங்கோ. நானும் என்ரை டிஸிசனை எடுக்க வேணும்" எண்டு அந்த ஈமெயிலில தகவல் அனுப்பினன். உடனை மனேஜர் (அதாவது பேராயரின் மனைவி) வந்து "அதொண்டும் இல்லை நீங்கள் ஒரு டிஸ்கஷனுக்கு வாங்கோ" எண்டு சொன்னா. அதன்படி ஓகஸ்ட் 15 என்னோடை கதைச்சினம். கதைச்சப்போட்டு பிறகு எனக்கு "நீங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதியுடன் ஓய்வு பெற வேண்டும்" எண்டு ஒரு கடிதம் அனுப்பிச்சினம். அப்ப நான் கொழும்பிலை நிண்டனான். எனக்குக் கடிதத்தைப் பார்த்ததும் ஷொக். அவேன்ரை முடிவு இப்பவாவது தெரிஞ்சிதேயெண்டு நினைச்சுக் கொண்டு பிள்ளையளெல்லாரையும் கூப்பிட்டுக் கொண்டு எல்லாம் எடுக்க ஒழுங்காக வந்தனான். அவை கேட்டுக் கொண்டபடி 6ஆம் திகதி நான் இருந்த பிஷப் கவுஸை விட்டாட்டியும் பரவாயில்லை, அலுவலக ஆவணங்களையாவது ஒப்படைப்பம் எண்டு தான் வந்தன் . ஏனெண்டால் 12 வருஷ இருப்பு உடனை விடேலாது எண்டு தெரியும். அதுக்கு ரைம் எடுக்கலாம் தானே?





அப்படி வந்தபோது தான் பிள்ளையளும் அவர்களின்ர பெற்றோரும் இங்கை குழம்பிப் போய் இருக்கினம் எண்டு தெரியும். அப்பவும் நான் பிள்ளையளைக் கூப்பிட்டு "இதொண்டும் தேவை இல்லை. அவை சொன்னபடி நான் போறன். அவை தங்கடை முடிவிலை பின்னுக்குப் போமாட்டினமெண்டு தெரியுது" எண்டு பிளீஸ் பண்ணிச் சொன்னன். நான் சொன்னதை அவை கேக்கேலை. பிள்ளையள் மாத்திரமல்ல பெற்றோரும் சேர்ந்துதான் அந்த முடிவு எடுத்தவை. என்ரை மனச்சாட்சியின்படி நான் அவையளைத் தூண்டேலை அல்லது எனக்காக உண்ணாவிரதம் இருங்கோ எண்டோ கேக்கேலை. அது அவையின்ரை முடிவு.

சில துறைகளிலையும் அதாவது ஆங்கிலம், ஐசிரி துறைகளிலை கொஞ்சம் கூடச் செய்யவேணுமென்று விரும்பினன். ஐசிரி லப் தனியா அடிப்பிச்சிருக்கிறம். அதை இன்னும் சரியா பாடத்திட்டங்களுக்கை போடேல்லை. அதுக்கு நிறைய வேலை செய்ய வேண்டி இருக்கு. இங்கை இருக்கிற ஆரம்பப்பிரிவைச் சரியா செய்ய வேண்டியிருக்கு. தரம்- 5 ஐ நோக்கியே பிள்ளையளின்ரை சிந்தனை இருக்கு. அதை மாத்தவேணும். தரம் 6 க்கு வரேக்கை இங்கிலீஸ் மீடியத்துக்குப் போறவைக்கு சரியான வழிகாட்டல் வேணும். மற்றது 18 அறைகள் கொண்ட கட்டடம் ஒன்றை , பாடசாலையின் எந்த நிதியையும் பயன்படுத்தாமல், பழைய மாணவிகள், நடைப்பயணம், கண்காட்சி என்பவற்றால் கிடைச்ச காசைக்கொண்டு கட்டிக்கொண்டிருக்கிறம். அடுத்த வருஷம் மட்டிலை அது முடியும் எண்டு நினைக்கிறன். இன்னும் இரண்டு வருஷத்திலை இதெல்லாத்தையும் முடிச்சுக் கொண்டு ஓய்வு பெறலாம் என்றுதான் நான் நினைச்சன். அதெல்லாம் இப்பிடி மாறிப்போச்சுது.

ஒண்டுமட்டும் விளங்கிது. நான் இருக்கிறதை ஏனோ அவை விரும்பேல்லை எண்டு. இந்த விடயத்திலை அவை வடிவா திட்டமிட்டிருக்கினம். நான் எல்லாத்தையும் உண்மையெண்டு நினைச்சிட்டன். மினிஸ்டர் சுமந்திரன் பேராயரின் லோயர் எண்டு தான் எனக்குத் தெரியும். அதுக்கங்கால அவர் என்ன செய்கிறார் எண்டு தெரியாது. சபை உடைந்த போதும் பிறகு என்ரை விஷயத்திலை மினிஸ்டர் டக்ளஸ் தலையிட்ட போதும் நடந்த பிரச்சனைகளாலையும் அவை இன்னும் என்னிலை கோபமா இருக்கினம்.

# உடுவில் மாணவிகளை தூண்டியது முன்னாள் அதிபரே

## தம் தரப்பு நியாயங்களை விளக்குகிறார்

### ஆசிரியர் சாம்



உடுவில் முழுக்க முழுக்க தனியார் பாடசாலை. இதுக்கும் அரசாங்கத்தும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. நிதி நிர்வாகம் தொடர்பா எந்தத் தொடர்பும் இல்ல. பாடப்புத்தகம், யூனிபோர்ம், சிலபஸ் மட்டும் தான் அரசாங்கம் அனுப்பும். ஆசிரியர்களுக்கான சம்பளம் கூட அமெரிக்காவில இருந்து தான் வருது. அதிபரை நியமிக்கிறது, நிறுத்துறது எல்லாமே பிஸப்பையும், கொமிட்டியையும் பொறுத்தது தான்.

2009 காலப்பகுதில சிராணி மிஸ்ஸை ஏதோ ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி நிப்பாட்டினவ. அந்தக் குற்றச்சாட்டில எனக்கு அப்ப உடன்பாடு இல்ல. கனகாலமாப் படிப்பிக்கிற படியா எனக்கு எந்தப் பொது விசயத்திலயும் ஈடுபாடு கூட. பழைய பிரின்ஸிபல் சிராணி மிஸ்ஸோட நான் நல்ல நெருக்கம். அப்பகூட அந்த 'ஸ்ட்ரைக்' சிராணி மிஸ்ஸால தான் மறைமுகமா ஒழுங்கு பண்ணப்பட்டது. அப்ப நான் அவான்ர பக்கம் நிண்ட படியா அதைப்பற்றிக் கதைக்கேலை.

ஆனா இப்ப நான் கதைக்க வேண்டி இருக்கு. நேரடியா ஒண்டையும் அவா ஒழுங்குபண்ணமாட்டா. மறை முகமாத் தான் செய்வா. "மாணவர்கள் 'ஸ்ட்ரைக்' பண்ணட்டோ எண்டு கேக்கினம்" எண்டு எங்களிட்ட கேட்டு எங்கட நாடித்துடிப்பை சோதிச்சு பார்ப்பார். இதே மாதிரி 2009 இல மறைமுகமா 2 பிள்ளையளை என்னட்ட அனுப்பி கேட்டவா, "என்ன மாதிரி 'ஸ்ட்ரைக்' செய்தா வெல்லேலுமோ?" எண்டு. அப்ப நான் அந்த பிள்ளையளிட்ட சொன்னனான், "பிள்ளயள் 'ஸ்ட்ரைக்' சட்ட ரீதியானது இல்லை. அப்பிடி நீங்கள் செய்யிறதெண்டா உங்கட கோரிக்கைகள் வெல்லும் வரைக்கும் உறுதியா நிண்டு செய்ய வேணும்" எண்டு. அப்ப நான் ஏன் அப்பிடி சொன்னானெண்டால் சிராணி மிஸ்ஸின் பக்கம் நியாயம் இருக்கெண்டு நான் நினச்சன். ஆனா நான் அத ஊக்கப்படுத்தேலை.

பிரின்சிப்பலின் நண்பி ஒராள் தான் அந்த 2009 பிரச்சினையை முன்னால நிண்டு வழிநடத்தினவா. அந்த நேரம் எல்லா ரீச்சர்ஸும் ஆர்வமா சிராணி மிஸ்ஸுக்கு அநீதி நடந்திட்டு எண்டு கருதி அவாண்ட பக்கம் தான் நிண்டனாங்கள்.

அந்தப் பிரச்சினைக்கு பிறகு சிராணி மிஸ்ஸுக்கு மீள் நியமனம் தான் பிஷப் குடுத்தவர். அதுக்கு பிறகு ஒவ்வொரு வருசமும் அதைப் புதுப்பிச்சு, கடைசியா போனவருசம் குடுக்கேக்க, வாற வருசம் 60 வயதோட நீங்கள் ஓய்வு பெற வேணும் எண்டு சொல்லப்பட்டது. மிஸ்ஸும் ஓமெண்டவா. பிறகு இந்த வருசம் புது அதிபருக்கு விண்ணப்பம் கோரி, அறிவிச்சவை. அதுக்கு நாலு பேர் விண்ணப்பிச்சவை. இன்ரர்வியூவில சிராணி மிஸ்ஸை விட, உதவி அதிபருக்கு கூடின புள்ளி கிடைச்சு, அவாவை புதிய அதிபரா தெரிவு செய்தார்கள்.

### போராட்டம் தூண்டப்பட்டதா?

சிராணி மிஸ் நினைச்சுக் கொண்டிருந்தவா தனக்கு சேவை நீடிப்பு வழங்கப்படும் என. ஆனா இல்லையெண்டு கடிதம் வந்த உடனும் அவா போக வெளிக்கிட்டவா.

பின்னர் சிராணி மிஸ்ஸோட நல்லா பழகிற ரீச்சர்ஸ் சந்திச்சிருக்கினம். அதில குறிப்பா ஒரு ரீச்சர் 10 மணிக்கு தான் பாடசாலைக்கு வாறவா. அவா எடுத்ததுக்கெல்லாம் உணர்ச்சி வசப்படக்கூடியவா. மிஸ்ஸும் அவையிட்ட போகப்போறன் எண்டு சொல்லி கவலைப்பட்டிருக்கிறா. மிஸ்ஸில ஒரு பழக்கம் எண்ணெண்டா எதையும் நேரடியாச் சொல்ல மாட்டா. மறைமுகமா தான் செய்வா. கொஞ்சம் கொஞ்சமா, தான் ஆசைப்பட்டதை நாவன்மையால மற்றவர்களை கொண்டு நிறைவேறச் செய்திடுவா. மிஸ்ஸோட கதைச்ச பிறகு அந்த ரீச்சர் உடனடியா, மற்ற ஆசிரியர்களுக்கும், போன முறை மிஸ்ஸூக்கு ஆதரவா போராட்டத்தை முன்னுக்கு நின்று நடத்திய அதிபரின் நண்பியையும் தொடர்பு கொண்டு ஸ்ட்ரைக்' குக்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கிட்டினம்.

அவை அதிபருக்கு நெருக்கமான மாணவிகளுக்கு போன் செய்து போராட்டத்தை தொடக்கிட்டினம். பிறகு ஊடகங்களுக்கு அறிவிச்சினம். உண்ணா விரதப் போராட்டமா மாத்திச்சினம். 99 வீதமான ஆசிரியர்கள் அதிபருக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

இதே தென்னிந்திய திருச்சபைக்கு கீழே உள்ள பாடசாலையான யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் 60 வயதானவுடன் ஓய்வு பெற்றுச் செண்று விட்டார். எமது பாடசாலையில் படிப்பிச்ச 8 ஆசிரியர்களுக்கு 60 வயதானவுடனும் ஓய்வு பெறச்சொல்லி சிராணி மிஸ் தான் சொன்னவா. ஆனா தான் மட்டும் 60 வயதுக்கு மேல அதிபரா இருக்க நினைக்கிறது நியாமில்லை என்று பெரும்பாலான ஆசிரியர்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை.

மாணவிகளின் போராட்டம் உண்ணா விரதமென்றது பொய். கொஸ்ரலுக்கு ரீ, சாப்பாடு வரும். மாறி கொஞ்ச பேர் போய்க் குடிப்பினம். குடிச்சிட்டு வந்து திரும்ப இருப்பினம். முதல் நாள் மயங்கி விழுந்த மாணவி என்ர மாணவி தான். அவாக்கு தமிழ் நாடகம் ஒண்டுக்காக நான் தான் மயங்கி விழுற கட்டம் பழக்கினான். அந்த படங்களைப் பாத்தீங்கள் எண்டா தெரியும். இவா மயங்கி விழுகிறா பின்னுக்கு 4 பிள்ளையள் சிரிச்சுக் கொண்டு இருக்கினம். பிரின்ஸிபல் ஸ்கூலுக்குள்ள தான் இருந்தவா. பிள்ளையள் இரவிரவா றோட்டில இருக்குதுகள். கொஸ்ரலுக்குப் போய் சாப்பிட்டு வருதுகள். இதெல்லாம் அவாவுக்கு தெரியாம நடந்ததா? பிள்ளைகள் மேல அக்கற இருக்கிற எந்த ஒரு அதிபரும் இதைச்செய்ய அனுமதிக்கமாட்டினம். முதல் நாள் 10 மணிக்கு எல்லாரும் வீட்ட போட்டினம். அடுத்த நாள் போராட்டம் தான், ஊடகங்கள் வந்தபடியால் கூட நேரம் நடந்தது. ஊடகங்களும் ஒரு பக்க கருத்துக்களை மட்டுமே கேட்டுவிட்டு, பக்கச்சார்பாக நடந்து கொண்டன.

7 ஆம் திகதி வட்டுக்கோட்டைச் சேர்ச்சில புது அதிபர் பதவியேற்றவா. ஒரு சில ஆசிரியர்களை தவிர எல்லா ஆசிரியர்களும் வந்திருந்தவை. அதிபருடன் சேர்த்து குழுப்படமும் எடுக்கப்பட்டது. சரியெண்டு பதவியேற்று முடிஞ்சதும் நாங்கள் பள்ளிக்கூடத்துக்கு போனம். நான் கார்ல போனனான். காரை அங்கால பார்க் பண்ணிட்டு நடந்து போக, இந்த மாணவிகள் மறிச்சினம். ஊடகங்களும் தயாரா இருக்கினம். அதில தான் நிசாந்தன் என்பவர் என்னோட தர்க்கம் புரிஞ்சார். எனக்கு அவர் நிசாந்தன் எண்டு தெரியாது.

என்னட்ட படிக்கிற அந்த மயங்கி விழுந்த பிள்ளை தான் முன்னுக்கு நிண்டவா. அப்ப நான் அந்த பிள்ளையிட்ட கிட்டப் போய்ச் சொன்னன் "பிள்ளை அந்த மயங்கி விழுற நாடகம் நான் தான் உங்களுக்கு பழக்கினான். வடிவா நடிச்சியள்" எண்டு. அவா தலையைக் குனிஞ்சு கொண்டு நிண்டா. நான் சொன்னன் "பிள்ளையள் இது வெற்றியளிக்காது. நீங்கள் ஸ்கூலுக்குள்ள போங்கோ. புது அதிபர் வந்திட்டா. பழைய அதிபர் உங்களைப் பாவிக்கிறா" எண்டு சொன்னன். போமாட்டம் எண்டு கத்தி எல்லோரும் படுத்து படுத்து கிடந்தினம். அப்ப மற்ற மாஸ்ரர்மார் வந்து சொல்லிச்சினம் அங்காலப்பக்க கேற் திறந்து கிடக்கெண்டு. அதால போவமெண்டு.

அந்த நேரத்தில நிசாந்தன் அங்க வந்து என்னோட வந்து தர்க்கம் புரிஞ்சார். நான் கேட்டன் "நீங்கள் யார்? ஏன் வந்தனியள் ?" எண்டு. "நாங்கள் மீடியா" எண்டு சொன்னார். நான் சொன்னன்: மீடியா எண்டா பிரச்சினைய 'கவர்' பண்ணலாம். பேட்டி கேக்கலாம். தவிர, "ஏன் ஸ்கூலுக்கு வந்தனியள் எண்டு ரீச்சர்ஸைக் கேள்வி கேக்க முடியாது" எண்டு அப்போது அவர் திடீரென "பிள்ளையள தொடாதேங்கோ. பிள்ளையள தொடாதேங்கோ" எண்டு கத்தினார். ஆனா அங்க ஒண்டுமே நடக்கேல்லை. ஒருத்தருமே எதுவும் செய்யாம அவர் கத்தினார். இது தான் அங்க திட்டமிட்ட நாடகம். உடன நானும் நாடகத்தை விளங்கிக்கொண்டு ஒதுங்கிட்டன். அங்கால கேற் திறந்திருந்ததால, எனக்கு முதல் 3 ரீச்சர்ஸ் உள்ளே போயிட்டினம். நாலாவதா நான் போனன். என்னை இந்தப் பிரச்சினையில இருந்து வெளியால தூக்கிட்டால், மற்ற ரீச்சர்ஸ் பயந்து போடுவினம் எண்டு திட்டம் போட்டு சில வேலைகள் செய்தார்கள்.

நான் நடந்து போக, ஒரு பிள்ளை எனக்கு முன்னுக்கு சும்மா விழுந்திச்சு. நான் அதை ச்சும்மா பார்த்துக்கொண்டு போக, பின்னால இருந்து யூனிபோர்ம் இல்லாத பிள்ளை ஒண்டு வந்து என்னைத் தள்ளிச்சுது. அப்ப என்ர கிளாஸ் பிள்ளை என் கையப்பிடிச்சு இழுத்திச்சிது. உடன நிஷாந்தன் உள்ளுக்கு வந்து என் சேர்ட்டை பிடிச்சு இழுத்தார். அடிக்குமளவுக்கு சென்றார். நானும் இழுபட்டுபோனன். உடனும் மற்ற மாஸ்ரர்மார் வந்து நிசாந்தனைப் பிடிச்சு அவரின் போனைப் பறிச்சிட்டினம். போனைப் பறிச்சதும் அவர் ரென்சன் ஆயிட்டார். பிறகு நான் பொலிஸில முறைப்பாடு செய்யப் போனன். நான் வைத்தியசாலையில் அட்மிட் ஆகாததால், முறைப்பாடு செய்ய முடியாது எனவும் இணக்கசபைக்கு செல்லுமாறும் கூறப்பட்டது.

பிறகு எல்லாரும் உள்ளே வந்திட்டம். நிசாந்தனும் வந்தவர். நான் அவரிட்ட, உங்களுக்கும் ஸ்கூலுக்கும் என்ன தொடர்பு? எண்டு கேட்டன்.

எனக்கு எந்தத் தரப்பு விசயமும் தெரியாது. எனக்கு சொல்லிச்சினம் பெண்மாணவிகளுக்கு அநியாயம் நடக்குது எண்டு. அதால தான் நான் இங்க வந்தனான். சுமந்திரன் இதில தலையிட்டதால அதைத் தடுக்க வந்தன் எண்டு சொன்னார்.

சுமந்திரன் ஆயரின் சட்டரீதியான ஆலோசகர். அவர் தொழில் ரீதியாகத்தான் பேராயரோட நிக்கிறாரே தவிர அரசியலைக் கொண்டு வரவில்லை என அவருக்கு நான் கூறினேன். அதை அவர் ஓரளவு ஏற்றுக் கொண்டார். அடுத்தநாள் நாங்கள் பாடசாலையை நடத்த வெளிக்கிடேக்க பிள்ளையள் வந்தவை. ஆனால் புத்தகம், கொப்பிகள் ஒண்டும் கொண்டு வரேல்ல. என்ர வகுப்பு பிள்ளைகள் 2 பாடசாலை நேரத்தில வெளியில போக முயற்சித்தவை. பாடசாலைக்கு வந்திட்டு யூனிபோர்மோட வெளியில ஓடேக்க வகுப்பசிரியர் என்ற முறையில் நான் மறிக்க முயற்சித்தேன். அப்பவும் நான் இன்னும் 2 பெண்ணாசிரியைகளும் 4 அடி தள்ளித்தான் நிண்டு மறிக்க முயற்சித்தோம். ஆனால் அதில் ஒரு பிள்ளை அப்பா! அப்பா! சாம் மாஸ்ரர் எனக்கு அடிக்கிறார் எண்டு கத்த வெளிக்கிட்டா. உடனும் நான் பின் வாங்கிட்டன்.

அதுக்குப் பிறகு மல்லாகம் நீதிபதி வந்து கூட்டம் வைச்சவர். அதில சிராணி மிஸ் பதவி விலக ஓமெண்டவா. அதோட பிரச்சினை முடிஞ்சிட்டு எண்டு நினைச்சம்.

ஆனால், அடுத்தநாள் போராட்டம் செய்த மாணவிகள் ஜனாதிபதியைச் சந்திக்க ஒரு வான் பிடிச்சு போனவை. ராஜ் போதகர் தான் இத முன்னின்று நடத்தினவர், அவர் வேற பாடசாலையின்ற ஆசிரியர். அவர் பிள்ளையளுக்கு மீற்றிங் வைச்ச படம் எல்லாம் இருக்கு. அவர் தான் அங்க கூட்டிற்று போனவர்.

டக்ளஸிட்டையும் இதுபற்றி சொல்லி இருக்கினம்.அதுக்கு பிறகு தான் அவர் வந்தவர். தன்னாலான உதவிகளை செய்யிறன் எண்டும் சொன்னவராம் அதோட கல்வி இராஜங்க அமைச்சர் இராதாகிருஷ்ணனின் மனைவி என்று சொல்லப்படுவரும், அவரது.மகளும் சிராணி மிஸ்ஸுக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பிள்ளைகள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார்கள். எனது வகுப்பில் இருந்து 10 பிள்ளைகள் வரை இந்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்றார்கள். ஆனால் அவர்கள்மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை. கவலையே எஞ்சியுள்ளது. நீதிபதி மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவும் பிள்ளைகள் மீது கோபத்தைக்காட்ட வேண்டாம் என கூறியுள்ளார்கள். பிள்ளைகளில் நடத்தைக்கோலங்கள் மாறிவிட்டன, இந்தச்சம்பவத்தினால். உதாரணத்திற்கு ஒரு சம்பவம். உயர்தர மாணவர்களுக்கு வகுப்பு எடுத்துக்கொண்டிருந்தேன். தரம்-9 இல் படிக்கும் மாணவி ஒருவர் வந்து என்னை நோக்கி கையைக்காட்டி உடன வகுப்பை விடுங்கோ எண்டு சொன்னா. நான் சொன்னன் அதிபர் சொன்னாத்தான் விடுவன் எண்டு. நீங்க உடன வகுப்பை விடாட்டி நாங்கள் நீதிபதியிட்ட போய்ச் சொல்லுவம். நீங்கள் என்ன நீதிபதியை விட பெரிய ஆளோ? எண்டு கையை காட்டி கேட்டா. இவ்வளவு தூரம் பாடசாலையின் ஒழுங்கு குழப்பப்பட்டுள்ளது. இவற்றை எப்படி ஒழுங்கு நிலைக்கு கொண்டுவரப்போகின்றோம் என்பது தான் இப்போது எங்கள் முன் உள்ள மிக பெரிய கவலை

(கடந்த திங்கட்கிழமை 12.09.2016 அன்று ஆசிரியர் சாம் வீட்டுக்கு இனந்தெரியாத சிலர் கற்களாலும் சாராயப் போத்தல்களாலும் எறிந்து தாக்கியுள்ளனர். எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.ஆயினும் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. இது குறித்து அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.)



# திரை கடலும் தீராத அவலமும்

ஏ.ஜே.ஜி

உத்தியோகம் புருஷலட்சணம் என்கிறார்கள். ஓர் ஆணுக்கு அழகு சேர்ப்பதே அவனுடைய உழைப்புத்தான். ஓர் இல்லத்தரசியை எவருமே எங்கே வேலை செய்கிறாய்? எவ்வளவு உழைக்கின்றாய் என்று கேட்பதில்லை. எனவே உத்தியோகம் புருஷலட்சணம் என்பது பொருத்தமான சொற்றொடராக இருந்துவந்தது.

இன்றைய யுகத்திற்கு இது எந்த அளவிற்குப் பொருந்துமென்று தெரியவில்லை. ஒரு ஆணுக்கு பெண் என்பவள் எந்த வகையிலும் சளைத்தவளல்ல என்று சொல்வது போல பாரதி கண்ட புதுமைப் பெண்களாக இன்றைய யுவதிகள் பல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றார்கள். எனினும் ஆணும் பெண்ணும் சேர்ந்து வேலைக்குச் செல்வதால் குடும்ப வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

எனினும் இல்லாள் என்ற கோட்டைத் தாண்டி தெருவுக்கு வரும் பெண்ணுக்கு வந்து சேர்ந்துள்ளது.

## பெருகும் வளைகுடாப் படையெடுப்பு

வெளிநாடுகளுக்கும் தொழில் வாய்ப்புத்தேடி பெண்கள் இலங்கையிலிருந்து பயணிப்பது இன்று சாதாரண நிகழ்வாகிவிட்டது. அதிலும் பணிப்பெண்களாக வளைகுடா நாடுகளுக்கான பெண்களின் படையெடுப்பு பல்கிப் பெருகிவிட்டது.

எதிலுமே பெருக்கம் வந்தால் அவலம் என்பது போல மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக இலங்கையிலிருந்து செல்பவர்களின் தொகை அதிகமாகி இன்றைய நாட்களில் பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றார்கள்.

அண்மைய செய்தியின்படி 2000 இற்கு மேற்பட்ட இலங்கைப் பணிப்பெண்களை சவுதி அரேபியாவிலிருந்து இலங்கை அரசு மீண்டும் நாட்டுக்கு எடுத்துவர முயற்சிப்பதாகத் தெரிய வந்துள்ளது. தாங்கள் வேலை செய்த வீடுகளிலிருந்து தப்பியோடி அங்குள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் தஞ்சம் புகுந்தமைதான் இதற்கான காரணம். ஏற்கனவே திரும்பி வந்துள்ள பலர் தாங்கள் வேலை செய்த வீடுகளில் நிந்திக்கப்படுவதாகவும், சித்திரவதைப்படுத்தப்பட்டதாகவும் முறையிட்டுள்ளார்கள்.



## பதறவைக்கும் சித்திரவதைகள்

2010இல் பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு செய்தியின்படி சவுதி அரேபியாவில் பணியாற்றிவிட்டு தாயகம் திரும்பியிருந்த ஒரு பணிப்பெண்ணின் உடம்பிலிருந்து 13 ஆணிகளையும், ஐந்து ஊசிகளையும் மருத்துவர்கள் அகற்றியுள்ளார்கள். இது பற்றி பெண்ணிடம் விசாரித்த போது, தன்னுடைய முதலாளி தன் உடம்பில் அறைந்தவைகள்தான் இவை என்று முறையிட்டுள்ளார்.

2013 இல் சவுதி அரேபியாவில் ஒரு பணிப்பெண்ணுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவள் கவனிப்பில் இருந்த பிள்ளையைக் கொன்றுவிட்டாள் என்பதுதான் குற்றச்சாட்டு. ஆனால் மனித உரிமை அமைப்பு, விசாரணை ஒழுங்காக நடத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றது.

## 7 பில்லியன் வருமானம்

இலங்கையின் பொருளாதாரம் அந்நிய நாடுகளில் பணிபுரிபவர்களின் வருமானங்களில் தங்கியிருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. இலங்கை உற்பத்திகளால் கிடைக்கும் 12 வீத வருமான அளவை இந்த வெளிநாட்டு சம்பாத்தியங்கள் அரசுக்கு ஈட்டித் தருகின்றன. கடந்த வருடம் ஏறத்தாழ 7 பில்லியன் ரூபாய் தொகை வெளிநாடுகளில் பணிபுரிபவர்களால் இலங்கை வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இலங்கைக்கு மிகப்பெரிய அந்நிய செலவாணியைச் சம்பாதித்துக் கொடுப்பது இந்த வெளிநாட்டுப் பணம்தான் என்கிறது வங்கி. ஆனால் இன்றைய நிலையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருவாய் பெரிதாகக் குறைந்துள்ளது என்று கவலைப்படுகின்றது மத்திய வங்கி.

## ஏனிந்தத் தாக்கம்?

இலங்கையிலிருந்து பணிப்பெண்களாச் செல்பவர்களுக்கு போதிய தொழிற் பயிற்சி அளிக்கப்படவில்லை. ஒரு பணிப் பெண்ணிற்குரிய உரிமைகள் என்ன? அது எப்பொழுது அத்துமீறப்படுகின்றது, பணியாற்றும் நாட்டில் அமுலிலுள்ள கடும் சட்டங்கள், அதை மீறினால் கிடைக்கும் தண்டனைகள் போன்றன பற்றி பணிப்பெண்களுக்கு தெளிவாகக் கற்பிக்காமையே பல பிரச்சினைகளுக்கு உதாரணம் என்பதை சவுதி அரேபியா இலங்கை ஆகிய நாடுகளுமே ஒத்துக் கொள்கின்றன.

இவர்களைப் பணிக்கமர்த்தும் ஏஜன்சி நிறுவனங்கள் இந்தப் பயிற்சியை அளித்து தயார் நிலையில் அனுப்ப வேண்டியது அவர்கள் கடமை என்பதும் இங்கே அவசியமாகின்றது. ஒரு நாட்டை முழுக்க முழுக்க குற்றஞ் சாட்டுவது என்பதும் நியாயமான ஒன்றல்ல.

பணிப்பெண்களை வேலைக்கமர்த்தும் ஏஜன்சி நிறுவனங்களை கண்காணிப்பது மிகமிக அவசியம் என்கிறார் இலங்கையின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் ஹர்ஷா டி சில்வா.

உண்மைதான். எய்தவனிருக்க அம்பை நோவானேன்? இங்கிருந்து அனுப்பப்படுவர்கள் முறையான பயிற்சியின் பின்னர் வளை குடா நாடுகளுக்குச் சென்றிருந்தால் அனாவசிய பிரச்சினைகள் பல தவிர்க்கப்பட்டிருக்கலாம். அரபு மொழியை இலவசமாகக் கற்பித்தல், அரபு வாழ்க்கை முறைபற்றி தெளிவாக விளக்கிச் சொல்லுதல் போன்றன புதிதாக ஆரம்பிக்கும் அரபுச் சூழலில் பணிப்பெண்களாக வேலை செய்பவர்களுக்கு பேருதவியாக அமைய வாய்ப்புண்டு.

## பயிற்சி பெற்றும் துயரமே

பல ஏஜன்சி நிறுவனங்கள் இப்படிப் பயிற்சியோடு அனுப்பியும், ஆயிரக் கணக்கான இலங்கைப் பணிப் பெண்கள் பணிக்கமர்த்தப்படும் இடங்களில் நிர்ப்பந்திக்கப்படுவது தொடரவே செய்கின்றது என்று அங்கலாய்க்கின்றார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஊக்குவிப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள.

முழுக்க முழுக்க அரபு மொழியிலான வேலை ஒப்பந்தங்களிலேயே பணிப் பெண்கள் கையொப்பமிடுகிறார்கள். இதனால் எந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன, எவை நீக்கப்படுகின்றன என்பது சம்பந்தப்பட்டவருக்கு தெரிய வாய்ப்பு இல்லை என்பது மறைக்க முடியாத நிஜம்.

சமீபத்தில் இன்னொரு வளை குடா நாடான ஓமானில் ஒரு இலங்கைப் பணிப்பெண் கொலை செய்யப்பட்டிருக்கின்றார். இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இவர் பெயர் பதியப்பட்டிருக்கவில்லை. கழுத்தறுக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட இந்தப் பெண் அங்குள்ள ஒரு பாகிஸ்தானியரால் கள்ளக்காதல் விடயத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று செய்திகள் கசிந்துள்ளன.

## முறையான பதிவின்மை

முறையாக இலங்கையில் பதிவுகளை மேற்கொள்ளாமல் இந்தக் கொலையுண்ட பெண்ணைப் போல தொழில் தேடி அயல் நாடுகளுக்கு பயணிப்பவர்களுக்கு இலங்கை அரசு சமயாசமயங்களில் எந்த உதவியும் செய்ய முடியாத நிலை வந்து விடுவதுமுண்டு.

இந்தப் பிரச்சினைகளுக்கு ஆப்பு வைப்பது போல, இனிவரும் காலங்களில் இலங்கைப் பணிப் பெண்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புவதை மெல்ல மெல்ல நிறுத்தப் போவதாக அரசாங்கப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். உரிமைகள் மறுக்கப்பட்டு நிந்திக்கப்பட்டு பெரிதாகப் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் வேலைக்குச் செல்லும் சில பெண்கள். இங்கும் வேலைக்கு ஆள் பற்றாக்குறை நிலவி வருகின்றது என்று மேலும் குறிப்பிட்டு உள்ளார்.

## பெண்களுக்கு பதில் ஆண்கள்

இலங்கையிலிருந்து வெளிநாடுகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பணிப் பெண்கள், பயிற்சி பெறாத தொழிலாளிகள் தமது உழைப்பை தாய் நாட்டுக்கு அனுப்புவதன் மூலம் 82,2 பில்லியன் டாலர் பெறுமதியான பொருளாதாரத்தில் 7பில்லியன் டொலரை அரசுக்கு வழங்கி வருகின்றார்கள்.

இப்படியொரு நிலை இருந்தும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களை வேலைக்கனுப்புவதைப் படிப்படியாகக் குறைத்து இறுதியில் ஒரேயடியாக நிறுத்தி விட, ஒரு குழுவை ஜனாதிபதி நியமித்திருப்பதாக ராஜித கூறியிருக்கின்றார்.

பெண்களை வளைகுடா நாடுகளுக்கு அனுப்புவதை விட ஆண்களை அனுப்புவதிலேயே அரசு இப்பொழுது அதிக ஆர்வம் காட்டி வருகின்றது.

2013 இல் சவுதி அரேபியாவில் மரண தண்டனை பெற்றவர்தான் 24 வயதான றிஸானா நபீக். இந்த நாளிலிருந்து பணிப் பெண்களை நிந்தித்தல், மரணங்கள் என்ற அங்கு பணியாற்றும் பணிப்பெண்கள் பற்றிய பல செய்திகள் பலருக்கும் மனக்கலக்கத்தை ஏற்படுத்தும் வண்ணமாகவே தொடர்ந்தன. இவை சம்பந்தப்பட்ட உறவினர்களுக்கு மாத்திரமல்ல பல சிவில் சமூக அமைப்புகளுக்கும், மனித உரிமை அமைப்புக் குழுவினருக்கும் தலையடி தரும் விவகாரங்களாகி இருந்தன.

2015 ஆம் ஆண்டில் முதல் 7 மாத காலப் பகுதியில் மாத்திரம் அயல் நாடுகளில் பணியாற்றிய 151 அபலைத் தொழிலாளிகளின் உயிரற்ற உடல்கள் தாயகம் தேடி வந்தன. குவைத், சவுதி அரேபியா, கட்டார் ஆகிய வளைகுடா நாடுகளிலிருந்தும், தென்கொரியா உட்பட ஏனைய நாடுகளிலிருந்தும் வந்தவைதான் இந்த உடல்கள். இவர்கள் எல்லோருமே 20 க்கும் 55 வயதுக்கும் இடைப்பட்ட வயதினர்.

இப்படியான நிகழ்வுகள் பற்றி அறிந்தும் ஏன் இன்னமும் பலர் இந்த வேலையை நாடுகிறார்கள்?

## வறுமை வறுமை வறுமை!

இதைவிட வேறு என்ன உருப்படியான காரணத்தைச் சொல்ல முடியும்? கொடிது கொடிது வறுமை கொடிது. அதனிலும் கொடிது இளமையில் வறுமை

வெளிநாட்டுப் பணத்தில்தான் ஆசைப்பட்டதை அனுபவிக்கலாம் என்ற நிலையில் பணம் தேட இவர்களுக்கு மாற்று வழிதான் என்ன?

ஒரு தடவை சவுதி அரேபியப் பிரஜை ஒருவர் தன் கைவசம் இருந்த பணிப் பெண்ணை ஏலத்தில் விற்பதற்காக உள்நாட்டு பத்திரிகையில் விளம்பரம் செய்துள்ளார். இணையத்தில் ஏல விற்பனைப் பகுதியில் இந்த விளம்பரம் வெளியாகி இருந்துள்ளது. 25,000 சவுதி றியாலுக்கு (சுமாராக 890,000 ரூபாவுக்கு) தான் விற்கத்தயார் என்று குறிப்பிட்டுள்ளார். "குறிப்பிடப்பட்ட இலங்கைப் பணிப்பெண்ணுடனான எனது ஒப்பந்தம் முடிந்து விட்டது. இன்னொரு இடத்தில் இன்னொரு வருடம் இவர் வேலை செய்ய விரும்புகிறார் 25000 றியால் தொகைக்கு நான் இந்தப் பணிப் பெண்ணை கைவிடத்தயார்" என்பது இவரது விளம்பரம்.

சமூகத்தோடு நேருக்கு நேர் நின்று போராட ஓர் ஆணைப்போல் பெண்ணால் முடிவதில்லை. ஆணுக்கு சரிநிகர் பெண்கள் என்று சொல்லிக் கொண்டாலும், இவர்களது பலவீனமே ஆண்கள் சமுதாயத்திற்கு பல சமயங்களில் ஒரு பலமாக அமைந்து விடுகின்றமைதான்.

படிப்படியாக வளைகுடா நாடுகளுக்கு பெண்களை அனுப்புவதைக் குறைத்து இறுதியில் ஒரேயடியாக அனுப்புவதை நிறுத்தி விடுவது என்பது, இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வாகவே தெரிகின்றது.

பண வரவிற்காக பலதொல்லைகளை அனுபவித்து வரும் இவர்கள் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி இடும் முனைப்பு சாலச்சிறந்த ஒன்றுதான்!

நாளைய பொழுதுகளாவது இந்த அபலைகளுக்கு நன்றாக அமையட்டுமே.




**மேடம்**
சிறப்பு. வாக்கு வன்மை. பண நெருக்கடி. பணியில் முடக்கம்.

**ரிஷபம்**
மன அமைதி. மக்கள் மேன்மை. பிதிர் கடன். குடும்ப சிறப்பு.

**மிதுனம்**
வாகன வசதி. யாத்திரை. காரிய தாமதம். உறவுகளால் யோசனை.

**கடகம்**
கல்வி மேன்மை. எதிர்பால் சிறப்பு. கள்வர் தொல்லை. காரியனுகூலம்.

**சிம்மம்**
சக ஆட்கள் தொல்லை. சிந்தனை. கொடுக்கல் வாங்கல் சிறப்பு.

**கன்னி**
பால்விருத்தி. நடைக் கஷ்டம். புத்திரரால் செலவு. கல்வி மேன்மை.

**துலாம்**
மனச்சுமை. உறக்கமின்மை. கனவு பலிதம். பொருட் சேர்க்கை.

**விருச்சிகம்**
பயிர் பலிதம். வாய்மை. சமூகச் சிறப்பு. வியாபார மேன்மை.

**தனுசு**
கொடுக்கல் வாங்கல் பிணக்கு. போகம். சமநிலை. மன வருத்தம்.

**மகரம்**
கலக்கம். தெய்வ சிந்தனை. தரும காரிய சித்தி. கல்வி மேன்மை.

**கும்பம்**
காரியக்கேடு. பால் விருத்தி. புத்திரரால் யோசனை. பணியில் மேன்மை.

**மீனம்**
சுக வாழ்வு. தெய்வ தரிசனம். வாகன சுகம். மனைச் சிறப்பு. வியாபார மேன்மை.



புதுமைக்கவி பாரதியார் அவர்களுடைய நினைவு தினமான (11.09.2016) யாழ்ப்பாணம், நல்லூரிலே அமைந்திருக்கும் பாரதியார் சிலை இளைஞர்களால் அமைதியான முறையிலே சுத்திகரிக்கப்பட்டு மாலைகள் அணிவிக்கப்பட்டு சுட்டி விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வால் தூண்டப்பட்டு விசாரித்த போது அவ் இளைஞர்களின் சமூக பற்று மெய்சிலிர்க்க வைத்தது.


பாரதியார் உருவம் பொறிக்கப்பட்ட மேலாடைகளுடன் முன்னின்று பாரதியாரை நினைவு கூர்ந்ததோடு மட்டுமல்லாமல், அவர் நினைவாக இலவசமாக பொது மக்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறான நடவடிக்கைகளில் இக்கால சந்ததியினர் ஈடுபடுபது தமிழின் பெருமையாலன்றி வேறொன்றும் இல்லை.






அலிபாவும் - அல்லேலூயா அல்லக்கைகளும்




07 திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை, நல்லூர் சாதனா பாடசாலை மைதானத்தில் நடைபெறுகிறது மக்கள்களரி எனும் நாடகத் திருவிழா. ஒவ்வொரு நாளும் மாலை 6. 30 மணிக்கு, வெவ்வேறு நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. எல்லா நாடகங்களும் இலவசமாகக் காட்டப்படுகின்றமை குறிக்கத்தக்கது. பகல் நேரத்தில் பாடசாலை மாணவருக்கான காட்சிகளும் நடைபெறும்.




"இலங்கைத் தமிழன்" பாடல். இது இலங்கை சொல்லிசை துறையில் ஒரு முயற்சி. இப்பொழுது இணையத்தில் பார்க்க கிடைக்கிறது.




13.09.2016 மாலை 3.30 க்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் கந்தசாமியும் கலக்சியும் என்ற எழுத்தாளர் ஜே.கே வின் புத்தகம் பற்றிய கலந்துரையாடல் இடம் பெற்றது. தலைமை மூத்த எழுத்தாளர் தெ சா.பா, பிரதான உரைகள் யோ. கௌதமி, யதார்த்தன், சிவனுசன்.









வவுனியாவில் கோலாகலமாக இடம்பெற்ற "தமிழ் மாருதம்". அரங்கு நிறைந்த அவையுடன் இளைஞர்களின் முயற்சியில் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. (செப்ரெம்பர் 03, 04)

# சுவரில் கொய்தவை

**Neeyum Naanum**

வாழ்ந்தே ஆக வேண்டிய வாழ்க்கையை விடவா பெரிய தண்டனை நரகத்தில் கிடைத்து விடப்போகிறது?

**Ramesh Babu**

[illegible]

பழம் விழு பிறுமி.

**Kirsika Thavarajah**

[illegible]

**ரேவதி யோகலிங்கம்**


[illegible]




Mahendran Thiruvarangan

தென்னிந்தியத் திருச்சபையின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் ஆளுநர் சபைகள் இருக்கும் வரைக்கும் இந்த இரு பாடசாலைகளுக்கும் எந்த மீட்சியும் ஏற்படப் போவதில்லை. தென்னிந்தியத் திருச்சபையில் இருந்து இந்த இரண்டு பாடசாலைகளையும் மீட்டெடுப்பது சட்ட ரீதியாகச் சாத்தியமானதா என எனக்குத் தெரியவில்லை. உரிய கல்வித் தகுதி அற்ற ஆசிரியர்கள் கற்பித்தற் செயற்பாடுகளிலும், நிருவாகத் திறன் அற்ற நிருவாகிகளும் இந்த இரு பாடசாலைகளுக்குத் தொடர்ந்தும் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். எங்களது பழைய மாணவ "சென்டிமென்டுகளை" ஒதுக்கி வைத்துவிட்டுப் பார்க்கும் போது இவை தகைமையற்றவர்களின் கீழ் இவை இயங்குவதனை விட இவற்றினை இழுத்து மூடுவது சமூகத்துக்கு நல்லது போல எனக்குத் தெரிகிறது.

## இந்தவார மீம்ஸ் (Meme)




1. Equality: is giving people the same thing/s.
2. Equity: is fairness in every situation.



Luzan Mahalingam Amirthavali

கொஞ்ச காலத்துக்கு முதல் சகோதர இன பேராசிரியர் ஒருவரோட யாழ்ப்பாணத்துக்கு போய்க் கொண்டிருந்தன். - கிளிநொச்சி, ஆனையிறவை தாண்டும் போது தமிழர் பிரதேசங்களில இவ்வாறான நினைவு சின்னங்கள் அவசியமா எண்டு கேட்டன். அவர் சொன்னார் இந்த இடத்தில தானே இவர்கள் உயிரிழந்தவர்கள் இங்கதானே வைக்கோணும் எண்டார். "சமாதான காலத்தில கூட இயக்கம் உங்களிட்ட தலதா மாளிகையிலயும், மத்திய வங்கிலயும் சிலை வைக்க போறண்டு கேக்கலயே கேக்க கூடா எண்டுற நியாயமும் அவங்களுக்கு தெரிஞ்சிருக்கு உங்களுக்கு தெரியலையே" எண்டன்.



இந்தியத்தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக விடுதலைப்புலிகள் உட்பட பல்வேறு தமிழ் இயக்கத்தினரும் இந்தியாவுக்கு சென்றிருந்தனர். அங்கு அசோகா ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டனர். எல்லோருக்கும் தனித்தனி அறை. ஹோட்டல் நடைமுறைகளின்படி அங்குள்ள ஒவ்வொரு அறையிலும் மது, சிகரெட் உட்பட பல இத்யாதிகள் வைக்கப்பட்டிருந்தன.

அங்கு சென்ற தமிழ் இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் (இரத்தினசபாபதி என்று வாசித்ததாக ஞாபகம்) தனது அறையிலிருந்த மதுவை கொஞ்ச நேரத்திலேயே ஒரே இழுவையில் அடித்து முடித்துவிட்டு, தலைவர் பிரபாவின் அறைக்கு சென்று அவரது அறையிலுள்ள மதுப்போத்தலை தரும்படி கேட்டிருக்கிறார். அவரோ தனது அறையிலிருந்த மதுப்போத்தலை கொடுக்கவில்லை. மாறாக, வெளியில் வாங்கிக்குடிக்கும்படி கூறி பணமும் கொடுத்து அனுப்பியிருக்கிறார்.

அந்த மனுசனுக்கு அடித்ததெல்லாம் இறங்கிவிட்ட மாதிரி ஒரு ஷொக். 'இந்த பெடியன் ரெம்ப நல்லவன் எண்டு இவ்வளவு காலமும் நினைச்சுக்கொண்டிருந்தா, இவன் என்னை விட மோசமானவனா இருப்பான் போல" - என்று தலைவரை மனசுக்குள் திட்டிக்கொண்டு போய்விட்டார்.

மறுநாள் சந்திப்புக்கு எல்லோரும் தத்தமது அறைகளிலிருந்து கிளம்பிவிட, அறையை சுத்தம் செய்பவர்களின் ஊடாக தமிழ் இயக்க உறுப்பினர்கள் தங்கியிருந்த அறைகள் அனைத்திலும் வைக்கப்பட்டிருந்த மது, சிகரெட் ஆகியவற்றை செக் பண்ணிய தமிழக பத்திரிகை ஒன்றின் அடுத்தநாள் முதல் பக்க செய்தி இப்படி வந்திருந்தது.

"விடுதலைப் புலிகளுக்கு மது, சிகரெட் பழக்கங்கள் இல்லை"

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் வாழ்வொழுக்கம் என்பது அரசியல் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டது. அதுவே பல சந்தர்ப்பங்களில் அந்த இயக்கத்தின் உயிர்நாடியாகவும் இருந்திருக்கிறது. அவ்வாறான ஒரு தலைவன் வழி நடத்திய இனம் என்ற அளவில் அதனை மக்கள் எப்பவோ புரிந்திருக்கிறோம். இப்போது கமால் குணரட்ண சொல்லித்தான் அது தெரிய வேண்டுமில்லை. கமால் குணரட்ண இதனை சொல்லிக் கொள்ளும் அரசியல் எமக்கு புரியாமலும் இல்லை.

Theivigan Panchalingam





குடிகார முனுசாமியை தொட்டியில் மூன்று முறை தண்ணீரில் முக்கி எடுத்து பாதிரியார் கூறினார்...

"உன்னுடைய பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டன. இன்று முதல் நீ பரிசுத்தமானவனாகிறாய். இன்று முதல் நீ மோசஸ் என்றழைக்கப்படுவாய். இனிமேல் குடிக்க மாட்டேன் என சத்தியம் செய்துகொடு மோசஸ்!"

"சத்தியம் ஃபாதர்... இனிமேல் சாராயம் குடிக்க மாட்டேன். சர்பத் குடிக்கலாமா பாஸ்டர்?"

"தாராளமாக எத்தனை தடவை வேணுமெண்டாலும் குடிக்கலாம்!"

"ஓகே பாஸ்டர்!"

மோசஸ் ஆன குடிகார முனுசாமி தனது வீட்டிற்கு வந்தவுடன் அலமாரியில் இருந்த ஒரு ஃபுல் பாட்டில் விஸ்கியை எடுத்து, தொட்டியில் இருந்த தண்ணீருக்குள் மூன்று முறை முக்கி எடுத்துக் கூறினான்...

"உன்னுடைய விஷங்களெல்லாம் கழுவப்பட்டன. நீ பரிசுத்தமானவனாகிவிட்டாய். இன்று முதல் நீ சர்பத் என்றழைக்கப்படுவாய்!"

Vanathy Chandra

**Mynthan Shiva** feeling crazy

எங்களோட பாடசாலை(சென் ஜோன்ஸ்) மைதானத்தில் சைக்கிள் ஓடினால், அந்தப்பக்கம் திரியும் யாரேனும் ஆசிரியரிடம் கன்னத்தில் அடி வாங்குவது வழமை.நான் கூட ஒருதடவை எட்டாம் ஆண்டு படிக்கும்போது விடுமுறை தினமன்று மாலை விளையாடிவிட்டு, மைதான ஓரமாய் சைக்கிள் ஓடியதற்கு மதிப்பிற்குரிய முன்னாள் அதிபர் தனபாலனிடம் கன்னத்தில் அடிவாங்கி இருக்கிறேன்!

இன்று அதிமேதகு சனாதிபதி எங்கள் பாடசாலை மைதானத்தில் ஹெலிகொப்டரில் வந்து இறங்கியிருக்கிறார்.



இணையவாசிகளுக்கு உங்களது சமூக வலைத்தள பதிவுகளை எமது முகநூல் பக்கத்திற்கு அனுப்புங்கள். சிறந்த பதிவுகள் புதுவிதியில் பிரசுரமாகும். https://www.facebook.com/puthuvithieditorial/

## குட்டீஸ் பக்கம்



# ஆசைக்கும் அளவுண்டு

ஒரு காட்டில் வேடர்களின் தலைவனுக்கு அழகான ஒரு மகள் இருந்தாள்.

ஒரு நாள் பட்டாம் பூச்சியைத் துரத்திக்கொண்டே அந்தப் பெண் காட்டில் ஓடிய போது, அவளை ஒரு சிங்கம் பார்த்து விட்டது. அதற்கு அந்தப் பெண்ணை மிகவும் பிடித்துப்போய் விட்டது. அது நேரே வேடர் தலைவனிடம் சென்று, தனக்கு அவர் மகளைக் கல்யாணம் செய்து வைக்கும்படி கேட்டது.

வேடர் தலைவனுக்கு சிங்கத்திடம் பயம். அதனால், மறுப்புச் சொல்ல முடிய வில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தார். அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

அவர் சிங்கத்தைப் பார்த்து, "காட்டு ராஜா காட்டு ராஜா. என் மகள் மிகவும் பயந்தவள். உன்னுடைய பற்களையும் நகங்களையும் எடுத்துவிட்டால், அவளுக்குப் பயம் தெளிந்துவிடும்! அப்புறம், நான் அவளை உனக்குக் கல்யாணம் செய்து தருகிறேன்!" என்று சொன்னார்.

அந்தப் பெண் மீது கொண்ட ஆசையால் சிங்கம் அதற்குச் சம்மதித்தது. வேடர் தலைவன் முதலில் அதன் பற்களைப் பிடுங்கினார். அதன்பின், நகங்களை வெட்டினார்.

பற்களையும் நகங்களையும் இழந்த சிங்கம், பலம் எல்லாவற்றையும் இழந்து ஆட்டுக் குட்டிபோல் ஆயிற்று! உடனே வேடர் தலைவன் ஒரு தடியை எடுத்து, அதை அடி, அடி என்று அடித்து விரட்டினார்.

நடக்க முடியாததற்கு ஆசைப்பட்டால் நஷ்டம் நமக்குத்தான் என்று புரிந்து கொண்டு, தப்பித்தோம். பிழைத்தோம் என்று சிங்கம் ஓடியே போய்விட்டது!

## வண்ணத்தின் காரணம்

விதவிதமான வண்ணத்துப் பூச்சிகளின் சிறகுகள் மிளிர்வதை நாம் கண்டு வியந்திருக்கின்றோம். அதனை துரத்திப் பிடித்திருக்கின்றோம். ஆனால், அதன் சிறகுகளின் நிறம் பற்றிய ரகசியம் அறிய சிந்தனையை செலுத்தியதில்லை. அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் வினோத் குமார், சாரநாதன் தலைமையில் மேற்கொண்ட ஆராய்ச்சியில் அத்தகைய மிளிர்வுக்கு காரணம் நிறமிகள் அல்ல, செல்களின் அமைப்புதான் என்று கண்டறிந்துள்ளனர்.



## அழகு நிலா



நிலாப்பாட்டு பாடியே
நிலாவோடு சேருவோம்
உலாப் போகும் வெளியினை
உல்லாசமாய் நாடுவோம்
இரவைத் தேடும் உறவுப்பூ
இருளில் அழகு காட்டுதே
வரவுக்காக காப்பதால்
வழியில் மகிழ்ச்சி பூக்குதே

## குட்டீஸ் பரிசுப் போதி – 10

★ மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எப்போது இறந்தார்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

குட்டீஸ் பரிசுப்போதி – 10
புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

முடிவுத்திகதி: 27.09.2016

★ தரம் 11 க்கு உட்பட்ட மாணவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.

குட்டீஸ் பரிசுப் போதி – 08 முடிவுகள் [18 ஆம் பக்கம் பார்க்க]

சிறுவர் தொடர்

14



# பூதத்தீவுப் புதிர்கள்

● செங்கை ஆழியான்

"அதற்கு முதல் நீ அறிவாளி என்றால், நான் ரீச்சரிடம் கேட்ட வினாவுக்கு பதில் சொல்லு பார்க்கலாம். அதன் பின்னர் உன் கேள்வியைக் கேள்"

வசந்தன் சரியாகப் பதில் சொன்னான். கோபுரந் தாங்கிப் பூதம் அவனை மரியாதையுடன் பார்த்தது.

"நீ புத்திசாலியாக இருக்கிறாய்.. சரி உன் கேள்வியைக் கேள்..."

"ஒரு வினாடிக்குள் உன் பதில் வந்துவிட வேண்டும்"

"பீடிகை போடாதே. அது மூடர்களின் வழி" என்றது பூதம்.

"எவ்வளவு நேரத்தில் நீ பதில் சொல்வாய்?"

"ஒரு நொடியில் பதில் சொல்வேன். நீ விரல்களைச் சொடுக்குவதற்குள் என் வாயிலிருந்து பதில் வந்து விடும்"

"நீ அவ்வளவு கெட்டிக்காரனா?"

"இந்த உலகத்திலேயே மகா புத்திசாலி நான் தான்" என்று பெருமிதமாகச் சிரித்தது பூதம். தற்பெருமைக் காரனுக்கும் அகம்பாவிக்கும் புத்தி மட்டு என வசந்தன் புரிந்து கொண்டான்.

அவர்களை எல்லாரும் சூழ்ந்து கொண்டனர். அவர்களின் நடுவே இருபது அடிகள் உயரத்தில் பூதம் நின்றிருந்தது. அதன் கரிய தோற்றமும் சிவந்த விழிகளும் பார்ப்போருக்கு கிலியை ஊட்டின.

"விரைவாக கேள். எனக்குப் பசி கிளம்பி விட்டது"

"பசி கிளம்பினால் என்ன செய்வாய்?" என வசந்தன் கேட்டான்.

"கழுகு முட்டைகளைச் சாப்பிடுவேன். எனக்கு மிகவும் பிடித்தமான உணவு" என்றது பூதம்.

"கழுகு முட்டைகளைப் பச்சையாகச் சாப்பிடுவாயா?"

"இல்லை அவித்துத்தான் சாப்பிடுவேன். நாகரிகம் இல்லாதவன் என்றா நினைத்தாய்? நீ காலதாமதம் செய்கிறாய். உனக்கு கேள்வி கேட்கத் தெரியவில்லை. தெரியாவிட்டால் சொல். நான் போய் விடுகிறேன்"

"பத்துக் கழுகு முட்டைகள் அவியப் பத்து வினாடிகள் எடுத்தால் ஒரு கழுகு முட்டை அவிய எத்தனை வினாடி எடுக்கும்?" என்று வசந்தன் கேட்டான். விரல்களைச் சுட்டினான். பூதம் பட்டெனப் பதில் கூறியது: "ஒரு வினாடி எடுக்கும்"

ஓவென்று பெரிதாக வசந்தன் சிரித்தான்.

"கோபுரந்தாங்கி நீ தோற்றுவிட்டாய்.." என்று அவன் ஆர்ப்பரித்தான்.

"நீ என்னை ஏமாற்றி விட்டாய். என்றாலும் நீ புத்திசாலி தான்" என்று கோபுரந்தாங்கி வெட்கத்துடன் சிரித்தது. "இந்த உலகத்தின் மகா புத்திசாலி நான் தான் என்று சொன்னதை மனதில் வைத்துக் கொள்ளாதே" என்றது.

அவர்கள் சத்திரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர். அவர்களுக்குப் பின்னால் கோபுரந்தாங்கி தன் பெரிய உடலைத்தூக்கிக் கொண்டு நகர்ந்தது.

(புதிர்... தொடரும்...)



★ மணிரத்னம் இயக்கத்தில் உருவாகவிருந்த 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் கைவிடப்பட்டதன் பின்னணியை எழுத்தாளர் ஜெயமோகன் விவரித்துள்ளார். அதில், "மணிரத்னம் இயக்கத்தில் கல்கியின் பொன்னியின் செல்வனை ஒரு சினிமா வாக எடுக்கும் திட்டம் ஆறாண்டுகளுக்கு முன்பு உருவானது. நான் அதற்குத் திரைக்கதை எழுதினேன். ஆனால் தமிழகத்தின் எந்தக்கோயிலிலும் படப்பிடிப்புக்கு அனுமதி கிடைக்கவில்லை. கோயில்களின் சுற்றுச்சுவர்கள் அல்லாமல் தமிழகத்தில் தரைத்தளத்தில் அமைந்த பெரிய கோட்டைகள் இல்லை. வரைகலை வளர்ச்சி அடையாத அன்றைய சூழலில் செட் போட்டு எடுப்பதென்றால் ஐம்பதுகோடி வரை செலவாகுமென கணக்கிடப்பட்டது. ஆகவே திட்டம் கைவிடப்பட்டது. அந்தத் திரைக்கதையை நான் கோதாவரியின் கரையில் பிரம்மாவரம் அருகே இருந்த எலமஞ்சலி லங்கா என்னும் ஊரில் ஒரு விருந்தினர் மாளிகையில் ஒரு மாதகாலம் தங்கி எழுதினேன்" என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

★ குறுகிய காலத்தில் தமிழ் சினிமாவில் புகழின் உச்சியை எட்டி பின் தயாரிப்பில் இறங்கி நஷ்டப்பட்டு 46 வயதில் இறந்த நடிகையர் திலகம் சாவித்திரியை யாரும் மறக்க முடியாது. இப்போது இவரது வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்க இருக்கிறார்கள். இதற்காக சாவித்திரி குடும்பத்தாரிடம் அனுமதி பெற்ற படக்குழு, சாவித்திரி வேடத்தில் நடிக்க நடிகை நித்யா மேனனை ஒப்பந்தம் செய்திருக்கிறது.



★ ஏ.ஆர். ரஹ்மான் எப்போதுமே குறைவாக, மனதில் இருப்பதை அப்படியே பேசக்கூடியவர். சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில் "உங்களைக் கவர்ந்த இளம் இசையமைப்பாளர் யார்?" எனக் கேட்கப்பட கொஞ்சமும் யோசிக்காமல் "அனிருத், சந்தோஷ் நாராயணன், ஜிப்ரான்" எனச் சொல்லி விட்டார். இந்தப் பாராட்டுப் பட்டியலில் தன் பெயர் இல்லாததால், ஜி.வி.பிரகாஷுக்கு வருத்தமாம்!








★ 'பிச்சைக்காரன்' படத்திற்குச் தெலுங்கிலும் அமோக வரவேற்பு. 100 நாள் ஓடி பிரமாண்ட வெற்றி பெற்ற இப்படத்தை, இப்போது அமெரிக்காவிலும் ரிலீஸ் செய்யும் முயற்சியை எடுத்திருக்கிறார் தெலுங்கு தயாரிப்பாளர். விஜய் ஆண்டனியே ஹீரோவாக நடிக்க ஹிந்தியில் ரீமேக் செய்யும் முயற்சியும் நடந்து கொண்டிருக்கிறது.

★ இயக்குனர் ஜோயல் ஜெ.ஆர் அவர்களின் இயக்கத்தில் தேவதை ரிட்டன்ஸ் என்ற குறும்படம் உருவாகிவருகிறது. ரோமிஷ் வெளியிடவுள்ள இந்த படத்தில், இதற்குமுன் 'The Broken Ladder' படத்தில் பணியாற்றிய அதே குழுவினர் இந்த குறும்படத்தில் பணியாற்றவுள்ளனர். 'தேவதை ரிட்டன்ஸ்' படத்தின் முதற்பார்வை மட்டும் தற்போது வெளிவந்துள்ளது.






★ ஈழத்தில் முன்னணியில் திகழும் ANDRA WEDD ING CARD நிறுவனத்தின் தயாரிப்பில் புலவர் வீடியோ ரமேஷின் ஒளிப்பதிவு மற்றும் இயக்கத்திலும் கவிமாறன் சிவா மற்றும் அறிமுக நாயகி திலந்தினியின் நடிப்பிலும் சுதர்சனின் இசையிலும் ஜோன்சனின் கவி வரிகளிலும் அருள் தர்சனின் குரலிலும் லீ மற்றும் குருநிலனின் உதவி இயக்கத்திலும் மற்றும் பல ஈழத் கலைஞர்களின் பங்களிப்புடன் உருவாகிவரும் 'காளையன்' காணொளிப் பாடலின் முதற்பார்வை வெளியாகி உள்ளது.




★ மட்டு நகர் இளைஞர்களின் தயாரிப்பில் 'நான் கலைஞன்' என்ற குறும்படம் வெளிவந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. இப்படத்தில் கிரேசியன், கிறவுன்சன், டினோச், அஜிந்திரபிரசாந், ரேமி மற்றும் சிறிதரன் ஆசிரியர், இலங்கையின் wave நடன இயக்குனர் கிரிஸ்னகாந்தன் ஆகியோர் நடித்துள்ள அதே வேளை படத்தினுடைய பின்னணி இசையினை ஜேசு அவர்களும் கதை வசனம் மற்றும் இயக்கத்தினை சரேன் யூட் அன்டனும் உருவாக்கியுள்ளனர். இது இவருடைய முதலாவது குறுந் திரைப்படமாகும்.

★ எம்மவர்கள் மத்தியில் நகைச்சுவைக் குறும் படங்களின் வரவு மிகக் குறைவாக இருக்கும் தருணத்தில், வித்தியாசமான கதைக்களத்துடன் நகைச்சுவையாக அதேநேரம் சமூகத்திற்கு ஒரு சின்ன செய்தியையும் சொல்லிப் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது 'வெட்டுகொத்து' குறும் படம். கிருத்திகன், வரோதயன், கோபிரஞ்சன், மயூரப்பிரியன் நடிப்பில் கானாவரோ இயக்கத்தில் உருவான இக்குறும்படத்திற்கு அழகான முறையில் ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளார் புகைப்பட கலைஞர் நிசாந்தன். ரோஷன் நிரோஷ் படத் தொகுப்பில் தர்ஷன்ன் இசையில் உருவாகியுள்ளது 'வெட்டு கொத்து' குறும்படம்.

யாழ்ப்பாணத்தில்

# சர்வதேச திரைப்படக் கொண்டாட்டம்




யாழ்ப்பாணத்தில் இரண்டாவது சர்வதேசத் திரைப்படத்திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை நடைபெறும் இத்திருவிழாவில் 70 இற்கு மேற்பட்ட சர்வதேச பன்மொழிப்படங்கள் திரையிடப்படவுள்ளன. யாழ்ப்பாண பல்கலைக்கழக அரங்கிலும், யாழ் பொதுசன நூலக அரங்கிலும், மஜெஸ்ரிக் சினிமா திரையரங்கிலும் படங்கள் திரையிடப்படுகின்றன. இப் படங்களுக்கான நுழைவு இலவசமானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

முதலாவது தமிழ்ப்படமான கீசகவதம் வெளிவந்து 100 ஆண்டுகளும், முதலாவது பேசும் படமான காளிதாஸ் வெளிவந்த 75 ஆவது ஆண்டையும் நினைவுகூருமம் வகையில் இத்திரைப்படத் திருவிழா ஒழுங்கமைக்கப்பட்டதுள்ளதாக விழாச் செயற்பாட்டுக்குழு தெரிவிக்கின்றது.

சென்றவருடம் நடைபெற்ற திருவிழாவில் தமிழ்ப்படங்கள் குறைவாகத் திரையிடப்பட்டதுடன், அதிக பார்வையாளர்கள் கொண்டாட்டத்தை வாய்ப்பாக பயன்படுத்த தவறிவிட்டனர், இவ்வருடத் திருவிழாவானது அதிக பார்வையாளர்களை எதிர்பார்த்து ஒழுங்குகளும் உப செயலாக்கங்களுடனும் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Jaffna
INTERNATIONAL CINEMA FESTIVAL

## குறும்படப் போட்டிகள்

யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட திருவிழாவில் ஈழத்தில் படைப்பாக்கம் செய்யப்பட்ட குறும்படங்கள் திரையிடப்படுவதுடன், அவற்றுக்கு இடையில் போட்டி நிகழ்வொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பார்வையாளர்களின் வாக்குகளின் அடிப்படையில் போட்டி முடிவுகள்தீர்மானிக்கப்படவுள்ளன. சென்ற வருடம் இவ்வாறு குறுப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டமை தொடர்பில் சர்ச்சை யெழுந்தது. எனினும் இவ் வருடமும் அதே நடைமுறையிலேயே குறும்படபோட்டி நடைபெறும் என்று ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## வெற்றிமாறன் வருகை

யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட திருவிழாவில் இயக்குநர் வெற்றிமாறன் இயக்கி விருதுகளையும் பாராட்டையும் பெற்ற ‘விசாரணை’ திரைப்படம் தணிக்கை காட்சிகள் எதுவும் இல்லாமல் திரையிடப்படுகின்றது. அத்துடன் இத்திரையிடலுக்கு இயக்குநர் வெற்றிமாறன் வருகைதரவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.





## திரைப்பயிற்சிப் பட்டறை

சென்ற வருடத்தினைப் போலவே திரைத்துறை சார்ந்த பயிற்சிப்பட்டறை இவ் வருடமும் நடைபெறவுள்ளது. இந்திய திரைக் கலைஞர் சண்முகராஜா நடிப்புப் பட்டறையை முன்னெடுக்க உள்ளார். விருமாண்டி, அந்நியன் போன்ற பல படங்களில் நடித்துள்ள சண்முகராஜா ‘கூத்துப் பட்டறை’ நாடக கலைஞரும் கூட.

இப் பயிற்சி பட்டறைகளில் நடிப்பு, ஒலிக் கோர்வை, படத்தொகுப்புபோன்றபயிற்சிகள், வழங்கப்படவுள்ளன. மொத்தமாக மூன்று அமர்வுகள் நடைபெறவுள்ளன.

இப் பயிற்சிப் பட்டறையில் இரண்டு அமர்வுகளுக்கு கட்டணம் செலுத்தி பங்கேற்பவர்களுக்கு ஒரு அமர்வு இலவசமாக அனுமதிக்கப்படவுள்ளது.



## வாழ்நாள் சாதனையாளர் விருது

சென்ற வருடம் ஈழத்தில் திரைத்துறையிலும் அதுசார்ந்த செயல் மற்றும் கருத்துரு வாக்கத்திலும் சிறப்பாக செயலாற்றிய மூத்த செயற்பாட்டாளர் ஒருவரை தெரிவு செய்து வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. அந்த வகையில் சென்ற வருடம். அ. யேசுராசா அவ்விருதைப் பெற்றிருந்தார். இவ்வருடம் ஒலிப்பதிவுக் கலைஞர் பால சிங்கத்திற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படவுள்ளது.



# வவுனியா - பூந்தோட்டம் - ஸ்ரீநகர்
# அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம்




## துர்முகி வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2016

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : | 02.09.2016 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு அபிஷேக ஆராதனை ஆரம்பமாகி 10.00 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். தொடர்ந்து அம்பிகை வீதியுலாவும் இடம்பெறும். |
| வேட்டைத் திருவிழா | : | 13.09.2016 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணியளவில் மகாறம்பைக்குளம் ஆலடி சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்று அம்மாள் வவுனியா மகாறம்பைக்குளம் வீதி வழியாக சென்று பின் வழமையான கிராம வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். |
| சப்பறத் திருவிழா | : | 14.09.2016 புதன்கிழமை மாலை 07.00 மணிக்கு இடம்பெறும். |
| தேர்த் திருவிழா | : | 15.09.2016 வியாழக்கிழமை காலை 06.00 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் ஆரம்பமாகி 9.00 மணிக்கு தேர்பவனி வரும் காட்சியும் இடம்பெறும். |
| தீர்த்தத் திருவிழா | : | 16.09.2016 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் ஆரம்பமாகி 1008 சங்காபிஷேகம் நடைபெற்று மாலை சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பால்செம்பு, தீச்சட்டி, பால்காவடி, தூக்குக் காவடி, செடில்காவடி, பறவைக் காவடி, என்பன ஆலயத்தை வந்தடையும் தொடர்ந்து திரு ஊஞ்சல் பாடி தீ மிதிப்பு வைபவம் இடம்பெற்றபின் கொடியிறக்க வைபவமும் நடைபெறும். |
| பூங்காவன உற்சவம் | : | 17.09.2016 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறும். மாலை 06.00 மணிக்கு இடம்பெறும். |
| வைரவர் சாந்தி விழா | : | 18.09.2016 ... மாலை 06.00 மணிக்கு இடம்பெறும். |
| தினமும் | : | காலை 09.00 மணிக்கு அபிஷேக ஆராதனை ஆரம்பமாகி 11.00 மணிக்கு வசந்த மண்டபபூசைகள் இடம்பெற்று அம்பிகை உள்வீதி உலாவரும் காட்சிகள் இடம்பெறும். மாலை 5.00 மணிக்கு பூஜையும் 7.00 வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்று அம்பிகை உள்வீதி வெளிவீதி உலாவரும் காட்சி இடம்பெறும். |



# கரை காணுமா காவிரி பிரச்சினை?

ராஜேஸ் மணாளன்

தண்ணீர்ப் பிரச்சினையால் மீண்டும் தமிழக - கர்நாடக மாநிலங்கள் பற்றியெரியத் தொடங்கியுள்ளன. கர்நாடகத்தில் தமிழக நிறுவனங்கள், உணவகங்கள், லொறிச் சாரதிகள், கூலித் தொழிலாளிகள் அடிப்படை இனவாத அமைப்புகளால் தாக்கப்பட்டுள்ளனர். தன்னுடைய முகப்புத்தகத்தில் காவிரி நீர் பற்றி பதிவிட்ட தமிழ் இளைஞர் ஒருவரை கன்னட ரக்ஷன வேதிகே அமைப்பினர் பயங்கரமாக தாக்கி, முழந்தாழிட்டு இருத்தி மன்னிப்புக் கேட்க வைக்கும் வீடியோவும், தமிழக லொறி சாரதி ஒருவரை நிர்வாணப்படுத்தி நடுவீதியில் இருத்தி அடிக்கும் வீடியோவும் இணையத்திலும், ஊடகங்களிலும் வெளியாகி பெரும் கொந்தளிப்பை தமிழகத்தில் ஏற்படுத்தி உள்ளன.

அதேபோன்று தமிழகத்திலும் அப்பாவிக் கர்நாடகத் தொழிலாளர்கள் சில தமிழக அமைப்புக்களால் தாக்கப்பட்ட வீடியோக்களும் வெளிவந்து, கர்நாடகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இப்படி பரஸ்பரம் இரு தரப்பும் தண்ணீருக்காக அடிதடியில் இறங்கி விட்டன.




இந்தச் சண்டைகளைப் பார்க்கும் போது, இங்கே நடக்கும் குழாயடிச் சண்டைகள் தான் ஞாபகத்திற்கு வருகின்றன. காவலூரில் ஆங்காங்கே உள்ள குழாய்ப் பைப்புகளில் பட்டின சபையின் தண்ணீர் விநியோகம் காலை பத்து வரை நடைபெறும். விடிகாலை ஐந்து மணி தொடக்கம் அவரவர் வீட்டுக் குடங்கள் தம் பெயரைப் பதிவு செய்ய பைப்படிக்கு வந்துவிடும். அதாவது யாழ் மெயில் வண்டியில் வவுனியாவில் ஏறும் நண்பனுக்கு யாழ்ப்பாணத்தில் துண்டு போட்டு தமிழர்கள் ஆசனப் பதிவு செய்த அந்தக் காலக் கதை போலத்தான் இந்தக் கதையும். இவையெல்லாம் முற்கால வரவுப் பதிவு முறைகள்.

சரி அது போகட்டும்..
இப்பொழுது ஆற்றுத் தண்ணீருக்காக அடுத்தடுத்த மாநிலங்கள் அடிபடத் தொடங்கியுள்ளன. இரு மாநிலங்களுமே திராவிட மொழி பேசும் திராவிட பண்பாடு கொண்ட மாநிலங்களாம். ஆனால் ஆற்றுநீர் இவர்களை அடிபட வைத்திருக்கின்றது.

## யாருக்குச் சொந்தம்?

முதலில் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

ஆற்று நீர் எங்கு ஆரம்பித்தாலென்ன, அது எந்தெந்தப் பகுதிகள் ஊடாகச் செல்கிறதோ அந்தந்தப் பகுதியில் ஓடும் ஆற்று நீர் அந்தப் பகுதிக்கே சொந்தம். அப்படிப் பார்த்தால் எத்தியோப்பியாவிலிருந்து ஆரம்பிக்கும் உலகின் மிக நீளமான நைல் நதி எகிப்தை விட 9 ஆபிரிக்க நாடுகள் ஊடாக இது பாய்கின்றது. ஏனைய நாடுகள் தண்ணீர் தரமாட்டேன் என்று முரண்டு பிடித்தால் இத் தண்ணீரைப் பெரிதும் நம்பி வாழும் 80 கோடி எகிப்தியர்கள் என்ன செய்வார்கள்? துருக்கூடாகப் பாய்ந்து வரும் யூபிரேட்ஸ், டைகிறிஸ் நதியை துருக்கி தடுத்து நிறுத்த முடியுமா? இதனால் சிரியா, ஈரான், ஈராக் ஆகிய நாடுகளுக்கு பெரும் பாதிப்பு. இப்படியாக இந்தியாவும் பங்களாதேஷ், பாகிஸ்தான் வரை நீளும் நதிகளைத் தடுத்து நிறுத்த முடியாது.

கர்நாடகா மாநிலம் தமிழ் நாட்டை விட 1.5 மடங்கு விஸ்தீரணமானது. ஆனால் சனத்தொகையைக் கவனித்தீர்களானால் தமிழ்நாட்டு சனத்தொகையின் 80 வீதமே இங்கு வாழ்கிறார்கள். அதாவது தமிழகத்தில் சனச்செறிவு அதிகம். இதே சமயம் தமிழ் நாட்டை விட அதிக மழை வீழ்ச்சியும், தண்ணீர் வசதியும் கொண்ட மாநிலமாக கர்நாடகா திகழ்கின்றதையும் இங்கே சுட்டிக் காட்டியாக வேண்டும்.

மாநிலங்களைக் கடந்து பாயும் ஆற்று நீரைப் பகிரவிடுதலில் இரண்டு மாநிலங்களும் இழுபறிப்பட்டுக் கொள்கின்றன. கர்நாடகத் திரைப்படத் துறை தேக்கம் கண்டுள்ளதால் அதற்கு தமிழும், இந்தித் திரைப்படத்துறைகளுமே காரணம் என்ற அபிப்பிராயம் இவர்களிடையே நிலவுகின்றது. கர்நாடாகா பிரதேசத்தின் பெங்களூரில் தமிழர்கள் நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பது பூர்வீகக் கர்நாடக் குடிகளின் வாய்ப்புகளுக்கு எதிராக அமைவதாகவும் இங்கு ஒரு கருத்து நிலவுகின்றது.

இதுவே அரசியல்ரீதியான மோதல்களை உருவாக்கி வருவதோடு, காலத்திற்குக் காலம் வன்முறைகளையும் வெடிக்கச் செய்கின்றது.

மேட்டூர் அணையைத் திறந்து தொடர்ந்து பத்து நாட்களுக்கு 15 ஆயிரம் கனஅடி தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடவேண்டும் என்ற கட்டளை இப்பொழுது நாளுக்கு 12 ஆயிரம் கன அடி என்று உச்ச நீதிமன்றம் குறைத்துள்ளது. தண்ணீர் அதிகப்படியாகத் தேவையில்லை. தமிழக அரசு தண்ணீரைத் தேக்கி வைக்கின்றது என்று குற்றஞ்சாட்டுகின்றது கர்நாடக அரசு.

கொடுத்த உத்தரவை ஒரு வாரத்திற்கு நிறுத்துங்கள் என்று கர்நாடக அரசு மேல் நீதிமன்றத்தைக் கோரிய போதும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது வெடித்துள்ளது வன்முறை. அரசியல்வாதிகளின் தூண்டுதல்களுக்கு பலிக்கடாக்களாக்கப்பட்ட பொதுமக்கள். அப்பாவித் தமிழர்களை கண்மூடித்தனமாகத் தாக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

## அராஜகம் வெடித்துள்ளது

பெங்களூர், மண்டியா. மைசூர் மாவட்டங்களில் வன்முறைகள் வெடித்துள்ளன. தமிழகப் பதிவெண் கொண்ட பாரவூர்திகள், பேருந்துகள். வேன்கள், மகிழூர்திகள், இரு சக்கர வாகனங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளன. தமிழர்களின் உணவகங்கள், தொழில் நிறுவனங்கள், அலுவலகங்கள், கடைகள் என்று அங்குள்ள தமிழர்களின் சொத்துக்களை சூறையாடி இருக்கின்றது ஒரு கும்பல்.

ஒரு நாடு ஒரு குலம் ஒரு மொழி என்பது இதுதானா? அரசியல்வாதிகளின் பகடைக்காய்களாக உருட்டப்பட்டிருக்கும் இந்த அப்பாவிப் பொதுமக்கள் என்ன பாவம் செய்தார்கள்? காலங்காலமாக அவர்கள் வியர்வை சிந்தி உழைத்தவை எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன. கொழும்புக்கு உழைப்பிற்காகச் சென்ற தமிழர்கள், இனக் கலவரத்தின் போது அனுபவித்த கொடுமைகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

பிந்திய செய்தியாக கர்நாடக மக்களின் தொடர் வன்முறையைக் கண்டித்து எதிர் வரும் 16 ஆம் திகதி தே.மு.தி.க தலைமை அலுவலகம் முன்பு கண்டன உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுமென கட்சித் தலைவர் விஜயகாந்த் தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்து உள்ளார்.

## அரசியல் என்பது ஒரு சாக்கடை

இந்த நிகழ்வு அரசியல் சகதி எந்த அளவுக்கு நாற்றமடிக்கும் என்பதற்கு இன்னொரு நல்ல உதாரணம்.

சம்பா சாகுபடிக்காக 10 நாட்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் விவகாரம் ஏன் இத்தனை பெரிதுபடுத்தப்படுகின்றது?

காவேரித் தண்ணீர் பங்கீட்டுப் பிரச்சினை பெரிதாவதற்கு இப்படியும் ஒரு காரணம் முன்வைக்கப்படுகின்றது. பங்களூர் தன் தேவைக்கு காவேரி ஆற்றையே நூற்றுக்கு நூறு வீதம் நம்பியிருக்கின்றது. கர்நாடகாவின் மொத்த வளர்ச்சி காவேரிப் படுகையை ஒட்டிய பங்களூர், தும்கூர், மைசூர் ஆகிய இடங்களை மையப்படுத்தியே இருக்கின்றன. கடந்த 10 வருடங்களில் இங்கு சனத்தொகை 60 வீத அதிகரிப்பைக் கண்டுள்ளது. இதனால் தான் தண்ணீர்த் தேவைகளும் அதிகரித்துள்ளன. கர்நாடக அரசு இதற்கேற்ப நன்கு திட்டமிடாத காரணத்தினால்தான் இந்த இழுபறி, இந்த வன்முறை, இந்த அழிவு.




தமிழகத்திலிருந்து சென்ற பேருந்துகளையும், சரக்குந்துகளையும் தாக்கிய கன்னட வெறியர்கள் அவற்றின் கண்ணாடிகளில் "தமிழர்களே காவிரி நீர் கேட்கிறீர்களா? உங்களுக்கு எங்கள் சிறுநீர் வேணுமா?" என்று எழுதியுள்ளார்கள் என்கிறது இன்னொரு செய்தி.

மீண்டும் அதே கோலம். எய்தவனிருக்க அம்பை நோவானேன்? என்னதான் இரு மாநிலக் கலவரம் என்றாலும் இரு தரப்பிலும் தாக்கப்படுவதும், இரத்தம் சிந்துவதுவதும் அப்பாவி அடித்தட்டு மக்கள் தான். பணமுள்ளவர்கள் ஆட்டுவிக்கும் நூலில் சிக்கி சின்னா பின்னமாவது எப்போதும் ஏழைகளே. காவிரி பிரச்சினையிலும் அதுவே தொடர்கிறது.

## ஓய்வெடுங்கள் அரசியல்வாதிகளே


இனியும் இதே மோதல்கள் வெடிக்காதிருக்க ஆவன செய்ய வேண்டியதுதான் இப்போதைக்கு அவசியமானதும் அவசரமானதும் கூட.

ஒரு மேற்பார்வைக் குழுக் கூட்டம் அமைப்பது மிகமிக அவசியம் என்கிறார்கள். இப்படியொரு காவிரி மேற்பார்வை குழுக் கூட்டம் அதன் தலைவரும் மத்திய நீர்வளத்துறை செயலருமான சஷி சேகர் தலைமையில் புதுடில்லியில் நடைபெறவுள்ளது. அந்தக் குழு தமிழகத்திற்கு எவ்வளவு தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும் என்பது குறித்து முடிவெடுக்கும். அந்த முடிவை வருகிற 20 ஆம் திகதிக்கு முன்னர் உச்ச நீதி மன்றத்தின் மேற்பார்வைக் குழுவிடம் தெரிவிக்க வேண்டும்.

சிறிய பிரச்சினைகளை ஊதித்தள்ளி அவற்றிற்கு பூதாகரமான வடிவம் கொடுக்கும் அரசியல்வாதிகளே, கவிஞர் கபிலன் "பூக்களே சற்று ஓய்வெடுங்கள்" என்று கேட்பது போல, நீங்களும் சற்று ஓய்வெடுங்கள். ஒரு நியாயமான தீர்வை உச்ச நீமன்றம் சொல்லும்வரை பொறுத்திருங்கள். சகோதரர்களாக ஒற்றுமையாக வேலைசெய்பவர்களிடம் ஏன் மொழி பேதம், இன பேதத்தைத் தூண்டி விடுகிறீர்கள்?

காவேரி நதிப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடட்டும். அது குருதி கலக்கும் ஆறாக மாறிவிட வேண்டாம்.

சிறுகதை



# அண்ணனும் ஒரு தந்தையாக

○ கே.மதுரலட்சுமி

"ஏய்! என்ன பாக்கிறாய்? இது பெரிய கடை ரெஸ்ரோறன்ற் இங்க எல்லாம் நீ வரக்கூடாது போ..." என்ற அந்த கேக்கடை முதலாளியின் வார்த்தைகள் ஏழு வயது நிரம்பிய தீபனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவன் அம்மாவும் அப்பாவும் இருந்த காலங்களில் அவனும் தங்கையும் இதை விட பெரிய கடைகளுக்கெல்லாம் சென்று வந்தார்கள்.

விபத்தில் தன் தந்தை, தாயை இழந்தது அவனுக்கு பெரிய இழப்பாக இருந்தது. ஐந்து வயது நிரம்பிய தியா அவனது பொறுப்பில் விடப்பட்டிருந் தாள். இதை நினைத்த படி தீபன் வீதியோரமாக நடந்து வந்தான். "நான் இண்டைக்கு என்ன செய்யிறது. தியாவுக்கு பசி எழுந்திருக்கும். அவள் குழந்தை. பசி தாங்கமாட்டாள்" என்று யோசித்துக் கொண்டு சென்றவன். தன் பாடசாலையை கடக்கையில் தன் குட்டி நண்பனைக் கண்டான்.

"டேய் தீபன் ஏப்படி இருக்கிறாய் கன நாளா காணேல்ல" றோஹித்தின் குரலது.

"நான் பள்ளிக் கூடம் விட்டுட்டன்"

"ஏன்?"

"தியா குட்டிய யார் பார்க்கிறது? மாதம் மாதம் பள்ளிக்கூடக் காசும் கட்டோணும்"

"நல்லமெடா! நீ வராததால நான் தான் முதலாம் பிள்ளை"

"கூடைக்குள்ள என்னடா?"

"றொட்டி. எனக்குப் பிடிக்காது"

"அப்ப எனக்குத் தாறியா?"

"கொண்டு போ..." எத்தனையோ ஏந்தி நிற்கும் கரங்களை நிரப்பிய அவனுக்கு இன்னொருவரை ஏந்தி நிற்கும் நிலை வந்ததை எண்ணி அவனுக்கு கவலைப் படத் தெரியல்ல ஏன் எண்டால் அவனும் ஏழு வயதுக் குழந்தை தானே.

அவன் அந்த றொட்டித் துண்டுகளு டன் கதவை திறக்கையில் தங்கை தியா ஓடி வந்து இடுப்போரமாக கட்டிய ணைத்தாள். "பசிக்குது அண்ணா..."

"அண்ணா... றொட்டி கொண்டு வந்தனான் இந்தாங்கோ..." அதை வாங்கி அவள் சாப்பிட்டதை கண்ட பின் தண் ணீரைக் குடித்து தன் வயிற்றை நிரப்பிக் கொண்டான்.

"அண்ணா... புதுவருசம் வருது"

"ஓம் அம்மா. அதோட உங்கட பிறந்த நாள் வருது எண்டும் தெரியும்"

"என்ரை குட்டி அண்ணாவுக்கு எல்லாம் ஞாபகம் இருக்குது. எனக்கு என்ன வாங்கித் தருவீங்கள்"

"சட்டை வேணுமோ? இல்லை வேற என்ன?"

"எனக்கு நீங்கள் கேக் வாங்கித் தாங்கோ"

"ஓம் அம்மா"

அவனின் அந்த அன்பு, அவளுக் காவே அவன் வாழுகின்ற வாழ்க்கை... தியாவுக்காக அவன் எதையும் இல்லை யென்று சொன்னது கிடையாது. ஆனால் பிச்சை எடுக்கக் கூடாது, களவெடுக்கக் கூடாது. என்று அவன் அப்பா சொல்வதை அடிக்கடி ஞாபகப்படுத்தி மிகவும் பெருமைப்பட்டுக் கொள்வான்.

விடியற் காலையில் அவன் சீக்கிரம் எழுந்து வீட்டை விட்டு சென்றவன்.

"தியாவுக்கு கேக் வாங்கவேணும். பத்து நாள்ல புதுவருஷம். நான் கோப்பை கழுவிற வேலையை விட வேற ஏதாவது செய்ய வேணும் எண்டு எல்லா கடைகளி லும் வேலை கேட்டு ஏறி இறங்கினான். அவனது நிலையைக் கண்ட சிங்கள மனுஷன் ஒராள் (அவருக்குத் தமிழ் தெரியாது) அவனைப்பார்த்து "ஓயாட்ட வெட ஓணத" என்று கேட்டார். அவனுக்கு அது புரியவில்லை என்றாலும் அவரின் முகத்தைப் பார்த்து தனக்கு ஏதோ உதவி செய்வதற்கு கேட்கிறார் என்று எண்ணி "ஆம்" எண்டு தலையாட்டினான். அவர் அவனை ஒரு முஸ்லீம் நண்பரிடம் அறிமுகப்படுத் தினார். அவரது கடையில் அவனது சம்பளம் ஓரளவு போதுமானதாயிருந்தது. அவர் குடுத்த அந்த ஐம்பது ரூபாயை எடுத்துக் கொண்டு அதே கேக் கடைக்குள் நுழைந்தான்.

கண்ணாடிப் பெட்டிக்குள் அடைக்கப் பட்டிருந்த ஒவ்வொரு ஐட்டங்களையும் பார்த்துக் கொண்டு நெடு நேரம் நின்றான். "டேய்... டேய்..." அதே கனத்த குரல்கள். "உன்னை யார் உள்ள விட்டது. கெதியாப் போ..."

"இந்த கேக் என்ன விலை?"

"அது முந்நூற்றைம்பது ரூபா.அதை வாங்க உனக்கெங்கால காசு போ...! போ...!"

"இந்தாங்க அம்பது ரூபா, நாளைக் கும் வருவன். மிச்சம் முன்னூறு ரூபா தந்திட்டு நான் கேக் வாங்கிறன், கவனமா கேக்கை வையுங்கோ" எண்டு சொல்லிக் கொண்டு றோட்டைப் பார்த்து ஓடினான்.

இப்படியே அவன் நூற்றைம்பது ரூபா கொடுத்து முடித்து விட்டான்.

வீடு திரும்பியவன்

"தியாவிடம் கேட்டாள்"

"உங்களுக்கு என்ன விருப்பம்?"

"நான் நல்லா படிக்கோணும் பெரிய பிள்ளையா வளந்ததும் தாத்தா மாதிரி லோயரா வரோணும் அண்ணா. உங்களை கஷ்டப்படுத்தாம இருக்கோணும்"

"அண்ணா அம்மாவும் அப்பாவும் எங்கை?"

"சாமிட்ட போட்டினம் அம்மா..."

"ஏன் அண்ணா? சாமியிட்ட போனவை"

"சாமிக்கு றொம்ப பிடிச்சா அவர் தன் கூடவே வச்சிருப்பாரம்மா"

"அப்போ அவருக்கு எங்களைக் பிடிக் கேல்லையோ அண்ணா?"

"பிடிக்கும். நீ தாத்தா மாதிரி லோயரா வந்தா சாமிக்கு பிடிக்கும்" அவளின் பிஞ்சுக் கரங்களை தனது கன்னத்தில் வைத்து. நிதானமாகப் பதில் சொன்னான் தீபன்.

அவன் அந்த கேக் கடையில் முன் னூறு ரூபா கொடுத்து முடித்திருந்தான்.

மறுநாள் அவனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அவன் வேலை செய்யிற கடை முதலாளி சுகயீனமென்று கடை யைப் பூட்டிவிட்டார். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. விடிஞ்சா ஜனவரி ஒன்று. புது வருஷப் பிறப்பு. தியாக்குப் பிறந்த நாள். கேக் வாங்க வேணும்.

கேக்குக்குக் கொடுக்க வேண்டிய மீதிக் காசு ஐம்பது ரூபாவிற்காக அவன் நாயாக அலைந்தான்.

* * *

அவன் கேக் வாங்கவேண்டிய கடையில் புது வருட வியாபாரம் அமோகமாக நடந்து கொண்டிருந்தது. ஏறத்தாழ எல்லா பொருட்களும் விற்றுத் தீரத் தொடங்கிவிட்டது. பாத்துரூமிற்குப் போய் வந்த கேக்கடை முதலாளி கண்ணாடிப் பெட்டியில் வைத்திருந்த ஓடர் கேக்கை காணாது அதிர்ச்சியடைந்தார்.

"பெடியள்.....!"

"ஓம்...! அண்ணை?"

"கண்ணாடிப் பெட்டிக்கையிருந்த ஓடர் கேக் எங்கை?"

"இப்பதானண்ணை ஒருத்தர் காரிலை வந்து வாங்கிக் கொண்டு போறார்"

"அது ஓடர் கேக்கெல்லே? பாவம்! அந்தப் பெடியன் ஏழு நாளுக்கு முன்னர் ஓடர் தந்தது"

கேக்கை வாங்கிக் கொண்டு காரில் ஏறப்போனவரை நோக்கி முதலாளி ஓடிப்போனார். அவரிடம் விபரத்தைச் சொல்லி கேக்கைத் திருப்பி வாங்கிக் கொண்டு வந்தார்.

* * *

கேக்குக்குத் தேவையான மிகுதி ஐம்பது ரூபாவை சேர்க்கின்ற முயற்சியில் தீபன் அலைந்து திரிந்து கடைசியில் கார் ஒன்றைத் துடைக்கும் வேலை ஒன்றைப் பெற்றுக் கொண்டான்.

வேறு எந்த சிந்தனையுமில்லாமல் காரைத் துடைத்துவிட்டு புழுதி படிந்த உடுப்போடு நின்ற தீபனை கார் முதலாளி தூரத்தில் நின்று பரிதாபமாகப் பார்த்துக் கொண்டார். கிட்ட வந்து தீபனை அழைத்து நூறு ரூபாவை அவன் கையில் கொடுத்தார்.

நிற்க நேரமில்லை. கேக் கடையை முதலாளி பூட்டிப்போடுவார். அவன் வியர்த்துக் கொட்ட ஓடிவந்தான்.

"மன்னிச்சுக் கொள்ளுங்கோ", தீபன் பணத்தை நீட்டியபடி முதலாளியைப் பார்த்தான். கேக் பெட்டியுடன் மிகுதி ஐம்பது ரூபாவை வைத்துக் கொடுத்த முதலாளியிடமிருந்து அவசர அவசர மாகப் பெற்று மார்போடு அணைத்துக் கொண்டு வீட்டிற்கு ஓடினான் தீபன். "பாவம் தியா பாத்துக்கொண்டு நிற்பா" அவன் மனம் எண்ணிக்கொண்டது.

"கிரீச்... கி.. ரீ.. ச்........." திடீரென வாகனம் நிறுத்தப்பட்ட சத்தம் அது. தீபன் வாங்கிச் சென்ற கேக்கும் பெட்டியும் றோட்டில் சிதறிக் கிடந்தது. அவன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

கேக் கடை முதலாளி பாய்ந்து வந்து அவனைத் தூக்கிக் காரொன்றில் ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார். கார் மட்டுமல்ல கேக்கடை முதலாளியின் சிந்தனையும் மின்னல் வேகத்தில் பறந்தது.


"இவ்வளவு சொத்து எனக்கிருந்தும் அதை அனுபவிக்க பிள்ளையள் இல்லையே! இது மாதிரி பொறுப்பான பிள்ளையொண்டைத் தத்தெடுத்துக் கொண்டால்....!!! மனுசியோடை கட்டாயம் யோசிக்கவேணும்" அவர் மனம் அமைதியானது.

* * *

"இன்னும் கொஞ்சத்திலை அண்ணா கேக்கோடை வருவார்" நித்திரை கொள்ளாமல் வீட்டுப்படியில் உட்காந்திருந்தாள் தியா.

**கரவெட்டி பிரதேச செயலகம் பாட சாலை மாணவர்களுக்கான சிறு கதைப் பயிற்சிப்பட்டறை ஒன்றை இரண்டு வாரத்திற்கு முன் நடத் தியது. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றிய மாணவர்கள் பயிற்சி நிறை வில் தாம் எழுதிய சிறுகதைகளை சமர்ப்பித்திருந்தனர்.**

**அவர்களில் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.மதுர லட்சுமி எழுதிய சிறுகதை இங்கு பிரசுரமாகின்றன.**



# அலம்பல் ஆச்சி

○ செல்வி

என்ரை சந்நிதியானே.. இன்னும் என்ன அறுப்பெல்லாம் பாக்க வைக்கப் போறாய்? ஒட்டக் கூத்தரை விட அறிவாளியள் இருக்கிற நாட்டிலை பிறந்ததுக்கு குடுத்துவைச்சிருக்கிறன். நாங்கள் எங்களை விளங்கிவைச்சிருக்கிறமோ இல்லையோ எதிரி நல்லா விளங்கி வைச்சிருக்கிறான். எங்கடை அழிவைச் சொல்லுற புத்தகத்தை எங்களையே விளம்பரப்படுத்த வைச்சான் சிங்கன். வெட்டி ஒட்டுற கலாசாரமொண்டுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறம் எண்டதை நினைக்கத் தான் மனசு புழுங்குது. தன்ரை போர் அனுபவங்களை எழுதுற எவனெண்டாலும் தான் ஒரு சோத்து மாட்டுப் படையோடைவெண்டனானெண்டு எழுதுவானா? எதிரி பலமானவனெண்டா தானே அவன்ரை வெற்றி அர்த்தமுடையதாகும். அட தம்பியவை.. எங்கடை தலைவரைப் பற்றி அவன் சொல்லியா தெரியோணும்? அவன் ஏன் சொல்லியிருக்கிறானெண்டு வாசிச்சனிங்களோ? வெட்டி ஒட்டி படிக்கிற படிப்புப் படிச்சா உப்பிடித்தான். இனி நீங்கள் திருப்பியும் ஆயுதம் தூக்கக் கூடாது எண்டதை உங்களுக்கே சொல்லுற வேலை அது. அவன் தன்ரை படையின்ரை பெருமையையும் தன்ரை மக்களின்ரை பெருமையையும் சொல்லியிருக்கிறான். ஆனா, தலைவரைப் பற்றி இரண்டு வரிசொன்ன உடனை நாங்கள் மற்ற பந்தியள் எல்லாத்தையும் மறந்துபோனம். எங்களின்ரை உளவியலை சரியாய் கணிச்சு வைச்சிருக்கிறான் அவன். அவன் சொல்லவந்ததை ஏன்? எதுக்கு எண்டு பூராயம் புடுங்காமை அவன்ரை புகழிலை மயங்கிப்போட்டம். அப்பிடியான ஓராள் தான்ராப்பா தலைவரா இருக்கஏலும். இப்ப ஒருத்தனும் அப்பிடி ஒழுங்கானவன் இல்லை எண்டு உள்குத்து அடிச்சிருக்கிது. அப்ப இனி போராடேலாது எண்ட எதிர்மறை உளவியலை எங்களுக்கே படிப்பிக்கிது ஆள்.

உண்ணானை ஒருக்கா யோசிச்சுப் பாருங்கோ.. அந்த புகழுரை மட்டும் இல்லாட்டி, அவன் தன்ரை வீரதீர செயல்களை சொல்லேக்கை கோபமெல்லோ வந்திருக்கோணும். உன்னை எப்பிடி அடிச்சுத்துரத்தினவன் எண்டு சொல்லுறாண்டாப்பா.. வேறைஆரையும் அடிச்சுத்துரத்தின கதையில்லை அது. உன்ரை மண்ணிலை நீ எப்பிடி தோற்கடிக்கப்பட்டாய் எண்டு சொல்லுற சரித்திர நூல் அது. சரி. கோபம் வாற அளவுக்கு உணர்வில்லாத ஆக்களெண்டா.. கவலையெண்டாலும் வந்திருக்கோணும். எடகோதாரி. பாலச்சந்திரனை அவங்கள் காணவே இல்லையாமே. புகழுரையை ஏற்றுக்கொள்ளுற நீங்கள், மிச்ச எல்லாத்தையும் ஏற்றுக் கொண்டதாகதானே அர்த்தம்? நாங்கள் தோத்துப் போனதுக்கு எங்கடை ஆதரவில்லாததுதானெண்டு சொல்லியிருக்கிறான். அவன்ரை படைக்கு பெத்ததுகள் போராடச் சொல்லி குடுத்ததுகளாம். நாங்கள் என்னத்தைக் கிழிச்சம் எண்டு அவன் கேக்கிறான். பிள்ளை பிடிக்கிறாங்கள் எண்டு கோடியுக்கை பிள்ளையளை ஒளிச்சதுகள் தான் கொடுப்புக்குள்ளை சிரிச்சுப்போட்டு தலைவரை போற்றினதை மட்டும் எடுத்து கும்மாளமடிச்சிட்டு நல்லிணக்கத்துக்கு கொடி பிடிக்கிறது. ஆனா.. எத்தினை தாய்மார் தங்கடை பிள்ளையளை நாட்டுக்காக குடுத்திட்டு நிக்கிதுகள். எத்தினை பிள்ளையள் தங்கடை வாழ்க்கையளை எங்கடை விடுதலைக்காக குடுத்துப் போட்டு இண்டைக்கு நடுத்தெருவிலை நிக்கினம். அவையின்ரதியாகங்களை கொச்சைப் படுத்துறவனின்ரை புத்தகத்துக்கு நாங்கள் கட்டணமில்லாமை விளம்பரம் செய்து கொண்டிருக்கிறம். ஒரு படைவீரனா தலைவரை கொண்டது தான் தன்ரை வாழ்க்கையிலை கிடைச்ச மிகப்பெரிய மகிழ்ச்சியெண்டுறான். இசைப் பிரியாவில இருந்து சின்ன பாலகன் வரைக்குமான எல்லா கொடுமைகளையும் செய்த ஒருத்தன்ரை புத்தகத்தை கொளுத்துற அளவுக்கு வீரமில்லாட்டியும் அதை புறக்கணிக்கிற அளவுக்கு நெஞ்சுரம் இருக்கோணும்.

ஒரு காலத்து வரலாற்றை பேரினவாதம் மிகச் சிறப்பா வடிவமைச்சு முடிச்சிருக்கிது. போர்க்குற்றங்களோ.. இனப் படுகொலையோ செய்யாத ஒரு போரை நடத்தி முடித்திருப்பதாக பதிஞ்சாச்சு. புகழுரையாலை மயக்கி தமிழரும் ஏற்றுக் கொள்ளினம் எண்டமாயையும் உருவாக்கியாச்சு. இனியென்ன உள்ளக விசாரணை, கலப்பு விசாரணை என்ன.. சர்வதேச விசாரணை வந்தாக் கூட அவங்கள் சமாளிச்சுப் போடுவாங்கள்.

இந்த விறுத்தத்திலை நல்லிணக்கமாம். தமிழன் மானம், வெக்கம், ரோசம் எல்லாத்தையும் கழற்றியெறிஞ்சு போட்டு கை குடுப்பான். ஆனா தங்கடை பிள்ளையளை பயங்கரவாதத்திற்கு எதிரான போரிலை பறிகொடுத்த சிங்களத் தாய் கைகுலுக்குவாவோ? நீங்கள் மாத்தையா மகிந்தாவைப் புகழ்ந்தாலென்ன.. திரு. மைத்திரி அவர்களை துதித்தாலென்ன அதுகள் மசியாதுகள். அதுகளை குளிர வைக்கிற முயற்சிகளிலை ஒண்டாவும் இந்த நந்திக்கடல் புத்தகத்தை பாக்கலாம். அவன் ஒரு கல்லிலை எத்தினை மாங்காய் அடிச்சிட்டான்.

நாங்கள் 'கூத்தமைப்பை' நக்கலடிச்சு நக்கலடிச்சு அகமுரணை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறம். என்னதான் கூட்டமைப்பு அரசுக்கு வால் பிடிச்சாலும் அது நடிப்பெண்டது அவங்களுக்கு விளங்கியிருக்கு. எங்கையோ ஓரிடத்திலை கூட்டமைப்பு இனப்பற்றை காட்டுமெண்டு சொல்லுறான். பாப்பம். சரி.. நான் கனக்க கதைச்சுப் போட்டன்.. முருகனிட்டை ஒருக்கா போட்டுவாறன்.



○ தனு

# ஏழைகளின் அப்பிள் எட்டா விலையில்

வெள்ளைக்காரர்களுக்கு அப்பிள் எப்படியோ, அப்படியே நமக்கு வாழைப்பழம். அவர்கள் சாப்பிட்ட பின் ஒரு துண்டு அப்பிளை வாயில் வைப்பது போல, நாங்களும் சாப்பாட்டுக்கு பின் வாழைப்பழம் என்று வழக்கப்படுத்திக் கொண்டவர்கள். சாப்பாட்டில் மட்டு மல்ல, தமிழர்களின் பண்பாடு சார் நிகழ்வுகளிலும் வாழைப்பழம் பிரதான அடையாளப் பொருள். திருமண வைபவமோ, மரணச் சடங்கோ, கோயில் பூஜைகளோ இப்படி எந்த நிகழ்வும் வாழைப்பழம் இல்லாமல் நடப்பதே இல்லை. இப்படி இரட்டைப் பிறவிகளாக ஒன்றாக இருக்கும் வாழைப் பழத்தையும் தமிழர்களும் அண்மைய நாட்களாகப் பிரிந்து செல்வது போல எட்ட நின்று கொள்கிறார்கள். காரணம், விலை வாசிதான். வாழைப்பழங்களில் கதலி இனம் தான் அதிகமாக கோயில்களிலும், வீடுகளிலும் புழக்கத்தில் இருக்கும். இப்போது ஒரு கிலோ கதலிப் பழத்தின் விலை 180 ரூபா. அதிலும் நல்ல பெரிய பழமாக இருந்தால் 200, 220 என விலை ஏறும். அண்மைய சில நாள்களாகச் சந்தைகளில் கதலிப் பழத்தைக் கண்ணால் காண்பதே ஒரு ஆச்சரியமான விடயமாக மாறிவிட்டது.

வழக்கமாக மழைவீழ்ச்சி குறைவடைந்தால், அல்லது கடும் மழையால் வாழைகள் சரிக்கப்பட்டால் இப்படியான திடீர் விலையுயர்வு வருவதுண்டு. ஆனால் கடந்த காலங்களில் நல்ல மழை வீழ்ச்சி. வாழைகளுக்கும் பெரிய சேதாரமில்லை. இந்த நிலையில் திடீரென ஏழைகளின் அப்பிள் பணக்காரர்களுக்கு மட்டுமே கிடைக்கும் பழமாக மாறிப் போனதெப்படி? ஒரு நாளும் இல்லாத திருநாளாக அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பா ணத்துக்கு வாழைப்பழத்தை இறக்குமதி செய்யுமளவுக்கு நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. சீப்பு சீப்பாக அர்ச்சனைத் தட்டங்களில் இருந்த வாழைப் பழங்கள் எல்லாம், தனித் தனிப் பழங்களாக வருவதைக் கண்டு கடவுளர்கள் கூட இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

வாழைப்பழ விலையேற்றத்துக்கு தோட்டக்காரர்கள் சொன்ன விடயங்கள் விலையேற்றக் காரணங்களைத் தெளிவு படுத்தின.

"தற்பொழுது ஒரு வித்தியாசமான காலநிலை ஏற்பட்டுள்ளது. அதனால் காற்றும் பலமாக இருக்கிறது. இந்தக் காற்று வாழை மரத்தின் குரல்வளையை அடைத்து விடுகின்றது. அதனால் குருத்து அடைபடுகின்றது. அத்துடன் வளர்ந்த வாழைகளில் குலை வருவதில் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் பல தோட்டங்களில் வாழைகள் குலைகள் இல்லாமல் மொட்டையாக நிற்கின்றன. இப்படி குலை வருவதில் ஏற்பட்ட தாமதமே திடீர் விலையேற்றத்துக்கு முக்கிய காரணம். அத்துடன் கோயில் திருவிழாக்கள் களை கட்டியுள்ளன. வெளிநாட்டுக்காரர்களும் வந்து நிற்பதால் மனமாக செலவழிக்கிறார்கள். முன்பெல்லாம் இரண்டு வாழை கட்டும் இடத்துக்கு இப்போது நாலைந்து வாழைகள் என்று கட்டுகிறார்கள். கலியாணவீடு, சாமத்தியச் சடங்கு போன்ற மங்கல நிகழ்ச்சிகளும் அதிகரித்திருக்கின்றன. அவற்றுக்கும் அதிகளவான வாழைக் குலைகள் கேட்டு வருகிறார்கள். இப்படி தேவை அதிகமாக உள்ள காலப் பகுதியில், குலை வரத்து அடைபட்டு போனதாலேயே வாழைப்பழங்களின் விலை இப்படி தாறுமாறாக ஏறிவிட்டது" என்று சொன்னார் நீர்வேலியைச் சேர்ந்த வாழைத் தோட்டச் செய்கையாளரான சுமன்.

இனி எப்போது மீண்டும் ஏழைகளின் அப்பிளாக மலிவு விலைக்கு வாழைப் பழம் இறங்கும் என்று காத்திருக்கிறார்கள் பலர்.

(05 ஆர் பக்கதொ ர்ச்சி...)

# எழுக தமிழும் திர்ப்புரட்சியும்

## தோல்வியடைந்தவர்களின் பேரணி !

தோல்வியடைந்தவர்கள் என்று சொல்வது மக்களையல்ல. அரசியல் ரீதியில் தோற்றவர்கள் பலர் இந்த எழுக தமிழ் அணியில் திரண்டிருப்பது தான் ஆச்சரியம். சித்தார்த்தனை தவிர மற்றவர்கள் தோல்வியடைந்தவர்கள்.

மகிந்த ராஜபக்ஷ கொஞ்ச காலத்திற்கு முதல் ஒரு நடைப் பேரணியை நடத்தியிருந்தார். அவரும் ஒரு தோல்வியடைந்தவர் தான்.

இங்கே எழுகின்ற கேள்வி என்னவென்றால், அவரவரும் வைக்கின்ற கோரிக்கைகள் நியாயமானதாக இருக்கின்றன. ஆனால் பேரணிகளை நடத்துபவர்களின் அரசியல் தான் இங்கே உதைக்கிறது.

ஆக. நீங்கள் பேரணியை நடத்துங்கோ நடத்தாம போங்கோ, அடுத்த தேர்தலில் நில்லுங்கோ நிக்காமப் போங்கோ, எங்களுக்கு மக்களின் உரிமையும், பாதுகாப்பும், இருப்பும் அவர்களின் கோரிக்கைகளுக்கான வெற்றியும் தான் முக்கியம்! ஆங்!

05

உமா சந்தோஷ்



அந்தக் காலத்துச் சேட்டைகள்

# ‘மைனர் மயிலன்’

அவன்ரை தம்பின்ரை வார்ட்டுக்குப் பொறுப்பான அந்த நேர்ஸிற்குப் பேர் மீமா. பால் தோத்துப் போறமாதிரி அவள் அவ்வளவு வெள்ளையாம். அவள் வடமராச்சியிலை நெல்லியடியிலை இருந்துதான் வாறவள். ஆரம்பத்திலை மீமா மைனரைக் கணக்கெடுக்கேல்லை. ஆனால் மைனருக்குத் தன்ரை கெட்டித் தனத் திலை நம்பிக்கை இருந்திது. கொஞ்சங் கொஞ்சமா மீமான்ரை வீட்டு விபரங்களையெல்லாம் அவள் அறியாமலே, அவளிட்டையே கேட்டு ‘அப்டேற்’ பண்ணிப்போட்டான்.

அதிலை ஒரு முக்கிய விபரம் மீமான்ரை அப்பா, கன நாளா படுத்த படுக்கையிலை இருக்கிறார் எண்டுதான். தம்பிக்காரனை வருத்தம்பாக்கவாற தன்ரை பக்கத்து ஆக்களும், தம்பி பெண்சாதியின்ரை பக்கத்து ஆக்களும் கொண்டுவாற பழங்க ளிலை, நல்லதாப் பாத்து மீமாவுக்கு நீட்டிறதும், அவள் வேண்டாமெண்டு ‘பஸ்’ பண்ணிறதுமா, இரண்டு கிழமை போக, தம்பிக்காரனுக்கு வந்த நெஸ்ட மோல்ட் ரின்னிலை ஒண்டை எடுத்துக் கொண்டு நெல்லியடிக்குப் போனான் மைனர். மைனரைப் பாத்து கலங்கிப் போனார் மீமான்ரை அப்பா. மைனரும் விடேல்லை. அவற்றை கையைப் பிடிச்ச படி முகத்தை துடைச்சு, துடைச்சு அழுகிற மாதிரி நடிச்சான். ஆறுதல் சொல்லிப் போட்டு பேசாமை வந்திருந் திட்டான்.

சினிமாப் படத்திலை வாற மாதிரி மீமாக்கு விழுந்தது நெத்தி அடி. மற்ற நாள் டியூட்டிக்கு வந்த மீமா, மைலனை ஏறெடுத்தும் பாக்கேல்லை. மைனர் கேட்ட கேள்விக்கு மீமா மௌனத்தாலை மறுமொழி சொன்னாள். மீமா என்னெண்டு சுருண்டாளெண்டு தெரியேல்லை. அந்தண்டு ஆஸ்பத்திரி தேத்தண்ணிக் கடையிலை ஒண்டா இருந்து சாப்பிட்டதைக் கனபேர் கண்டவை. வருத்தம் பார்க்க வந்தவை கொண்டு வந்த தோடம்பழத்தையும், வாழப்பழத்தையும், அவன்ரை தம்பி சாப்பிட்டதிலும் விட மைனரும் மீமாவும் சாப்பிட்டது தான் கூட. மைனற்றை தம்பி சொல்லி அழுத கதை இது.

மைனற்றை ஊரிலை இருந்து நெல்லியடியிலை சம்பந்தம் செய்த கோஷ்டி ஒண்டு மைனற்றை தம்பியை வருத்தம் பாக்க வந்த இடத்திலை தான் மீமாக்கு மைனற்றை குட்டு வெளிச்சிது. மைனற்றை குணந்தெரியாமை மாட்டுப் பட்டுப் போனாள் எண்ட விபரம் பிறகு தான் அவளுக்குத் தெரிஞ்சிது. பிறகு மைனரிட்டை இருந்து கழற அவள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

கடைசியா ஆஸ்பத்திரிப் பெரிய வார்டன் தான் பிணக்கு வெட்டி விட்ட வராம். ஆனாலும் அவளும் அவ்வளவு நல்லவளாத் தெரியேல்லை. அவளும் கொஞ்சம் பிசகு போலத்தான் கிடக்கு. ஏனெண்டால் அவளும் சம்மதிச்சுத்தானே ஆஸ்பத்திரிக்குக் கிட்ட இருக்கிற கடற்கரை,கோயில், குளம் எண்டு ஒண்டும் விடாமல் அவனோடை சுத்தியிருக்கிறாள். அவனோட “ரைம் பாஸ்” பண்ணியிருக்கிறாள். மைனர் லேசுப்பட்டவனே? அவன் மீமாவை அளையாமல் விட்டிருப்பனெண்டு நினைக்கிறியளே? ஆனாலும் அவள் சரியான கெட்டிக்காரி போல. தன்ரை தமையன், தம்பிமாரைக் கூட்டிக் கொண்டு வந்து மைனரை இறுக்கிப் போட்டாள். தம்பியார் ஆஸ்பத்திரியாலை துண்டு வெட்டவும் மைனர் தப்பினேன் பிழைச்சேனெண்டு ஓடி வந்திட்டான்.

ஊருக்கு வந்ததிலை இருந்து ஒரே மயிலிட்டிச் சுறாக்கதைதான். அந்தக் காலத்திலை சுறாக்குப் பேர்போன இடம் மயிலிட்டியெண்டு எல்லாருக்கும் தெரியும். அதை வைச்சுக் கொண்டே சபை சந்தியிலை படத்தை ஓட்டத் தொடங்கீட்டான் மைனர். ஆஸ்பத்திரி யிலை நிக்கேக்கை காலையிலை கக்கூசிருக்க மயிலிட்டி கடற்கரைக்கு போறதெண்டும், தான் ஒரு பக்கத்திலை இருக்க சுறாக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கடற்கரையிலை விளையாடுறதைப் பார்த்ததெண்டும், சுறா, குட்டிகளுக்கு பால் குடுக்கேக்கை தான் கிட்டப் போய் கரைச்சல் குடுக்காமல் எட்ட நிண்டு பார்த்ததெண்ட கதையையும் அவன்ரை “கீலா” எண்டு அறியாமல் கந்தையா அண்ணை முழுசா நம்பிட்டார்.

“எட விழுவானே! ஓரிரண்டு சுறாவை கல்லாலை தன்னும் எறிஞ்சு விழுத்தாதே யேண்டா! கருவாடு தன்னும் போட்டிருக் கலாம்” எண்ட கந்தையரின்ரை குரலை இடைமறித்தான் மைனர்.

“அண்ணை! உனக்கு வந்த ஐடியாத் தான் எனக்கும் வந்தது. அதுக்கு என்ரை மனச்சாட்சி இடம் குடுக்கேல்லை. அதாலை மெல்லக் கையை விட்டிட்டன். அதோடை அதுகள் கரையில வந்து நிலத்திலை விழுந்த பனம் பழங்களை எடுத்துச் சூப்பிற வடிவைக் கண்டால், ஆருக்குச் சாக்காட்ட மனம் வரும்?”

மைனற்றை கதையைக் கந்தையாண் ணை சரியெண்டு ஆமோதித்தார்.

அப்பலோவிலை சந்திரனுக்குப்போன ஆம்ஸ்ரோங், வாற வழியிலை உழுந்தை அரைச்சு வடை சுட்டுத் திண்டவர் எண்டது மாதிரியாகத்தான் இந்தக் கதையையும் எண்டது கந்தையருக்கு எங்கை தெரியப்போகுது.

(சேட்டைகள் தொடரும்...)

# பொதி செய்யப்படும் திருமணக் கனவு

## மாயாவின் டயரி

அமைதியின், ஆனந்தத்தின் கதவுகள் எங்கே இருக்கின்றன என்பதைத் தேடுவதே வாழ்க்கையின் பெரும் பகுதியாக இருக்கின்றது. முரண்பா டான அத்தியாயம் ஒன்றை படிப்பது போல் இருந்தது வாழ்க்கை. முட்டாள்கள் என் கதையை திரிவுபடுத்தக் கூடும். புத்திசாலிகள் என்னை முட்டாளாக்கக் கூடும். அதற்குள் எனக்கென ஒரு கதையை எழுதி வைத்துவிட்டு காலத்தின் கையில் என் கொடும் விதியை ஒப்படைத்து விட வேண்டும்.

சமீபகாலமாகவே எனக்குள் எதிர்பார்க்காத நேரங்களில் ஒரு குரல் ஓங்கி ஒலிக்கும். அந்தக் கணம் எதிர்பாரா ஒரு மனவிரக்தி மனதிற்குள் வந்து போகும். அதில் ஒன்று திருமணம் பற்றிய விரக்தி. இருபதுகளில் தொடங்குகின்ற இந்தப் பயம் அதற்கான அடைவு வரை நீடிக்கின்றது. அது எங்களுடைய விருப்பு சார்ந் தது அல்ல. அது சமூக அடுக்குகளின் பல்வேறு தாக்கங்களிற்கும் உட்பட்டது.

தோழன் ஒருவன் “இங்கிருக்கும் படித்த, அழகான பெண்கள் அனைவரும் வெளிநாட்டுப் பொதிகள்” என்று குறைபட்டான். அவன் கூற்றில் இருக்கும் யதார்த்தம் உண்மையிலேயே உறைத்தது. மிகுந்த சிரமங்கள் மத்தியில் படிக்கின்றோம். பட்டம் ஒன்றைப் பெறுகின்றோம். பின் அந்தப் பட்டத்தை கொண்டு சமூகத்தை வழிநடத்துகின்றோமா? இல்லையே. அந்தப் பட்டத்தை வெளிநாட்டு திருமண வாழ்வொன்றைப் பெறுவதற்கான தகுதியாகப்பயன் படுத்துகின்றோம். எனில் எம்முடைய இலட்சியங்கள், கனவுகள் எல்லாமே திருமணத்தில் புதைக்கப்படுகின்றன என்றுதானே அர்த்தம்.

அது ஒரு புறம் இருக்க இந்த வெளிநாட்டுத் திருமண வாழ்க்கை எமக்கு ஒரு சௌகரியமான வாழ்வைத் தருகின்றதா? என்னுடைய உறவுக்கார பெண் ஒருத்தி ஒரு வருடத்திற்கு முன்பு திருமணம் முடித்து இரண்டு வருடங்களின் பின் லண்டனிற்கு சென்றிருந்தாள். திடீரென அவள் ஊருக்கு திரும்பி இருந்தாள். அந்த வாழ்க்கையை இதற்கு மேலும் தன்னால் தொடர முடியாது என்று இங்கேயே குடும்பத்துடன் தனித்திருக்கத் தயாராகிவிட்டாள். அவசரப் பட்டு வெளிநாட்டு வாழ்விற்கு ஆசைப்பட்டு பிள்ளையின் வாழ்வை கெடுத்து விட்டோமே என்னும் துயரத்தில் அந்த பெற்றோரைக் காணும்போதெல்லாம் மனதிற்குள் ஏதோ பெரும் பாரமொன்று வந்து அழுத்தும்.

இதே மாதிரியான நிலை இன்னொரு பெண்ணிற்கு வந்து விடக்கூடாது.

வெளிநாட்டு வாழ்வொன்றுதான் நமக்கான வாழ்வா? அதிகபட்சம் அடைபட்ட ஒரு வாழ்க்கை. அதை நோக்கியே ஓடிக் கொண்டிருக்கின்றோம். அதை அடைந்து விட்டால் பெரும் சாதனை செய்தது போல் ஒரு போலியான திருப்தியை நம்மீது போர்த்திக் கொள்கின்றோம். அது ஒரு மாயையான வாழ்வென்று அறியாமலேயே வெளிநாட்டு வாழ்வின் மீதான ஈர்ப்பு அதை நோக்கியே நம் விருப்பங்களை, தெரிவுகளை குவித்துக் கொள்ளக் காரணமாக இருந்து விட்டது.

யாரோ ஒருவர் நமக்கான நன்மைகளை பெற்றுத் தருவார். யாரோ ஒருவர் நம்முடைய உரிமைகளை மீட்டுத் தருவார் என்றபடியே காத்துக் கொண்டிருக் கின்றோம். நமக்காக நாமே எப்போது குரல் எழுப்புவது? மலாலாவும் அருந்ததி ராயும் கூட நம்மைப் போல சாதாரணமானவர்களாகத்தான் பிறந்தார்கள். தங்க ளுக்காக மட்டுமன்றி மொத்த சமுதாயத்துக்காகவும் குரல் எழுப்பவில்லையா? ஏன் நம் குரல்கள் மட்டும் அடைத்துப்போயின?

திருமணம் பற்றிய பேச்சுக்கள் எழும்போதெல்லாம் என்னுடைய இலட்சி யங்கள் பற்றி உட்கார்ந்து பேசுவதற்கான அழைப்பை விடுக்கின்றேன். எனக் கான வாழ்வை குறைந்த பட்சம் நான் கற்ற கல்வியின் பயனுடன் வாழ வேண்டும். அதற்கான என் குரல் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

மௌனிக்கப் பட்டவைகளும் , கூர்ந்து கேட்கப்படாதவைகளுமே உண்டு. தவிர குரலற்றவை என்று எதுவுமில்லை

# குட்டீஸ் பரிசுப் பொதி - 06

குட்டீஸ் பக்கம்

முடிவுகள்

## வெற்றியாளர்கள்

- கு.ஆதிகேசவன்
  தரம் - 06
  யா/ஹாட்லிக் கல்லூரி
  பருத்தித்துறை.
- ம.அபிசாந்த்
  யா/திருவடிநிலை சைவ
  தமிழ் கலவன் பாடசாலை
  சுழிபுரம்.

✪ 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கே நடைபெற உள்ளன?

**ஜப்பான் நாட்டில்**




# ஆசிய நாடுகளில் தமிழ்ப் பெண்ணியச் செயற்பாடுகள்

இன்று நாம் வாழும் பூகோளக் கிரம ஒழுங்கில் மக்களிடையே நீதி, சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தி சுபிட்சமான வாழ்வைக் கட்டமைப்பதனை இலக்காகக் கொண்ட சமூகமாற்ற செயற்பாடுகள் இடம் பெறுகின்றனவா என்று கேட்டால் இல்லை என்று ஆணித் தரமாகக் கூறலாம். இச்சூழமைவில் சமகால உலக நடத்தையைநெறிப்படுத்து வதில் ஆர்வமுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந்நிலைமையை மாற்றிய மைப்பதற்கு வலுச்சேர்க்கும் விதத்தில் பங்களிப்புச் செய்ய முற்சிப்பது இன்றிய மையாததாகும். இச் சமூகமாற்றப்பணி இடத்திற்கிடம் மாறுபட்ட கால, இட சூழமைவு குறித்த புரிதலுடன் கூடிய மாற்றத்தை நோக்கிய நுணுக்கமான நகர்வையும் வேண்டி நிற்கின்ற ஒரு பாரமான குறுங்கால, இடைக்கால, நீண்ட காலச் செயற்பாடாகும்.

இப் பின்னணியில் இலங்கை, இந்திய மற்றும் மலேசியப் பெண்களின் பெண் ணியச் செயற்பாடுகளின் நோக்கு நிலை குறித்த ஒரு கருத்தை இப்பதிவு கதையா டலுக்கு விடுகின்றது. பெண்ணியல் செயற்பாட்டாளர்களிடையே அதிகமாகக் கதையாடலுக்குட்படும் ஒரு விடயமாக ஆண் மேலாதிக்கம் குறித்த கருத்தியல் காணப்படுவதனை மேலோட்டமாக அவர்களது செயற்பாட்டை அவதானிக் கும் எவரும் கண்டு கொள்ளலாம்.

## விவாக, விவாகரத்து பிரச்சினைகள்

உதாரணமாக விவாக, விவாகரத்து சார்ந்த குடும்பப் பிரச்சனைகளை எடுத்துக் கொண்டால் பிரித்தானியா போன்ற நாடுகளில் ஒரு குடும்பத்திற்கான வீடு, மருத்துவம், கல்வி என்பவற்றிற் கான பொறுப்பை அரசு ஏற்றுள்ள நிலை யில் விவாகரத்து என்று வருகின்ற போது அரசாங்கத்தால் கொடுக்கப்படும் வசதிகள் தாய்க்கும் பிள்ளைகளுக்கும் சென்றடையும் விதத்தில் காணப்படுகின் றமையால் அங்கு விவாகரத்தின் போது பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத் தப்படுகின்ற நிலைமையை அவதானிக் கலாம். இச் சூழமைவில் குடும்பப் பிரச்சினைகளின் போது உரிமை சார்ந்த போராட்டங்கள் இயல்பான தர்க்க பூர்வமான ஒழுங்காக இருப்பதனை அவதானிக்கலாம். எனினும் இவ் விடயத்தில் இலங்கை, இந்திய மலேசியச் சூழமைவு பிரித்தானியச் சூழமைவிலிருந்தும் வேறுபட்டதாகும்.



இங்கு ஒரு குடும்பத்தின் அனைத்து விதமான பராமரிப்புகளும் குடும்ப அங்கத்தவர்களின் கைகளில் தங்கியுள்ளன. அநேகமான குடும்பங்கள் ஆணின் கைக ளில் இவை தங்கியுள்ளன. இந் நிலையில் விவாக, விவாகரத்து தொடர்பான பிரச்சினைகளில் உரிமையை மையப்படுத்திய அணுகுமுறை ஆசிய நாடுகளின் குடும்பங்களில், குறிப்பாக பெண்ணுக்கும் பிள்ளைகளுக்கும் அனுகூலங்களை விடவும் பிரதி கூலங்களை அதிகரிக்கச் செய்வதாகவே காணப்படுகின்றன.

## முன்னும் தங்கியிருத்தல் பிறகும் தங்கியிருத்தல்

விவாகரத்து என்று வருகின்ற போது மனைவி உட்பட பிள்ளைகளைப் பராமரித்தலில் விவாகரத்திற்கு முன்பும் விவாகரத்தின் பின்பும் ஆணில் தங்கியி ருக்க வேண்டிய நிலை காணப்படுகின் றமையை அவதானிக்கலாம். இப்படி யான ஒரு பின்புலத்தில் பெண்களின் சுதந்திரம், பாதுகாப்பு, நல்வாழ்வு என்பன குடும்பங்களை ஆரோக்கியமான சூழல் உள்ளதாக மாற்றியமைக்கும் முயற்சியில் தான் சாத்தியப்படும். ஆரோக்கியமான குடும்பங்களை கட்டமைக்கும் விதத்திலான குறித்த பிரச்சினையுடன் தொடர்புபடும் அனைத்துப் பங்குதாரர்களையும் உள்வாங்கிய பங்களிப்பு அணுகு முறையே மிகப் பொருத்தமானதாகும்.

இப்புரிதல் இல்லாத நிலையில் மேற் கொள்ளப்படும் பெண்ணியச் செயற்பாடு கள், தாம் எதிர்பார்க்கும் அனுகூலங்களை விடவும் அதிகமான பிரதிகூலங்களையே பெற்றுத்தரும். இச் சூழமைவில் குடும் பப் பிரச்சினைகள் என்று வருகின்ற போது ஆரோக்கியமான குடும்ப ஒழுங்குக்கு இட்டுச் செல்வதற்கான நோக்கத்தைப் பிரதானமானதாகக் கொண்ட செயற்பாட்டுவாதமே பிரச்சி னைகளுக்கான தீர்வை முதன்மைப்படுத் தியதாக அமையும் என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

## பராமரிப்புச் செலவும் வழக்கும்

உதாரணத்திற்கு இலங்கை முஸ்லிம் சமுகத்தில் காணப்படும் விவாக, விவாகரத்து சார்ந்த பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் காதி நீதிமன்றங் களை நோக்கி விசாரணைக்கு வருகின்ற முறைப்பாடுகளுள் சுமார் 80 வீதத்திற்கும் அதிகமான விவாகரத்து தொடர்பான பிரச்சினைகள் பராமரிப்புச் செலவைப் பெற்றுக்கொள்வதற்கான முறையீடுகளாக இருக்கின்றமையை அவதானிக்கலாம். மறுபக்கத்தில் இக்காதி நீதிமன்றங்களில் பணியாற்றும் நீதிபதிகளுக்கு சுமார் பத்தாயிரம் ரூபாகவே மாதாந்த சம்பள மாக வழங்கப்படும் நிலையில் ஏனைய நீதிமன்றங்களில் காணப்படுகின்ற வாதி மற்றும் பிரதிவாதி தரப்புகளில் சட்டத் தரணிகள் பிரச்சினையில் தன் தரப்பை முறையாக முன்வைப்பது போன்ற ஒழுங்கு இல்லாத நிலையில் நீதிபதி தானே இரு தரப்பினரதும் பிரச்சினைக ளைச் செவிமடுத்து விசாரித்து உள்வாங் கித் தீர்வு சொல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் காதி மன்ற நீதிபதி ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளாவதும் நாம் நேரடியாக் கண்டுவரும் விடயமாகும்.

இந்நிலைமையை ஆண் மேலாதிக்கப் போக்காகக் கட்டமைக்கும் முஸ்லிம் பெண்ணியல் வாதிகள் இப் பிரச்சினை யின் பன்முகத்தன்மையைப் புரிந்து கொள்ள எவ்விதமான முயற்சியும் மேற் கொள்ளாமல் தமது மேலோட்டமான மன உணர்வுகளை முதன் மைப்படுத்திச் செயற்படுவதனையும் பிரச்சினைக்குத் தீர்வை நோக்கி நகர்த்துவதனை விடவும் அதனைப் பன் மடங்காக்குவதற்குப் பங்களிப்புச் செய்யும் தரப்பாக இருக் கின்றமையும் நாம் அவதானிக்கக் கூடிய கசப்பான உண்மையாகும்.

## ஆண் வெறுப்பே பெண்ணியமா?

இவ்வாறான பிரச்சினைகள் குறித்த ஆழமான புரிதலற்ற எமது பெண்ணியச் செயற்பாட்டாளர்களும் பெண் எழுத்தா ளர்கள் என்று குறிப்பிடும் தரப்பினரும் தமது ஆண் வெறுப்பு நிலைப்பாட்டை முதன்மைப்படுத்திய அணுகுமுறையைத் தம்மிடையே கொண்டிருப்பதனை அவதானிக்கலாம். இத்தரப்பினர் பெண்களை அநீதிக் குட்படுத்துகின்ற ஆண் மேலாதிக்க நிலைமைக்குக் காரணமாக குடும்ப ஒழுங்கு இருப்பதா கவும், குடும்ப ஒழுங்கை சமூகத்திலி ருந்து அழித் தொழிப்பதன் மூலம் பெண்களுக்கு விடுதலைப் பெற்றுக் கொடுக்கலாம் என்பதாகவும் குறிப்பிடு வதனை அவதானிக்கலாம். இத்தரப்பினர் காதி நீதி மன்றங்களைச் செயலிழக்கச் செய்வதன் மூலம் பெண்களுக்கு நீதி யைப் பெற்றுக் கொடுக்கலாம் என்பதா கவும் கருதி காதி நீதிமன்ற ஒழுங்குக்கு எதிராகப் போராடி வருகின்றமையையும் அவதானிக்கலாம்.

இவ்வாறான பெண்ணியச் செயற்பா டுகள் மிக மேலோட்டமான புரிதலைப் பிரதிபலிக்கின்றமையையும் பிரச்சினை யைக் கவனமாக உள்வாங்கி நடை முறைச்சாத்தியமான நகர்வை முதன் மைப்படுத்திய தாக இல்லை. இன்று பெண் செயற் பாட்டாளர்கள் அல்லது பெண் எழுத்தாளர்கள் என்று ஒரு பிரிவி னர் பெண்சார்ந்த பிரச்சினைகளை நிறுவன ஒழுங்கில் முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு ஆங்காங்கே கூடிக்கலைவ தனை அவதானிக்கலாம். எனினும் இன்றைய சமூக ஒழுங்கில் துறைசார்ந்து தன்னை ஆட்படுத்திக் கொள்ளாத நிலையில் பால் வேறுபாடின்றி ஆண், பெண் எழுத்தாளர்களால் பிரச்சினைக் கான தீர்வாக இருக்க முடியாது. அவர்க ளும் பிரச்சினையின் ஒரு அங்கமே. இன்று குடும்ப மட்டங்களில் பெண் எதிர் கொள்ளும் பிரச்சினைக்கான மாற்றீடுகள் குறித்து கரிசனை காட்டும் செயற்பாட்டுத்தளங்கள் அப்பிரச்சினை யின் பங்குதாரர்களான ஆண் தரப்பினரை யும் உள்வாங்கிய குடும்பங்களிடையே அன்பு, பாதுகாப்பு, சுதந்திரம் என்பவற் றைக் கட்டமைப்பதனை இலக்காகக் கொண்டசெயற்பாடுகளை முன்னெடுப் பதன் மூலம் பெண்களுக்கும் குடும்பங் களுக்கும் சுபிட்சத்தைக் கொண்டு வரப் பணியாற்றலாம். குடும்பத்திற்கு வெளியில் வேலைத்தளங்களிலும் தொழில் வாய்ப்புகள் தொடர்பான பிரச்சி னைகளிலும் அதற்கான பங்குதாரர்களை உள்வாங்கிய செயற்பாட்டொழுங்கு ஊடாக மேற் கொள்ளப்படும் முயற்சிகள் மூலம் மாற்றத்தினை நோக்கிய நகர்வு குறித்து சிந்திக்கலாம்.

அவ்வாறில்லாமல் இவ்விரு வெளிகளுடனும்தொடர்பறுந்து அந்நியமாக இருந்து கொண்டு தமக்குள் உணர்வு பூர்வமான எழுத்துக்களாலும் உரைகளாலும் மேலோட்டமான உரிமை சார்ந்த பகிர்வுகளைப் பிரசுரித்தும் வாசித் தும் தமக்குள் மகிழும் எழுத்தாளர் களாலும் செயற்பாட்டாளர்களாலும் மாற்றத்தை நோக்கிய வித்துக்களைக் கருக்கொள்ள வைபப்பதில் கூட வெற்றி யடைய முடியாது என்ற கசப்பான உண்மையை உணர்வோமா? சுருக்கமாகக் குறிப்பிடு வதாயின் பெண்ணியச் செயற்பாடுகளின் நோக்கு நிலையும் இலக்கும் துல்லியமாக வரையறுக்கப்படுவதும் அப்பிரச்சினை யின் பங்குதாரர்களை உள்வாங்கிய மாற்றம் குறித்த முயற்சி குறித்து சிந்திப் பதும் இன்றியமையாததாகும். அப்போது தான் பெண்களின் சுதந்திரம், பாதுகாப்பு, நல்வாழ்வு என்பனவற்றை உறுதிப் படுத்தும் முயற்சியில் வெற்றியடைய லாம். இலங்கை, இந்தியா மற்றும் மலேசிய நாடுகளில் குடும்பங்களில் ஆரோக்கியமான சூழலைக் கட்டமைப் பதன் மூலமே பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் குறைக்கலாம் என்பதனைப் புரிந்து கொள்வோம்.

# பாடுகளைச் சுமக்கும்...

(03 ஆம் பக்க தொடர்ச்சி...)

அது யானைப்பலத்தோடிருந்தது. ஆனாலும் புலிகள் விடுவதாக இல்லை. வேறு வழியில்லாமல் முகாமைச் சுற்றி வளைத்தனர் புலிகள். புலிகளின் சுற்றி வளைப்பு படைகளுக்கு நெருக்கடியைக் கொடுத்தது. உணவு விநியோகம், மருந்து விநியோகம் எல்லாமே படுத்துவிட்டன. கையிருப்புப் பொருட்களோடு எத்தனை நாட்களுக்குத்தான் படையினரால் தாக்குப் பிடிக்க முடியும்? புவியியல் ரீதியாக மாங்குளம் முகாம் தனித்துவிடப் பட்டிருந்த ஒன்று. பாதகமான களச் சூழலில் சிக்கித்தவிக்கத் தொடங்கியது படை. படைக்கு உதவிக்கு வருவதாக இருந்தால் கிளிநொச்சியிலிருந்து அல்லது வவுனியாவிலிருந்துதான் வரவேணும். அப்படி வருதற்கு ஒரு வீதம் கூடச் சாத்தியமேயில்ல. இந்த நிலையில், ஒரு கட்டத்தில் முகாமிலுள்ள படையினர் முற்றாகவே சோரத் தொடங்கிவிட்டனர். படையினர் சோர்ந்தாலும் படையின் தலைமைப்பீடம் அதைச் சும்மா இருக்க விடாது. கடைசிவரையில் அது ஏதோ ஒரு வழியியில் தன்னுடைய ஆட்களுக்கு உயிரூட்டிக்கொண்டேயிருக்கும். இது படைவிதியாகும்.

முகாமில் சோர்ந்திருந்த படையின ருக்கு இரண்டு வகையான மனநிலை உண்டானது. ஒரு அணியினர் சொன்னார்கள், "பேசாமல் கைகளை உயர்த்திக் கொண்டு புலிகளிடம் (கொட்டியாக்களிடம்) சரணடைந்து விடலாம்" என. மற்ற அணி சொன்னது, "எப்படியாவது கிழக்குப் பக்கத்திலிருக்கும் காட்டு வழியினால், தப்பிச் சென்றுவிடலாம்" என்று.

ஆனால், புலிகள் வேறுவிதமாகவே சிந்தித்தனர். "அங்கிருந்து ஒரு படையின ரைக்கூடத் தப்பிச் செல்ல விடுவதில்லை" என்று. போர் என்றால் இப்படித்தானே. அவரவர் வகுக்கின்ற வியூகங்களின் வழியே ஓடும் குருதி. முற்றுகை இறுகிக் கொண்டே வந்தது. ஒரு கட்டத்தில் படையினரின் தாங்குசக்தி முடிவுக்கு வந்து விட்டது. ஆனால் படைத்தலைமை முடிந்த அளவுக்கு சிக்கியிருந்த படையி னருக்குச் 'சேலைன்' குடுக்க முயறசித்துக் கொண்டிருந்தது. இருந்தாற் போலக் ஹெலிகொப்ரர்கள் மாங்குளம் காட்டுக்கு மேலால் பறந்து வந்து, முகாமிலுள்ள படையினருக்கு உணவையும் தண்ணீரை யும் போட்டன. முடிந்தால் அங்கிருக்கும் படையினரை மீட்பதாகவும் திட்டம். புலி விடுமா?

படையின் திட்டம் பெரிதாக வெற்றிய ளிக்கவில்லை. இனியும் தாமதித்தால் நிலைமை மாறிவிடும் என்பதால் புலிகள் முகாமைத்தாக்குவதற்குத்திட்டமிட்டனர். இரண்டாவது கரும்புலித் தாக்குதலாக லெப் கேணல் போர்க், வெடிப் பொருள் நிரப்பப்பட்ட வாகனத்தோடு முகாமி னுள்ளே பாய்ந்தார். சுற்றிவளைத்து நின்ற ஏனைய புலிகள் தடைகளை உடைத்துக் கொண்டு, முகாமுக்குள் பாய்ந்தனர். முகாமின் கதை முடிந்தது. படையினரில் பலர் கொல்லப்பட, எஞ்சியவர்கள் காட்டில் விழுந்து தப்பிச் சென்றனர். இது நடந்தது 1990 நவம்பர் மாதம். அந்த ஆண்டு மாவீரர்நாள் இந்த வெற்றியோடு கள்ளகட்டியது. இந்த இரண்டு தாக்குதல்களையும் தலைமை தாங்கி வெற்றியைப் பெற்றிருந்தது பால்ராஜ். இதோடு பால்ராஜின் காட்டில் மழைதான்.


இதுக்குப் பிறகு மாங்குளத்தை வடக்கின் தலைநகராக்க வேண்டும் என்று புலிகள் திட்டமிட்டனர். அதைப் பற்றிய விளக்கப்படங்களையும் மாதிரி உருக்களையும் நல்லூர்த்திருவிழாக் காலத்தில் அவர்கள் நடத்தும் கண்காட்சி களில் காண்பித்தனர். சனங்கள் முண்டிய டித்து மாங்குளம் தலைநகரை நல்லூரி லும் தங்கள் மனக்கண்ணிலும் கண்டு களித்தனர். யாழ்ப்பாண இடப் பெயர்வுக் குப் பிறகு வன்னிக்குப் போன மக்களில் பலர் மாங்குளத்தைப் போய்ப்பார்த்திட்டு, இந்தக்காட்டுக்குள்ளே ஒரு தலைநகரமா? என்று கேட்டதும் உண்டு. ஆனாலும் புலிகள் மாங்குளத்தைப்பற்றிய எண்ணத் தை மாற்றவே இல்லை.

ஜெயசிக்குறு காலத்திலும் ஓயாத அலைகள் காலத்திலும் மாங்குளம் அங்குமிங்குமாக, புலிகளிடத்திலும் படையினரிடத்திலும் இழுபட்டதுண்டு. இறுதிப்போருடன் கதை மாறிவிட்டது. இப்பொழுது பழையபடி மாங்குளத் தில் பொலிசும் படையும் இணைந்த பெரிய தளமொன்றுள்ளது. அருகே இந்தப் படைத்தளத்துக்குக் காவல் காத்துக்கொண்டு புத்தர் பெருமான். அவருக்கொரு விகாரை. மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நீண்டகாலமாகக் குடியிருந்த படையினர், பெரிய இழுபறிக் குப்பிறகு வெளியேறி, அப்பால் உள்ள நிலங்களில் இருக்கிறார்கள். யானை களின் நடமாட்டம் அரிதாகி விட்டது. வீதியோரத்தில் காடில்லை. போரின் போது தங்கள் பாதுகாப்புக்காகக் காட்டின் பாதுகாப்பை அழித்துவிட்டார்கள். சந்தியில் மரங்களில்லை. மாடுகளில்லை. கடைகளும் சந்தியும் பெருத்துவிட்டது. சன நடமாட்டமும் கூடியிருக்கிறது. அவரவருக்கு ஆயிரம் சோலிகள். எல்லோருக்கும் ஞாபகமறதியும் கூடி வருகிறது.

சந்தியில் போர் வெடித்தபோது நடு வீதியில் ஒரு பெரிய குழி ஏற்பட்டிருந் தது. நீண்டகாலமாக அந்தக் குழி மூடப் படாதிருந்தது. இப்பொழுது அந்தக் குழியைப் புதிய வீதி மூடிவிட்டது. வீதியை மூடுவது இயல்பு. நம்முடைய மனங்களை அப்படி மூடிக் கொள்ள லாமா? என்று புத்தரிடம் கேட்டேன். அவர் பதில் சொல்லவில்லை. மௌன மாகவே இருந்தார். முள்ளி வாய்க்காலி லும் வலைஞர் மடத்திலும் சிலுவை சுமந்து கொண்டிருந்த பாதர் ஜேம்ஸ் பத்திநாதரைக் கேட்டேன். "எல்லாப் பாடுகளையும் சுமப்போம்" என்றார். அப்படி எவ்வளவு காலத்துக்கு இந்தப் பாரச் சிலுவைகளைச் சுமப்பது என்று தெரியவில்லை.

மாங்குள நகர்த்திட்டத்தை இப்பொ ழுது யார்தான் நினைத்துக் கொண்டிருக் கிறார்கள்? வடக்கு மாகாணசபையை மாங்குளத்தில் அமைப்பதே பொருத்த மானது என்று சொல்லப்பட்டது. அதற்காகக் காணியும் ஒதுக்கப்பட்டிருக் கிறது. அந்தக் காணியில் மாடுகள் படுத்துறங்குகின்றன. மாங்குளத்துக்கு மாகாணசபை போகுமாக இருந்தால் தற்கொலைப் போராட்டம் நடத்துவோம் என்று புதிய போராட்டத்தில் குதித்தாலும் குதித்து விடுவார்கள். யாழ்ப்பாணத்துக்கு அப்பால் ஒரு உலகம் இருக்கிறது என்பதைப் பலரும் நம்புவதில்லை. அப்படித் தெரிந்தாலும் அந்த உலகத்தைப் பலரும் விரும்புவதில்லை.

எல்லாம் பொய்யாய்ப் பழங் கதையாய்ப் போனதுவோ....!





# தூங்கா மனம்

த.அஜந்தகுமார்

அ)

மாட்டுத் தாவணி பஸ்நிலையத் தில் அந்த நடுச்சாமத்தில் வந்து இறங்கினோம். அப்பொழுதுதான் காலைப் பொழுது என்பது போல் வெகு உற்சாகமாக இருந்தது மதுரை மாநகரம். மதுரையின் இன்னொரு பெயரான தூங்கா நகரம் என்பதற்கான அர்த்தம் அப்பொழுதுதான் தெளிவாகப் புரிந்தது. எனினும் கள்வர்களின் தொல்லை பற்றியும் சிலர் பயமுறுத்தி இருந்ததால் பைகளை இறுக்க அணைத்தபடி நடந்தோம். சாதாரண அறையில் தங்குவது இல்லை யென்று முடிவெடுத்து தூரத்தில் பார்க்கும் போது டிஜிற்றல் பெயர் ஓடிக் கொண்டி ருக்கும் வசதியான ஒரு ஹோட்டலில் அறையெடுத்து நிற்போம் என்று தீர்மானித்தோம். ஒரு ஹோட்டலை நோக்கி எங்கள் கால்கள் விரையத் தொடங்கின.

வாகனங்களின் இரைச்சலைவிட மனதில் இரைச்சல் அதிகமாக இருந்தது. நாளை காலையிலேயே நாங்கள் சென்று விடுவோம் என்பதை வரவேற்பிற்கு நின்றவருக்கு எடுத்துக் கூறிப் பதிவினை நிறைவு செய்ய, திறப்பொன்றுடன் எங்களுக்கு முன்னால் ஒருத்தர் சென்று கொண்டிருந்தார். அவர் அறையைத் திறந்து தந்தனார். இரண்டு கட்டில்கள், ஒரு சின்ன மேசை, ரீ.வி எல்லாமே இருந்தன. நுளம்புத் திரிக்குப் பதிலாக Good night ஐத் தந்து பிளக்கில் போடுமாறு கூறிவிட்டுச் சென்றார். ரீ.வியை போட்டுவிட்டோம். சன் நியூஸ் போய்க்கொண்டிருந்தது. டெங்கு பற்றிய செய்தியும் போய்க்கொண்டிருந்து. Good night போட்டுவிட்டேன். ஜன்னலைத் திறந்து பார்த்தேன். பெரிய அந்தக் ஹோட்டலின் பின்புறம் முழுவதும் பற்றையாக இருந்தது. ஜன்னலை மூடிவிட்டு நானும் நண்பரும் படுத்தோம். என்னை அறியாமல் தூக்கம் கண்களைத் தழுவியது. ஆனால் சிறிது நேரத்தால் நித்திரை கலைந்தது. ஒரே நுளம்பு. போர்த்திப் பார்த்தேன். சரிவர வில்லை. நண்பரைப் பார்த்தேன் அவரும் சொறிந்து கொண்டே இருந்தார். கடியும் சொறியுமாய் எப்ப விடிந்தது என்று தெரியாமலே விடிந்துவிட்டது. கதவு தட்டிக் கேட்டது. இரவு கூட்டிவந்து விட்டவர் நின்றார். "என்ன அண்ண ஒரே நுளம்பு" என்று சொல்லத் தொடங்க, "ஐயோ ஸாரி சேர்! அதைத்தான் சொல்ல வந்தனான், குட்நைட்டிற்குள் 'ரீ பிளை' வைக்க மறந்து போனன். ஸாரி சேர்! ஸாரி என்றான். அவன் சொன்ன 'சொறி' இரவு முழுவதுமான சொறியை மாற்றி விடவும் தூக்கத்தைத் தந்துவிடவுமா போகிறது???

தூங்காநகரம் எங்களுக்குக்கும் தூங்கா நகரம் என்பதை நிரூபித்துக் கம்பீரமாக நின்றது!

ஆ)

எனது கால்களின் கீழ் பூனையின் வயிற்றுப் பகுதி நசிபட அது வாயைத் திறந்து பெரிதாகக் கத்தியது. அதன் கண்கள் மிகப் பயங்கர ஒளியை வீசின. கால் அமத்தலில் இருந்து விடுபட்டுக் கொண்டு அது என் முகத்தை நோக்கி ஒரு புலியைப் போல் பாய்ந்தது. ஐயோ!

என் முகமெல்லாம் இரத்தம் வழிவது போல் இருந்தது. இரண்டு கையாலும் துடைத்தேன். இரத்தம் போலப் பிசு பிசுக்க என் நெஞ்சமெல்லாம் துடித்தது. நான் ஒரு பூனையின் வயிற்றுக்குள் இருப்பது போன்ற பிரமை சுழன்றது.

கட்டிலில் இருந்து கீழே இறங்கினேன்!

"டேய்! டேய் என்ர கால்றா" எண்ட சத்தம். அதன் பிறகுதான் எனக்கு விளங் கியது, அது கனவு. அந்த இரவை அன்றைய கனவு குலைத்துப் போட்டது. அன்றுடன் அந்த அறையில் இருந்து கட்டில் விடைபெற்றுக் கொண்டது.

அன்று என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. ஒரு பூனையைப் போல் இரவு முழுவதும் நண்பர்களின் கால் களை மாறி மாறி மிதித்து பேச்சு வாங்கிக் கொண்டும் நடந்து கொண்டிருந்தேன்!

இ)

நிலத்தில் படுத்திருந்தேன். திடீரென ஒரு சுணைப்பு. கைகள் தாமாகவே தொடையை வேகமாகச் சொறியத் தொடங்கின. சொறிந்த இடங்கள் தடிப்பதை உணர்ந்தேன். திடீரெனத் துள்ளி எழுந்தேன். கட்டியிருந்த சாறத்தை உதறினேன். சிறிய மயிர்கொட்டி ஒன்று ஒட்டியிருப்பதைக் கண்டதும் மனம் துணுக்குற்றது.

கதவைத் திறந்து ஓடிச் சென்று கிளுவம் தடியொன்றை முறித்து அதன் இலைகளை உருவி கடித்த, தடித்த இடங்களெல்லாம் தேய்க்கத் தொடங்கி னேன். தேய்த்து முடித்ததும் இன்னும் சொறி அதிகமாவது போல் ஒரு வேதனை படர்வது போல் உணர்ந்தேன். அம்மா வைத் தட்டியெழுப்பாமல் சுடு சாம்பல் பூசினால் நல்லது என்று எப்பவோ அம்மான்ர வாயால கேட்டது ஞாபகம் வர குசினிக்கு ஓடிப்போய் அடுப்படிச் சாம்பலை தொட்டுப் பார்த்தேன். மெல்லிய சூடு இருந்தது. அதை எடுத்துத் தேய்க்கத் தொடங்கினேன். தேய்க்கச் சுகமாகவே இருந்தது. நிற்பாட்டியதும் சொறிந்த இடங்களில் மெலிதாக ஏற்பட்ட காயங்கள் சாம்பலில் இன்னும் கொதிப்பதை உணர்ந்தேன். ஒரே வழி குளிப்புத்தான் எண்டு முடிவெடுத்து தொட்டித் தண்ணிய எடுத்து அள்ளி வார்க்கத் தொடங்கினேன். சுகமாகத் தான் இருந்தது. குளித்து முகத்தைத் துடைத்து விட்டு நேரத்தைப் பார்த்தேன்.

இரவு 1.40

ஆனால் இப்போது எங்கிருந்தோ ஓர் உற்சாகம் வந்திருந்தது. எதையாவது எழுதவேண்டும் போல் மனமும் கையும் பரபரத்தன.

நெடுநாளாக எழுத இருந்த சிறுகதை என்னை அறியாத ஒரு வேகத்துடன் தாள்களில் ஓடத்தொடங்கியது!

ஈ)

"தூக்கம் என்பது ஒரு விழிப்பு நிலை" என்கிறது பரந்தாமனின் பள்ளி கொள்ளும் தோற்றம். விழிப்பு நிலை கூட சிலருக்குத் தூக்க நிலைதான். தூங்குதல் என்றால் காலம் தாழ்த்துதல் என்ற பொருளும் அடங்கி இருக்கிறது. இதனை "தூங்குக தூங்கிச் செயற் பால" என்ற வள்ளுவன் வரிகள் உணர்த்திவிடு கின்றன. எம்மைச் சுற்றி நடக்கின்ற கொடுமைகளைப் பார்த்துக் கொண்டிருப் பதும் ஒரு தூக்கநிலைதான். பதினான்கு வருடங்கள் இராமனுக்காக கண்ணை இமை காப்பது போல விழித்திருந்து பார்த்த இலக்குவன் முடிசூட்டுவிழா நேரத்திலேதான் தன்னை அறியாமல் தூங்கினான். பாரமற்ற நிலையே உண்மை யான தூக்கத்துக்கு இட்டுச் செல்கின்றது. படுக்கப் போறன், சாயப் போறன், கண்ண மூடப்போறன், சரியப்போறன், தூங்கப் போறன் என்று பல தொடர்க ளால் தத்தம் அனுபவத்திற்கேற்ப சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அடிமைத்தளையில் இருந்த பாரததேசத்திற்காகப் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சியைப் பாரதியார் பாடினார். இன்று இது எம் நாட்டுக்கும் தேவை போலத்தான் இருக்கின்றது .நாம் தூக்கத்தை மனதுக்குக் கொடுத்து விடக் கூடாது. அது ஒரு விழிப்பு நிலையில் பூனையின் கண்களைப் போல எந்தச் சாமத்திலும் மினுங்கிக் கொண்டிருக்கவேண்டும்.



# அரசகேசரிப் புலவர்

அரசகேசரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலவர். இவர் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராசசேகரச் சக்கரவர்த்தியின் மருமகன். வடமொழி, தென் மொழிகளில் புலமை படைத்த இவர் பல செய்யுள்களைப் பாடியுள்ளார். வட மொழியில் காளிதாசரால் இயற்றப்பட்ட 'இரகுவம்சம்' என்ற நூலினை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். செய்யுள் வடிவில் அமைந்த இந் நூலில் 2404 பாடல்கள் அடங்கியுள்ளன. இவர் வாழ்ந்த இடம் நல்லூர் யமுனா ஏரிக்கு அருகாமையில் இன்றும் "அரசகேசரிவளவு" என்று விளங்கும் நிலப்பரப்பில் அமைந்திருந்தது என்பர்.

தமிழ் இலக்கியப்பரப்பில் செய்யுள் மொழிநடையில் அமைந்த இரகுவம் சம் இந்தியாவில் பாடப்பட்ட இராம கதைகளுக்கு சற்றும் சளைக்காத இலக் கிய தரத்தினைக் கொண்டு இருப்பதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஈழத்தமிழர்களிற்கு என்று தனித்துவம் மிக்க புலமை மரபு இருந்துள்ளமைக்கு அரசகேசரி முதலான புலவர்கள் சான்றாக விளங்குகின்றனர்.



# பனாட்டு

நாம் மறந்து போய்க் கொண்டிருக் கும் உணவுகளில் ஒன்று பனாட்டு. சுவையும், ஆரோக்கியமும் மிக்க எமது நிலத்தின் உணவுகளுள் ஒன்று.

பனைமரத்தில் இருந்து கிடைக்கக் கூடிய பழத்தை பனம்பழம் என்று கூறுவார்கள். இந்த பனம்பழத்தின் தோலை அகற்றி விட்டு பழத்தை ஒரு பாத்திரத்தில் போட்டு நீர் விட்டு பிழியும் போது அந்த பழத்தில் இருந்து வரும் சாறை ஒரு பனை ஓலைப் பாயில் மென்மையாகத் தடவி சூரியஒளியில் காயவிட்டு, அது நன்றாக காய்ந்த பின் அதைத்துண்டு, துண்டுகளாக வெட்டி. சமையல் அறைப் புகைக்கூட்டில் தொங்கவிடுவார்கள். குளி ரூட்டியோ எந்த இரசாயனமோ இன்றி பனாட்டை நீண்ட நாட்களுக்கு பதப்ப டுத்தி உண்ணமுடியும்.

இன்று பனாட்டு உற்பத்தி குறைவா கவே நடைபெறுகின்றது. இதற்கு காரணம் மக்கள் பனாட்டை வாங்கி உண்பதில்லை. அதனால் உற்பத்தியாளர்கள் அற்றுப்போய் எமது மரபு உணவு மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருக்கின்றது. பனாட்டை அறியாத தலைமுறை ஒன்று உருவாகிவிடும் என்ற ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய முன்னோர்கள் எமது புவியியற் சூழல், காலநிலை என்பவற் றோடு பொருந்தி நம்மை ஆரோக்கியமாக வைக்கும் உணவுமுறைகளுக்கு பழக்கப் பட்டு இருந்தார்கள். பிரதான உணவுக ளானாலும் சரி சிற்றுண்டிகளானாலும் சரி மேலைத்தேச உணவுகளின் சுவைக்கு மேலாக எம்மிடம் ஆரோக்கியம் மிக்க உணவுகள் இருந்தன. இன்று வெறும் கோதுமை மாவும், கொழுப்பும் எமது உணவாகிவிட்டது. நம்முடைய தாத்தாக் களும் பாட்டிகளும் 90 வயதை தாண்டி நிமிர்ந்து நடந்து போகின்றனர். நாங்கள் இள வயதிலேயே வைத்தியசாலைக்கு போய் வந்து கொண்டிருக்கிறோம். இந்த தலைமுறை இடைவெளிக்கு காரணம் நாம் நம்முடைய மரபார்ந்த உணவு முறை யில் இருந்து விலகியமையே.

# வன்னி




அநுராதபுரக் காலத்தின் பின்னர் இலங்கையின் வட மத்திய பகுதி படிப்படியாகச் சிதைவுக்கு உட்பட்டது. அது மாத்திரமல்லாது பொலநறுவைக் காலத்தின் பின்னர் இப்பகுதி வன (காட்டு)ப் பிரதேசமாக மாறியது. சிங்கள மக்கள், தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களை அடிப்படை யாகக் கொண்டு, சிங்கள, வன்னி, தமிழ் (தெமல) வன்னி என்று குறிப்பிடும் மரபு ஒன்று உண்டு.

தமிழ் வன்னிப் பிரதேசத்தை, இன்றைய வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களாக் கொள்ளலாம். (தமிழ் வன்னிமைகள் முன்னர் மட்டக் களப்பு வரை நீண்டிருந்தது. அங்குள்ள சில பிரதானிகள் வன்னியனார்கள் என்று குறிப்பிடப் பெற்றனர்.)

இப்பொழுது கிளிநொச்சிப் பிரதேசமும் வன்னி எனப்படும் மரபு உண்டு ஆயினும் பாரம்பரிய வன்னி, முறிகண்டிக்குத் தெற்கேயுள்ள பிரதேசங்களையே கொண்டிருந்தது.

இந்த வன்னிப் பிரதேசங்களில் போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிக் காலங்களில் பிரதானிகள் ஆட்சி புரிந்தனர். அந்த மரபு பண்டாரவன்னியன் காலம் வரை நிகழ்ந்ததாக அறிகின்றோம்.


தமிழ் வன்னிப் பிரதேசம் அதன் நில அமைப்புக் காரணமாகவும் தொடர்புக் குறைவுகள் காரணமாகவும் தனித்தனிக் கிராமங்களாக குடியிருப்புத் தொகுதிகளாக இயங்கும் ஒரு நிலைமையில் இருந்தது. இங்குள்ள நில வசதி, காணிப்பெறுமதி காரணமாக வசதியான வாழ்க்கை முறை நிலவிற்று. சாதியமைப்பிலும் நெகிழ்ச்சி காணப்பட்டது. ஏறத்தாழ 1960 கள் முதல் ஏற்பட்ட குடியேற்றங்கள், விவசாயத்திட்டங்கள் காரண மாகவும் வன்னிப்பகுதியின் சனத்தொகை பெரிதும் அதிகரித்துள்ளது.

கா. சிவத்தம்பி

(இலங்கைத்தமிழர் யார் எவர் ?)







# நீற்றுப் பெட்டி

நீற்றுப்பெட்டி என்பது பிட்டு எனும் உணவைச் சமைப்பதற்குப் பயன் படும் ஒரு பொருள் ஆகும். கூம்பு வடிவில் அமையும் இது பொதுவாகப் பனையோலையினால் இழைக்கப்படு கிறது. இலங்கை, யாழ்ப்பாணத்தில் பிட்டு ஒரு முக்கியமான உணவுப் பொருளாக இருப்பதாலும், அங்கே பனைகள் பெரும ளவில் வளர்வதாலும் நீற்றுப் பெட்டிகள் அங்கே பெருமளவில் பயன்படுகின்றன.

உணவு முறைகள் பற்றிய பண்பாட்டு கூறுகளில் இத்தகைய தனித்துவம் மிக்க கைவினைப்பொருட்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இன்று அலுமினியமும் பிளாஸ்ரிக்கும் நம்முடைய சமையலை நஞ்சாக்கிக் கொண்டிருக்கின்றன, ஆரோக் கியம் மிக்க சமுதாயத்தை தொலைத்துக் கொண்டிருக்கிறோம். எனவே இயற்கை யோடு நெருக்கமாய் அமைந்த இத்தகைய மரபு ரீதியான கைவினைப் பொருட்க ளுக்கு நாம் திரும்ப வேண்டும். அத்தோடு இத்தகைய பொருட்களை உற்பத்தி செய் வோரை ஊக்கப்படுத்துவதும் அவசியம் ஆகும்.

# ஆதிச்சன்



பொலநறுவையை ஆட்சி செய்த இலங்கை யின் மிகச்சிறந்த மன்னர்களுள் ஒருவனா கச் சொல்லப்படுபவன் மகா பராக்கிரமபாகு. அவனு டைய ஆட்சிக் காலத்தில் பொலநறுவை இராச தானி முழுவதும் தமிழர்கள் பரந்து வாழ்ந்துள்ளனர். குறிப்பாக அரச நிர்வாகத்தில் சக்தி மிக்க பதவிகளை தமிழர்கள் வகித்துள்ளனர்.

இதனை இலங்கையில் எழுந்த பாளி இலக்கியங்களும் கல்வெட்டுகளும் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக பராக்கிரமபாகுவின் முக்கிய தளபதியாக இருந்த ஆதிச்சன் பற்றி பாளி இலக்கியங்களும் "தேவநாகல" என்ற கல்வெட்டும் குறிப்பிடுகின்றன.

பாராக்கிரமபாகுவின் படைகளை வழிநடத்தி பர்மா வரை சென்று வெற்றியீட்டியவனாக ஆதிச்சன் பற்றி வரலாற்றாதாரங்கள் குறிப்பிடுகின்றன. (கி.பி 1164 -1165 ) அத்துடம் ஆதிச்சன் நிதிப் பொறுப்புள்ள அதிகாரியாகவும் பணியாற்றிய தகவல்களும் கிடைக் கின்றன.

அதனைப்போல பராக்கிரமபாகுவின் உறுகுணை பகுதி நோக்கிய படையெடுப்புக்கு றக்க என்ற தமிழ் தளபதி தலைமைதாங்கிய செய்தியும் பாளி இலக்கி யங்களில் குறிப்பிடப்படுகின்றது.

"செவாலியே விருது யாருக்கு கிடைத்தது?" என்று கேட்டால், சட்டென, முன்பு சிவாஜி கணேசனுக்கு இந்த வருடம் கமலஹாசனுக்கு என்று சொல்லி விட்டு, நமது அறிவுத்திமிரைக் காட்டும் சிரிப்பொன்றைப் படரவிடுவோம். இப்படி அரிதாரம் பூசும் தென்னிந்திய நடிகர்களுக்கு கிடைத்த விருதைக் கொண்டாடுகின்ற நாம், எம்மிடையேயும் அதே 'செவாலியே' விருதைப் பெற்றவர்களைப் பற்றி எதுவும் தெரியாதவர்களாக இருக்கின்றோம். இலங்கையில், யாழ்ப்பாணத்தில் இருவர் பிரான்ஸ் அரசால் வழங்கப்படும் அதியுயர் விருதான 'செவாலியே' விருதினைப் பெற்றுள்ளார்கள். ஒருவர் சிவயோகநாயகி இராமநாதன். இன்னொருவர் வேலுப்பிள்ளை. இவர்களுக்கு விருது கிடைத்த விடயம் ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும், விருது பெற்றவர்களை நாம் கண்டு கொள்ளவேயில்லை. கமலுக்கும், சிவாஜிக்கும் விருது கிடைத்தால் மட்டுமே அதைத் தலையில், தூக்கி வைத்துக் கொண்டாடுவோமே தவிர எங்கள் நாட்டில் உள்ளவர்களுக்கு அந்த விருது கிடைத்தால் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவே மாட்டோம். அதனால் தான் இன்னமும் இப்படியே சிதைந்து கொண்டு இருக்கிறோம். தென்னிந்திய நடிகர் கமலஹாசனுக்கு செவாலியே விருது கிடைத்தமை பற்றி ஊடகங்களும், சமூக வலைத் தளங்களும் செவாலியே புராணத்தை மீளவும் ஒரு முறை உச்சஸ்தாயில் பாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், இலங்கையில் முதன் முறையாக செவாலியே விருதை வென்ற பெண்மணியான, வடமராட்சி, பொலிகண்டியைச் சேர்ந்த சிவயோகநாயகி இராமநாதனை அவர் இல்லத்தில் சந்தித்தோம்.

○ நேர்காணல்: தெகிடியான்



# சிவாஜி, கமல் மட்டுமல்ல இவரும் 'செவாலியே' தான்...!



## செவாலியே — சிவயோகநாயகியுடன் — ஒரு சந்திப்பு...

**கேள்வி: செவாலியே விருதை நீங்கள் வென்றிருந்தாலும் பலருக்கும் உங்களைப் பற்றிய அறிமுகம் இல்லை. எனவே உங்களைப் பற்றி கொஞ்சம் பகிர முடியுமா?**

சிவயோகநாயகி: திக்கம் செல்லையா பிள்ளையின் இளைய மகள்தான் நான். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் படித்தேன். பின்னர் இந்தியா சென்று கோயம்புத்தூர் அபிநாசலத்தில் BSc பட்டம் பெற்றேன். இராமநாதன் கல்லூரியில் ஒரு தொண்டர் ஆசிரியராக 67 இல் சேர்ந்து ஒரு வருடம் அங்கு வேலை செய்தேன். அதன்பிறகு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பகுதிநேர விரிவுரையாளராக இணைந்து, அங்கேயே நிரந்தர விரிவுரையாளராக பணியாற்றினேன். அதன் பின்னர் அளுத்கம ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை என்பவற்றிலும் விரிவுரையாளராக இருந்தேன். அவ்வேளை பிரான்ஸிற்கு Msc செய்வதற்கு புலமைப்பரிசில் கிடைத்தது. அங்கே போய் பிரெஞ்ச் மொழியை ஒரு வருடம் கற்றுத் தேறினேன். பின்னர் பாரிஸிற்கு சென்று அங்கு பட்டப்படிப்பை தொடர்ந்தேன். திரும்பவும் பலாலி வந்து பணியில் இணைந்து கொண்டேன். 2 கிழமை பணிபுரிந்த பின்னர் திரும்ப கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு இடமாற்றம் பெற்றேன். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பிரதி அதிபராகவும், பின்னர் அதிபராகவும் பதவிவகித்தேன். அத்துடன் பிரெஞ்ச் அலையன்ஸ் நிறுவனத்தில் பிரெஞ்ச் மொழியையும் 25 வருடங்களாகக் கற்பித்துள்ளேன். எனது கணவர் இராமநாதன் 2013 இல் காலமாகிவிட்டார்.



இப்போது நான் பொலிகண்டி கந்தவனக் கடவை கோயில், நீர்வளை கோயில் ஆகியவற்றின் தர்மகத்தா சபைகளில் இருக்கின்றேன்.

**கேள்வி: உங்களின் எந்தச் சேவைக்காக பிரான்ஸின் அதியுயர் விருதான செவாலியே விருதுக்கு தேர்வு செய்யப்பட்டீர்கள்?**

சிவயோகநாயகி: பிரான்ஸில் நான் பட்டமேற்படிப்புக்காக பிரெஞ்ச் மொழியைக் கற்க வேண்டியிருந்தது என முன்னரே கூறியிருந்தேன். அப்படி நான் பிரெஞ்ச் மொழியைக் கற்றுவிட்டு. இலங்கைக்கு வந்த போது, பிரான்ஸ் தூதரகத்தால், பிரெஞ்ச் மொழியை கற்பிக்கும் அனுமதி எனக்கு வழங்கப் பட்டது. அப்போது பிரெஞ்ச் மொழியைக் கற்பிக்கும் ஆற்றல் உள்ளவர்கள் இங்கு மிகக் குறைவு. இதனால் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பணிபுரிந்தவாறே, பிரான்ஸ் அலையன்ஸில் பிரெஞ்ச் மொழியைப் பலருக்கும் கற்பித்தேன். போர்க் காலத்திலும் எனது பணியை எந்தவிதக் குறைவுமின்றிச் செய்து வந்தேன். இப்படி நெருக்கடியான கால கட்டத்திலும் பிரெஞ்ச் மொழியை அபிவிருத்தி செய்ததால், அதுவும் தொடர்ச்சியாக 25 வருடங்கள் நான் அந்த மொழிக்காகப் பாடுபட்டதால், அதனைக் கௌரவிக்க பிரான்ஸ் அரசு, எனக்கு 2009 ஆம் ஆண்டு செவாலியர் விருதை வழங்கியது.

**கேள்வி: உங்களுக்கு இப்படி செவாலியே விருது கிடைக்கும் என எதிர்பார்த்தீர்களா? அல்லது இன்ப அதிர்ச்சியாக இருந்ததா?**

சிவயோகநாயகி: இல்லை. உண்மையில் இந்த விருது ஒரு இன்ப அதிர்ச்சிதான். எந்தவித விருதையும் எதிர்பார்த்து நான் பிரெஞ்ச் மொழியைக் கற்பிக்கவில்லை. ஆனால் அந்தக் கற்பித்தலில் நான் கடமை தவறவில்லை. சிவாஜிக்கும், கமலஹாசனுக்கும் அவர்களின் நடிப்பின் திறமைக்கு இந்த விருதைக் கொடுத்தார்கள். எனக்கு பிரெஞ்ச் மொழிக்கு 25 வருடங்கள் இடையறாப் பணி செய்தமைக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்கள். எனினும் இந்த விருதுக்கு யார் என்னை சிபார்சு செய்தார்கள் என இதுவரையும் எனக்குத் தெரியாது. விருது கிடைத்த விடயம் தெரிய வந்தபோது, குடும்பத்தில் அனைவருக்கும் மிகவும் சந்தோசமாக இருந்தது. தங்களுக்கும் குடும்பத்திற்கும் உலகளாவிய ரீதியில் பெயரையும் புகழையும் கொண்டு வந்து விட்டேன் என்று அனைவரும் பெருமையடைந்தனர். அந்தக் காலத்தில் யோகர் சுவாமிகளும், எனது அப்பாவும் நல்ல நண்பர்களாக இருந்தார்கள். ஒருமுறை யோகர் சுவாமிகள், என்னைச் சுட்டிக்காட்டி அப்பாவுக்குச் சொன்னார். "இந்தப் பிள்ளையால உங்கள் குடும்பத்திற்கு பெருமை கிடைக்கும்" என்று. இந்த விருது கிடைக்கும் போது அவர் சொன்னது உண்மையாகி விட்டதை எண்ணி ஆனந்தப் பூரிப்படைந்தேன்.

**கேள்வி: எங்கு வைத்து உங்களுக்கு விருது வழங்கப்பட்டது? செவாலியே விருதினைப் பெற மீண்டும் பிரான்ஸ் சென்றீர்களா?**

சிவயோகநாயகி: இல்லை. அப்போது பிரான்ஸ் செல்லும் நிலையில் நான் இருக்கவில்லை. என்னுடைய கணவர் அப்போது நோய் வாய்ப்பட்டிருந்தார். எனவே மாற்று ஒழுங்காக கொழும்பில் உள்ள இலங்கைக்கான பிரான்ஸ் தூதரகத்தில் வைத்து இந்த விருது எனக்கு வழங்கப்பட்டது. பிரான்ஸ் தூதரகத்தினர் ஒருநாள் என்னைத் தொடர்பு கொண்டு, விருதை இலங்கையிலேயே வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதையும், அதற்கென 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நாளில் என்னால் கலந்து கொள்ளக் கூடியதாக இருக்குமா எனவும் கேட்டார்கள். எனக்கு அந்த நாள் பொருத்தமாக இருந்ததால் சம்மதித்தேன். பின்னர் அவர்களுக்கு நிகழ்வில் என் சார்பில் கலந்து கொள்வோர் விபரங்களை அனுப்பி வைக்க, சில நாள்களிலேயே அழைப்பிதழ் கிடைத்தது. நோய்வாயுற்ற நிலையிலும் எனது கணவரும், மற்றும் என்னுடைய உறவினர்கள் இந்த நிகழ்வில் வந்து கலந்து கொண்டதை என்றைக்கும் மறக்க முடியாது.


**கேள்வி: சிவாஜிக்கும், கமலுக்கும் செவாலியே விருது கிடைத்தது பற்றி உலகில் உள்ள எல்லா ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்து வெளிப்படுத்துகின்றன. அதேபோல உலகில் உள்ள தமிழ் மக்களும் ஏதோ சிவாஜிக்கும், கமலுக்கும் மட்டும் தான் இந்த செவாலியே விருது கிடைத்ததாக நினைத்துக் கொண்டாடுகிறார்கள். ஆனால் ஈழத்தில் இந்த விருதை இருவர் பெற்றிருப்பதை பலரும் கண்டு கொள்ளாமலிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சிவயோகநாயகி: எனக்கு விருது கிடைத்தமை பற்றி பல ஊடகங்கள் மக்களுக்கு தெரியப்படுத்தியே இருந்தன. எனினும் பலருக்கு இந்த விருதுகளின் தார்ப்பரியம் புரிவதில்லை. பிரான்ஸில் செவாலியே விருதினைப் பெற்றவர்களை உயர்வாக மதிக்க வேண்டும். அவர்களை 'சேர்' அல்லது 'மேடம்' என்று தான் மரியாதையோடு அழைக்க வேண்டும். பிரான்ஸில் மட்டுமல்ல ஏனைய இடங்களிலும் இந்த விருதைப் பெற்றவர்களை அப்படித்தான் மதிப்பளிக்கிறார்கள். ஆனாலும் எமது மக்களுக்கு இந்த செவாலியே விருது பற்றிய தெளிவின்மையால் அவர்கள் அப்படி செய்வதுமில்லை.

மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்று நானும் எப்போதும் எதிர்பார்த்ததும் இல்லை. ஆனாலும் எங்கள் நாட்டைச் சேர்ந்த, எங்கள் இனத்தைச் சேர்ந்த, ஒரு பெண் இந்த விருதைப் பெற்றுள்ளார் என்பதையாவது அவர்கள் அறிந்து வைத்திருக்க வேண்டுமென நினைக்கிறேன். அப்படி அறிவதனூடாக எமது எதிர்காலச் சந்ததியும் இந்த விருதினைப் பெற வேண்டும் என்ற ஊக்கத்துடன் செயற்படுவார்கள். எம் ஈழத்து எதிர்கால சந்ததி இதற்காக பாடுபட வேண்டும்.

எனக்கு பிறகு இந்த விருது தம்பசிட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை என்பவருக்கும் கிடைத்திருந்தது.

அவர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "உங்களுக்கு இந்த விருது முதலில் கிடைத்தது" எனக்கு இப்போது கிடைத்துள்ளது. எனத் தெரிவித்தார். இப்போது இலங்கையில் இருவருக்கு மட்டுமே கிடைத்துள்ள இந்த விருதுப்பட்டியல் இன்னும் நீள வேண்டும் என்பதே எனது பேரவா.




# பனித்தேச வடலி

கபிலன்

எப்படி படித்தாலும் ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன் ஆகிய மொழிகளில் எனக்கு அடிப் படை புரியவில்லை. இந்த மூன்று மொழிகளின் இலக்கணம் எனக்கு இன்றும் தெரியாது. எனக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன. ஒன்று இன்னும் அதிக நேரம் படிப்பிற்கு செலவு செய்வது. மற்றையது எனக்கு தெரிந்த பாடத்தில் அதிக புள்ளிகள் பெற்று ஏனைய பாடங்களை சரிசெய்வது. மொழி சம்பந்தமான பாடங்களில் நான் விட்டதை பிடிக்க நேரம் போதாமல் இருந்தது. எனவே அதனை சரிசெய்ய இரண்டாவது முறையை தேர்ந்தெடுத்தேன்.

பிரெஞ்ச் பாடம் எனக்கு மட்டுமல்ல என்னுடன் படித்த அனைத்து ஆண்களிற்கும் பிரச்சனையாகஇருந்தது. நாங்கள் குறுக்கு வழி பற்றி யோசித்துக் கொண்டிருந்தோம். ஒரு மாஸ்ரர் பிளான் வரையப்பட்டது. எங்களுடைய பிரெஞ்ச் ஆசிரியை கொண்டு வரும் சூட்கேஸ்க்கு நாலு எண்கள் கொண்ட பாஸ்வேர்ட் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் வகுப்பு தொடங்க முதல் அந்த நாலு நம்பரையும் கொடுத்து சூட்கேஸ் திறப்பார். அதன் பின்னர் சூட்கேஸ் திறந்திருக்கும் வரை அந்த நாலு எண்களும் மாற்றப்படாமல் அப்படியே விடப்படும். அந்த சூட்கேசிற்குள் தான் அவர் எங்களின் பரீட்சை பேப்பர்களை வைத்து மூடிவிடுவார். எனவே நாங்கள் அந்த சூட்கேசின் நம்பரை கண்டுபிடிப்பதில் இறங்கினோம். வாரத்தில் ஒருமுறை மட்டுமே பிரெஞ்ச் பாடம் என்பதால் நான்கு வாரங்கள் ஒவ்வொருத்தராக கேள்விகள் கேட்பது போல் முன்னிற்கு சென்று அவரின் சூட்கேசில் என்ன எண்கள் உள்ளன என்று குறித்து வைத்துக் கொண்டோம். பின்னர் அனைத்து எண்களையும் சரிபார்த்து பாஸ்வேர்ட் இதுவாக தான் இருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தோம்.

அடுத்த பரீட்சையில் எங்களிற்கு எந்த பயமும் இருக்கவில்லை. தைரியமாக எழுதினோம். பரீட்சை முடிவில் பேப்பரை வாங்கிய ஆசிரியை அதனை சூட்கேசில் வைத்து பூட்டி விட்டு இடைவேளைக்கு சென்ற நேரத்தில் நாங்கள் களத்தில் இறங்கினோம். 15 நிமிடங்கள் மாத்திரமே இருந்தன. சூட்கேசை திறந்து விடைகளை திருத்தம் செய்து கொண்டிருந்த நேரம் அந்த வழியாக சென்றவேறொரு ஆசிரியரிற்கு அது சந்தேகத்தை வரவழைத்திருக்க வேண்டும்.

இரண்டாவது பரீட்சை நடைபெறும் போதும் நாம் அப்படியே செய்தோம். முதல் முறை அந்த வழியாக சென்ற ஆசிரியர் இரண்டாவது பரீட்சை எப்பொழுது என்று எனது ஆசிரியையிடம் கேட்டு சரியாக அதேநேரம் அந்த வழியாக வருவது போல் வந்து சட்டென்று உள்ளே நுழைந்து கையும் களவுமாக பிடித்துவிட்டார். அந்த பாடசாலை ஆசிரியர்களிடத்தில் பல வாரங்கள் இதுதான் கதையாக இருந்தது. அவர்களிற்கு எங்களின் அறிவின் மீதான பொறாமையாகக்கூட இருந்திருக்கலாம்.

வேலை செய்யும் நிறுவனத்திற்கு இது பற்றிய கடிதம் போட்டிருந்தார்கள். ஏற்கனவே இந்த சம்பவத்தினால் ஒருவனின் நிறுவனம் அவனை வேலையிலிருந்து தூக்கிவிட்டது. எனக்கும் அது நடக்கலாம் என்ற பயத்துடன் இருந்தேன். கடிதம் வந்த அன்றே எனது முதலாளி என்னை கூப்பிட்டார். எல்லாம் முடிந்து விட்டது என்ற நினைப்புடன் உள்ளே சென்றேன்.

அவரோ சிரித்து விட்டு "அட கிறுக்குப் பயலே இப்படியா கவனக் குறைவா இருக்கிறது? நான் கூட முந்தி இப்பிடி நிறைய செய்திருக்கிறன். ஆனா உன்னை மாதிரி மாட்டுப்படேலை. அடுத்த முறை பிடிபடாமல் செய்யப் பாருங்கோ" என்று செல்லமாக அதட்டி விட்டு வழியனுப்பி வைத்தார்.

இப்படியாக இரண்டாவது ஆண்டின் முடிவில் எனது நிறுவனத்தின் விருப்பத்தை நிறைவேற்றியிருந்தேன். எனக்கு அவர்கள் இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து படித்து எனது தகுதியை உயர்த்திக் கொள்வதற்கு வாய்ப்பை தந்தார்கள்.

எனது நிறுவனம் தீவிர வலதுசாரி கொள்கைகளை கொண்டது. எனது முதலாளி வலதுசாரி கட்சியில் உறுப்பினர். அந்தகட்சியின் எம்.பி. அவரின் சிறு வயது நண்பர். ஆனால் என்னிடம் அவர்கள் பாகுபாடு காட்டியதில்லை. வேலையில் நான் நன்றாக இருந்ததால் அவர் திருப்தியடைந்தார். அவரின் மனைவியோ என்னுடன் சகஜமாக பழகினார்.

"உனக்கு அழகான கறுத்த தலை முடி. எனக்கும் இப்படி வேண்டும்" என்றார்.

"எனக்கு உங்களை போல் வெள்ளையாக இருக்கவே விருப்பம்" என்றேன்.

"ஏன் அப்படி நினைக்கிறாய்?"

"வெள்ளையாக இருந்தால் இந்நாட்டு பெண்களை காதலியாக அடைய முடியும்" என்றேன்.

"அப்படியில்லை. கருப்பாக இருந்தாலும் அவர்களிற்கு பிடிக்கும். நீ அவர்களுடன் பழகுவதற்கு கூச்சப்படுகின்றாய். முதலில் அதைமாற்று" என்பார்.

"மனிசி நடக்கிற கதையா பேசுதில்லையே" என்று மனதிற்குள் புறு புறுத்து விட்டு சென்றுவிடுவேன். அப்படிஒரு நெருக்கம் எங்களிற்குள் இருந்தது

இரண்டு ஆண்டுகளின் பின்னர் நான் டிப்ளோமா பெற்று மொத்தம் நான்காண்டுகள் அந்த நிறுவனத்தில் வேலை செய்திருந்தேன். எனக்கான இறுதிநாள் அந்த நிறுவனத்தில் வந்தது. எனக்காக ஒரு சிறிய விருந்துபசாரம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அப்பொழுது எனது முதலாளியின் மனைவி பேசும் போது "இப்ப உனக்கு வாழ்க்கை எண்டா என்ன எண்டு தெரிஞ்சிருக்கும். நீ இங்க இருந்து வெளியில போகேக்கை வெளியுலகம் உன்னை வேட்டையாட காத்துக் கொண்டிருக்கும். அதில இருந்து உன்னை காப்பாத்த கூடிய அனுபவத்தை இங்கவேலை செஞ்ச நாட்களில தந்திருப்பம் எண்டு நம்பிறன். எந்த நிறுவனத்தில நீ வேலை செய்தாலும் உன்ர நலனிலை குறியா இரு. நிறுவனத்துக்கு ஏதாவது எண்டா உன்னை தூக்கி வெளியில போடும். உனக்காக யோசிக்க மாட்டினம். அதனால நீயும் எப்பவும் நிறுவனத்தின்ர நலனுக்கு முன்னம் உன்ர நலனை பாக்கவேணும்"

இறுதியாக அவர் சொன்ன அந்த வார்த்தைகளில் எத்தனை உண்மைகள் அடங்கியிருக்கின்றன என்பதை எனது அடுத்தடுத்த வேலைத் தளங்களில் கண்கூடாக பார்த்திருக்கின்றேன்.

கடைசி நாள் மிகவும் கவலையான நாளாக அமைந்தது. ஒவ்வொன்றையும் செய்யும் போதும் இதுவே இறுதி தடவையென்ற எண்ணம் வந்து கொண்டேயிருந்தது. எனது பொருட்களை எடுத்து பையில் போடும் போது கால்கள் நடுங்கியன. வெளியேறும் போது தூரத்திலிருந்து சிறிது நேரம் எனது நிறுவனத்தை பார்த்துக் கொண்டேயிருந்தேன். அது ஒரு சிறிய கிராமம் என்பதால் அங்கே பஸ் ஓடுவதில்லை. ஒவ்வொரு நாளும் புகையிரத நிலையத்திலிருந்து 20 நிமிடங்கள் நடந்தே வேலைக்கு சென்றிருக்கின்றேன். கடைசியாக ஒரு முறை நடக்கின்றேன் என்பதை நினைக்கும் போதே மனம் கனத்தது.

(இன்னும் வளரும்...)

## ஒரு முறை படி...
## ஒரு கணம் வடி...

இன்னும் அமைதியில்லை
எங்கள் இறந்துபோன மனங்களில்
இறந்தும் அழுகின்ற
குரல் கேட்கும் எங்கள்
உயிரிருக்கும் பிணங்களில்!

இது எதற்கான ஏற்பாடு
சமாதானத்தில் கூட
சாவின் சத்தம் கேட்கிறது.
ஒரு கூட்டு கிளியின்
ஒற்றை சிறகுபோன பின்
குதிக்க கற்றுத்தரும்
புதிய பாடமா?

ஒரு முறையாவது
ஒத்திகை பாருங்கள்
சிறுபான்மையினத்தின்
மேலிட்ட சிகப்பு ரத்தத்தை
பூமியில் சில துளிமட்டும்
புன்னகை சுமக்கிறது
மிச்சமில்லாமல் பூகம்பத்தை
சுமக்கிறது!


தாயின் இதயம்
பிள்ளை என்றால்
கம்பிகளை எண்ணிக்கொண்டு
காணாமல் இருக்கும்
இதயத்தை பிரிந்து
எப்படி உயிர்வாழ முடியும்!

இரும்பு கையிலிருப்பதால்
எதற்கும் அச்சமென்றில்லை
இமை பறிக்கும்
மின்னலில் எங்கள்
இரஞ்சல் இருக்கும்!

புல் கீரை போல் பொறுத்து
பொறுத்து பூமிக்குள்
போனதுதான் மிச்சம்!
கடலில் கூட கப்பல்
ஓட்டுவதென்றால் அலைகளை
கண்டு அஞ்சத்தேவையில்லை
எம்மை சுற்றி அழிக்கும்
வலைகளே வாய்திறந்திருக்கு!

காலத்தின் கையிலிருந்து
விலகிவிட்டோம்
விரல் நுனியிலிருந்து விழியும்
வெண்ணீர் போல் சொட்டு
சொட்டாய் வடிகின்ற
கனவுகளையாவது
காண விடுங்கள்!

நாங்கள் இலவம் பஞ்சுக்காக
ஏங்கிய காலம் போய்விட்டது
இனியாவது முகிலைப் பிடிக்க
முற்படுகின்றோமே!



ஜெ. சுஜீலவன்



# ஊகங்கள் உண்மையாகுமா?

2018 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான தகுதிச் சுற்றில் வெனிசுலாவுக்கு எதிரான ஆட்டத்தில் இருந்து மெஸி விலகியமை குறித்து தற்போது ஆர்ஜென்ரீனாவின் பத்திரிகை ஒன்று சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. மெஸி தனது விலகலுக்கு காயமே காரணம் எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனாலும் அவரது காயம் ஆட்டம் ஒன்றில் இருந்து விலகும் அளவுக்கு இல்லை எனவும் அதற்கு ஆதாரமாக மெஸி அண்மையில் "எனது காயம் மிகவும் சிறியதே. எனவே ரசிகர்களே அச்சம் வேண்டாம்" என முகநூலில் பதிவிட்டமையையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இம்முறை நடைபெற்ற கோபா அமெரிக்கா இறுதிப் போட்டியின் தோல்விக்குப் பின்னர் பன்னாட்டு உதை பந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக மெஸி அறிவித்திருந்தார். அதன்பின்னர் சில வாரங்களுக்கு முன்னர் மனம்மாறி ஆர்ஜென்ரீனாவுக்காக மீண்டும் விளையாடு வதற்கு முடிவு செய்திருந்தார். அவரது மீள்வருகையால் உருகுவே உடனான தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா வெற்றியும் பெற்றிருந்தது. ஆனாலும் வெனிசுலா உடனான அடுத்த போட்டியிலிருந்து காயம் காரணமாக விலகுவதாக அறிவித்திருந்தார். இந்தச் சர்ச்சையின் உண்மைத்தன்மை மெஸிக்கு மட்டுமே வெளிச்சம் என்றாலும் அதே காலப்பகுதியில் பார்ஸிலோனா அணிக்காகவும் அவர் விளையாடி இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ரசிகர்களும் ஊடகங்களும் மெஸி, பார்ஸிலோனா அணிக்காக என்றால் சிறப்பாக விளையாடுவார் சொந்த நாட்டுக்காக அவ்வாறு திறமையாக ஆட மாட்டார் என்று அவர் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களினாலேயே அவர் ஓய்வு முடிவை அறிவிக்க வேண்டி வந்தது. அதேபோல தற்போதும் மெஸியின் ஒவ்வொரு செயலையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது அவரை மீளவும் மனஉளைச்சலுக்கு ஆளாக்கும் முயற்சியாகவே தோன்றுகிறது.




தொகுப்பு: சி. விமலன்

# இசையால் வசமானவர்கள்

தொழில்முறை விளையாட்டு வீரர்களாக பெரும்பாலான சர்வதேச விளையாட்டு வீரர்கள் விளங்கினாலும் அவர்களிடம் விளையாட்டுத் தவிர ஏனைய சில திறமைகளும் இருக்கவே செய்கின்றன. இதனை சில தினங்களுக்கு முன்பு ஓய்வுபெற்ற டில்ஷான் அவரது மனைவி மஞ்சுளா திலினி யுடன் பாடிய பாடல் அடங்கிய காணொளி இணையத்தில் ரசிகர்களைக் கவர்ந்துள்ளமை மூலம் தெரியவருகின்றது.

சில வீரர்கள் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றதுடன் அதே விளையாட்டிலேயே பயிற்சியாளராகவோ அல்லது வர்ணனையாளராகவோ கடமைபுரிவர். சிலர் அதிலிருந்து விலகி சம்பந்தமில்லாத விளையாட்டில் ஈடுபடுவதுமுண்டு. இங்கிலாந்தின் முன்னாள் வீரர் அன்ட்ரு பிளின்ரொப் தற்போது குத்துச் சண்டை வீரராகக் களமிறங்கி உள்ளமை இதற்குச் சிறந்த உதாரணம்.

வீரர்களுக்கு மனதை ஒருமுகப்படுத்துவதற்கு தற்பொழுது யோகா போன்ற கலைகள் கற்றுக் கொடுக்கப்பட்டாலும் இசையும் மனதை ஒருமுகப்படுத்துவதற்குச் சிறந்த தொரு அம்சமாகவே கருதப்படுகின்றது. போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவும் ஓய்வு நேரங்களிலும் வீரர்கள் மன இறுக்கங்களில் இருந்தும்



நெருக்கடிகளில் இருந்தும் விடுவிப்பதற்கு இசை உதவுகின்றது. அந்த வகையில் இந்தச் சிறிய பத்தி கிரிக்கெட் வீரர்களின் இசைத் துறை ஈடுபாட்டைப் பட்டியல் படுத்த முனைகிறது.

கிரிக்கெட்டில் ஆடல், பாடல் என்றாலே முதலில் நினைவுக்கு வருவது மேற்கிந்தியத் தீவுகள் அணி தான். அதற்கு அவர்களது கலாசாரம் அடிப்படைக் காரணம் எனலாம். அவ்வணியைச் சேர்ந்த டுவைன் பிராவோ பாடிய சம்பியன் பாடல் தனி அல்பமாக வெளிவந்து பிரபலமானது. 2016 ஐபில் போட்டியின் ஆரம்ப நிகழ்விலும் அவர் அந்தப் பாடலைப்பாடி ஆடியிருந்தார். அத்தோடு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடியதால் உலா என்ற தமிழ்ப் படத்திலும் "ஏன்டா" என்ற பாடலை கானா பாலா மற்றும் நவீன் மாதவ் உடன் சேர்ந்து பாடியுள்ளார்.

பிரட் லீ விளையாடும் பொழுதே ஓய்வு நேரங்களில் அவுஸ்ரேலியாவில் உள்ள சிக்ஸ் அண்ட் அவுட் இசைக் குழுவில் பேஸ் கிற்றார் வாசித்து வந்ததுடன் தற்போதும் அதனைத் தொடர்ந்து வருகின்றார். இம்முறை ஐபிஎல் போட்டிகளில் ஓய்வு நாள் ஒன்றில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி வீரர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில் ஏற்கனவே கிற்றார் வாசிப்பதில் கைதேர்ந்த ஷேன் வற்சன் கிற்றார் வாசிக்க அவருடன் இணைந்து டிவிலியர்ஸின் மனைவி பாட்டுப் பாடிய புகைப் படமும் வெளிவந்திருந்தது.

இந்தியாவில் இம்முறை முதன் முறையாக நடைபெற்ற 5 பேர் கொண்ட புட்சல் உதை பந்தாட்டப் போட்டிகளின் தூதராக விராட்கோலி நியமிக்கப்பட்டிருந்தார். புதுப்புதுக் குரல்களை அறிமுகப்படுத்தும் ஏ.ஆர்.ரஹ்மான் புட்சல் கீதத்தை கோலியை வைத்தே பாடுவித்து அவரையும் ஒரு பாடகராக்கி உள்ளார்.

சச்சின் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதைக் கௌரவிக்கும் முகமாக இந்தியா ருடே பத்திரிகை மும்பையில் நடத்திய "சலாம் சச்சின்" நிகழ்ச்சியில் ஏற்கனவே சுமாராகப் பாடும் திறமையுள்ள சுரேஸ் றெய்னா சச்சினுக்குப் பிடித்த கிஷோர் குமாரின் லெஹ்ரோன் கேதாரா என்ற ஹிந்திப் பாடலைப் பாடியிருந்தார்.

விஜய் தொலைக் காட்சியில் ஒளிபரப்பான சுப்பர் சிங்கர் நிகழ்ச்சி ஒன்றில் ஏ.ஆர்.ரஹ்மான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட போது சச்சின் வீடியோ மூலம் வாழ்த்துத் தெரிவித்ததோடு தான் கையெழுத்திட்ட துடுப்பொன்றையும் இசையின் ரசிகராக ஏ.ஆர்.ரஹ்மானுக்கு பரிசாகக் கொடுத்திருந்தமையும் நினைவுக்கு வருகின்றது.



# அதிருப்தியின் குரல்

இம்முறை நடைபெற்று முடிந்த அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டிகளில் மழையால் ஆட்டம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக நியூயோர்க்கில் உள்ள ஆதர் ஆஷ் விளையாட்டு அரங்கிற்கு முதன்முறையாகக் கூரை பொருத்தப்பட்டிருந்தமை சிறப்பம்சம் எனலாம். அந்தவகையில் இவ்வரங்கில் நடந்த முதற்போட்டியாக ஸ்பெயினின் நடாலும் - இத்தாலியின் அன்ட்றியஸ் சிப்பியும் இரண்டாவது சுற்றில் விளையாடிய போட்டி பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம் இரண்டாவது சுற்றில் இங்கிலாந்து வீரர் அண்டி முரே - ஸ்பெயினின் மார்ஷல் கிறனோலர்ஸ் உடன் விளையாடிய போட்டியும் மழைகாரணமாக இந்த அரங்கிலேயே நடைபெற்றிருந்தது. அந்தப் போட்டியில் அண்டி முரே வெற்றி பெற்றாலும் கூரை பொருத்தப்பட்டது தொடர்பாக அவர் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

"போட்டி நடைபெறும் போது மழை பெய்ததால் கூரையின் மேல் விழும் கனமழை அதிக சத்தத்தை எழுப்பியது ஒருபுறம் தொந்தரவைத் தந்தது என்றால் இன்னொருபுறம் அந்தச் சத்தத்தினால் எதிரணி வீரர் அடிக்கும் பந்தைச் சரியாகக் கணித்து ஆடுவதில் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உண்மையில் இந்தப் போட்டியைக் கடும் பிரயத்தனத்திற்கு மத்தியிலேயே வென்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

எனவே இம்முறை முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட கூரை விடயம் பெரும்பிரச்சனை என்றாலும் எதிர்காலத்தில் வீரர்களின் நன்மை கருதி அதை மேலும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அண்டி முரேயின் கருத்து உணர்த்தி நிற்கிறது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 17.09.2016 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.